


இனிய
பிறந்தநாள்
வாழ்த்துகள்
மாமா!


இனிய பிறந்தநாள்
வாழ்த்துகள் மாமா!
வி.வித்தியா

எழுத்தின் விடிவெள்ளி



பிறந்தாய் எ.பு.த்தின் விடியலாய் நீ
பூமியின் வரலாற்றில் புதிதாய் நின்றாய்!

உரிமைக்காய் உயர்ந்த உணர்த் தலைவா
உலகமே வியந்த வீரத்தின் வடிவம் நீ!

புயலென எழுந்து புரட்சி செய்தாய்
புயலையும் வெல்லும் துணிவைத் தந்தாய்!
அச்சா நெஞ்சமும் ஆளுமைத் திறனும்
அகிலம் போற்றும் அடையாளம் ஆனாய்!

மண்ணின் மானம் காத்திடவே
மலையென நிமிர்ந்து நின்றாயே!
தலைமுறை தாண்டியும் உன் பெயர் சொல்லும்
தமிழ் வாழும் வரை வரலாறாகும் வாழும்!

தினஸ்தான் - கிரிதரன்
நாவலர் தமிழ்ப் பாடசாலை
(NEW YORK)



வீரத் தலைமையின் வரலாறே!

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்தநாள் கவிதை

நவம்பர் 26 - பிறந்தநாள் நினைவுக் கவிதை

மண்ணுக்குள் புதைத்திடவிலை உன் கனவுகள், மக்களின் நெஞ்சுக்குள் வாழ்கின்றன உன் நினைவுகள்! அடிமைத் துயரத்தில் அழுத ஒரு இனத்தின் குரலாய், அடையாளம் தேடிய மக்களின் ஏராளாய்!

சிறுவயதில் உதித்தது சுதந்திர வேட்கை, சிந்தையில் வளர்த்தது இனத்தின் விடுதலைத் தேடல்! தனியொரு மனிதனாய் தொடங்கிய உன் பயணம், தலைமுறைகள் பேசிடும் வரலாற்றின் அத்தியாயம்!

தலைமை என்றால் என்னவென்று காட்டியவரே, தன்னம்பிக்கையால் ஒரு படையை உழிதட்டியவரே! உன்னை சுற்றி வந்தவர்களின் நெஞ்சங்களில், உறுதியும் அர்ப்பணிப்பும் நிறைந்த தலைவரே!

உன் வழியில் இணைந்தவர் ஆயிரம் இளைஞர்கள், உரிமைக்காக எழுந்தவர் எண்ணற்ற வீரர்கள்! மண்ணின் விடுதலை என்ற உயரிய இலட்சியத்தில், மரணத்தையும் பொருட்படுத்தா மாவீரர்களின் தியாகத்தில்!

களமுனையில் நின்றவர்களின் வீர வரலாறு, காலங்கள் கடந்தாலும் அழியாத நினைவுக் கோபுரம்! உன் தலைமையில் புயணித்த அந்தப் போராளிகளின், உறுதியும் அர்ப்பணிப்பும் வரலாற்றின் சாட்சிகளே!

சூழ்ச்சியும் என்ற எல்லையையும் கடந்து நின்று, கொள்கை என்ற பாதையில் புயணித்த உன் உறவுகள்! மனைவியும் பிள்ளைகளும் வாழ்வின் சுகமைகளைச் சுமந்து, போராட்ட வாழ்வின் சுக்கங்களிலும் இடம்பிடித்தனர்!

தலைமைத்துவம், திட்டமிடல், நிர்வாக ஆற்றல், தளராத மனவுறுதி, தீர்க்கமான சிந்தனைத் திறன்! இவை அனைத்தும் இணைந்த உன் வாழ்க்கைப் புயணம், வரலாற்றில் வியாதிக்கப்படும் ஓர் அத்தியாயம்!

எத்தனை இழப்புகள், எத்தனை துயரங்கள், எத்தனை பிரிவுகள், எத்தனை கண்ணீர்த் துளிகள்! ஒரு இனத்தின் வரலாற்றில் பதிந்த வலிகளும், ஒருபோதும் மறக்க முடியாத நினைவுகளும்!

இன்று உன் பிறந்தநாள் எழும் நினைவுகளில், கடந்த காலப் புயணத்தை எண்ணிப் பார்க்கின்றோம்! உன்னோடு புயணித்தோரின் தியாகங்களையும், உயிர்நீத்த மாவீரர்களின் நினைவுகளையும் பொற்றுகின்றோம்!



தலைவர் எப்போர் ஒரு பெயரல்ல, ஒரு காலத்தின் வரலாற்றுப் பதிவாகவும்! தலைமை என்பது ஒரு புதலியல்ல, தலைமுறைகள் விரும்பும் பொறுப்பாகவும்!

பிறந்தநாள் வாழ்த்துகள் தலைவரே! வரலாற்றின் புக்கங்களில் உன் புயணம் தொடரட்டும்! மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் வாழ்ந்தவர்களின் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில் நிலைக்கட்டும்!

சண்முகதாஸ் பிரபாகர்



Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதம அமைச்சரின் அலுவலகம்

ETS Annex of the Americas, Suite 2209 www.tgtc.org
New York, NY 10001, USA pmo@tgtc.org

11-22-2026

ஒன்றுபட்ட தமிழ்த் தேசியமே தமிழீழத் தேசியத் தலைவருக்கு நாம் வழங்கக்கூடிய பெருமரியாதை!

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 72ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, எனது உள்ளம் கனிந்த பிறந்தநாள் வாழ்த்துகளையும், மரியாதையையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இது வெறுமனே ஒரு பிறந்தநாள் நினைவுகூரல் அல்ல. நமது கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்க்கவும், நிகழ்காலத்தை நேர்மையாக மதிப்பிடவும், எதிர்காலத்திற்கான பொறுப்புகளை உணர்ந்து செயல்படவும் வேண்டிய தேவையை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான தருணமாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், சுதந்திரமும் இறையாண்மையும் கொண்ட தமிழீழ அரசை நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்தில் அசைக்க முடியாத உறுதியையும், தெளிவான தொலைநோக்குப் பார்வையையும், முழுமையான அர்ப்பணிப்பையும் கொண்டிருந்தார்.

தாம் கொண்ட இலட்சியத்திலிருந்து எத்தகைய சூழ்நிலையிலும் பின்வாங்காத மனவுறுதியே அவரது தலைமையின் தனித்துவமாக அமைந்தது.

அவரது தலைமையின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய முப்படை அமைப்புகளையும் கொண்ட ஓர் தேசிய விடுதலை இயக்கமாக வளர்ச்சியடைந்தது. இது உலக விடுதலை இயக்கங்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும்.

தமிழர் வரலாற்றில் பேரரசன் இராஜராஜ சோழன் கடல்சார் வல்லமையின் முக்கிய அடையாளமாக விளங்குகின்றான். அந்த வரலாற்றுப் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில், நவீன காலத்தில் தமிழர்களின் கடல்சார் ஆற்றலை மீண்டும் உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தவராகத் தேசியத் தலைவர் அவர்கள் விளங்குகிறார்.

இதேபோல, 1648ஆம் ஆண்டின் வெஸ்ட்பாலியா அமைதி உடன்படிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்படும் நவீன இறையாண்மை அரசமைப்பின் பின்னணியில், தமிழீழத்தில் உருவாக்கப்பட்ட நடைமுறை அரசு (னுந கயஉவழ ளுவயவந) தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றது.

நிர்வாகம், நீதித்துறை, காவல்துறை உள்ளிட்ட நிறுவனங்களைக் கொண்ட அந்தக் கட்டமைப்பு, தமிழீழ அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அனுபவமாக அமைந்தது.



ஒன்றுபட்ட தமிழ்த் தேசியமே தமிழீழத் தேசியத் தலைவருக்கு நாம் வழங்கக்கூடிய பெருமரியாதை!

11-22-2026

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 72ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, எனது உள்ளம் கனிந்த பிறந்தநாள் வாழ்த்துகளையும், மரியாதையையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இது வெறுமனே ஒரு பிறந்தநாள் நினைவுகூரல் அல்ல. நமது கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்க்கவும், நிகழ்காலத்தை நேர்மையாக மதிப்பிடவும், எதிர்காலத்திற்கான பொறுப்புகளை உணர்ந்து செயல்படவும் வேண்டிய தேவையை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான தருணமாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், சுதந்திரமும் இறையாண்மையும் கொண்ட தமிழீழ அரசை நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்தில் அசைக்க முடியாத உறுதியையும், தெளிவான தொலைநோக்குப் பார்வையையும், முழுமையான அர்ப்பணிப்பையும் கொண்டிருந்தார்.

தாம் கொண்ட இலட்சியத்திலிருந்து எத்தகைய சூழ்நிலையிலும் பின்வாங்காத மனவுறுதியே அவரது தலைமையின் தனித்துவமாக அமைந்தது.

அவரது தலைமையின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய முப்படை அமைப்புகளையும் கொண்ட ஓர் தேசிய விடுதலை இயக்கமாக வளர்ச்சியடைந்தது. இது உலக விடுதலை இயக்கங்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும்.

தமிழர் வரலாற்றில் பேரரசன் இராஜராஜ சோழன் கடல்சார் வல்லமையின் முக்கிய அடையாளமாக விளங்குகின்றான். அந்த வரலாற்றுப் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில், நவீன காலத்தில் தமிழர்களின் கடல்சார் ஆற்றலை மீண்டும் உலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தவராகத் தேசியத் தலைவர் அவர்கள் விளங்குகிறார்.

இதேபோல, 1648ஆம் ஆண்டின் வெஸ்ட்பாலியா அமைதி உடன்படிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்படும் நவீன இறையாண்மை அரசமைப்பின் பின்னணியில், தமிழீழத்தில் உருவாக்கப்பட்ட நடைமுறை அரசு (னுந கயஉவழ ளுவயவந) தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றது.

நிர்வாகம், நீதித்துறை, காவல்துறை உள்ளிட்ட நிறுவனங்களைக் கொண்ட அந்தக் கட்டமைப்பு, தமிழீழ அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அனுபவமாக அமைந்தது.

தலைவரின் கட்டுப்பாடும், ஒழுக்கமும், இலட்சியத் தெளிவும் கொண்ட தலைமையின் கீழ் ஈழத்தமிழ் மக்கள் வரு தேசமாக ஒருங்கிணைந்திருந்தனர்.

ஆனால் கடந்த 17 ஆண்டுகளில், ஒருங்கிணைந்த தலைமைத்துவம் அற்ற நிலை தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாடுகளில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

நமக்கிடையே கருத்து வேறுபாடுகள் உருவாகியுள்ளன. அமைப்புகளுக்கிடையிலான போட்டிகளும், தனிநபர் முரண்பாடுகளும், பரஸ்பர அவநம்பிக்கையும் நமது கூட்டுச் செயற்பாட்டைப் பலவீனப்படுத்தியுள்ளன.

நாம் நம்மிடையே போட்டியிட்டுக் கொண்டிருக்கும்போது, நமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்கின்றன. இந்த உண்மையை நாம் நேர்மையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒற்றுமை என்பது அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருப்பது அல்ல. கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால், பொதுவான நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து செயல்படுவதுதான் உண்மையான ஒற்றுமை. மாறுபட்ட கருத்துகள் இருப்பினும் மாறுபட்டிருப்பதற்கான உரித்தை ஏற்றுக் கொண்டு இலட்சியநழியில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டியது காலத்தேவையாகும்.

இந்த 72ஆவது பிறந்தநாளில் நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான உறுதிமொழி ஒன்றே:

பிளவுபட்ட தமிழ்த்தேசியச் செயற்பாடுகளை ஒன்றிணைத்து, ஜனநாயகப் பண்புகளையும் பரஸ்பர மரியாதையையும் அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியத் தளத்தை உருவாக்குவோம்.

தனிநபர்களை விடத் தமிழினத்தின் நலன் உயர்ந்தது. அமைப்புகளை விட மக்களின் எதிர்காலம் முக்கியமானது. பதவிகளை விடப் பொறுப்புணர்வு மேலானது.

கடந்தகால முரண்பாடுகளைத் தாண்டி, நமது மக்களின் உரிமைகள், பாதுகாப்பு, கண்ணியம், அரசியல் எதிர்காலம் ஆகியவற்றிற்காக அமைதியான, ஜனநாயக வழிமுறைகளில் இணைந்து செயல்படுவோம்.

தமிழ்த் தேசியம் என்பது அரசியல் உரிமைகள் பற்றிப் பேசுவது மட்டுமல்ல. அது நமது மக்களின் வாழ்வாதாரம், மனிதநேயம், சமூகநீதி, சுற்றுச் சூழல் அக்கறை, கண்ணியம்ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

போரினால் கணவர்களை இழந்த பெண்கள், உடல் உறுப்புகளையும் உடல்நலத்தையும் இழந்த முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற குடும்பங்கள், கல்வி வாய்ப்புகளை இழந்த பிள்ளைகள் ஆகியோரின் நலனில் நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள், மருத்துவ மற்றும் உளவியல் ஆதரவு, கல்வி, தொழிற்பயிற்சி, பொருளாதாரத் தற்சார்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் நிரந்தரமான, வெளிப்படைத்தன்மையுள்ள சமூகநல நிறுவனங்களை உருவாக்க வேண்டும்.

நினைவுகூரல் என்பது வார்த்தைகளில் மட்டும் முடிந்துவிடக் கூடாது. அது மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயலாக மாற வேண்டும்.

எனவே, இந்தப் பிறந்தநாளில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கான நிலையான நிறுவனங்களை உருவாக்குவதற்கும் நாம் உறுதிபூணுவோம்.

அன்பான தமிழ் மக்களே!

வரலாற்றை நினைவுகூர்வது முக்கியம். ஆனால் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு எதிர்காலத்தை உருவாக்குவது அதைவிட முக்கியமானது.

இன்று நமக்குத் தேவையானது வெறும் உணர்ச்சியல்ல் தொலைநோக்குப் பார்வை வெறும் வார்த்தைகளல்ல் ஆக்கபூர்வமான செயல்பாடு. வெறும் நினைவுகூரலல்ல் மக்களுக்கான பொறுப்புணர்வு.

பிளவுகளைக் கடப்போம்! பகைமைகளை மறப்போம்! கருத்து வேறுபாடுகளை மதிப்போம்! பொதுநலனுக்காக ஒன்றிணைவோம்!

நமது ஒற்றுமை மக்களின் நம்பிக்கையாகட்டும். நமது செயற்பாடு பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வாகட்டும்.

நமது அரசியல் பயணம் நீதி, சமத்துவம், ஜனநாயகம், மனித கண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையட்டும்.

ஒன்றுபட்ட தமிழ்த் தேசியம் நமது உறுதிமொழியாகட்டும்!

மக்களின் நல்வாழ்வு நமது முதன்மைக் கடமையாகட்டும்!

ஒற்றுமையால் நம்பிக்கை பிறக்கட்டும்!

நம்பிக்கையால் புதிய பாதை திறக்கட்டும்!

நமது செயல்களால் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் சிறக்கட்டும்!

நன்றி
தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர் - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்



தமிழினத்தின் அடையாளம்



தமிழினத்தின் அடையாளம்!

“பிரபாகரன்” எனும் பெயர் வெறும் பெயரல்ல. அது தமிழினத்தின் அடையாளம்! தமிழர்கள் மீதும் தாயக மண்ணின் மீதும் சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்திருந்த அடக்குமுறைகள் - அட்டுழியங்கள் என்பன சொல்லிலடங்காதவை. ஸ்ரீலங்கா என்ற நாட்டுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட நாள் முதல் ஈழத்தமிழர்களை கண்டு அஞ்சிய சிங்கள பேரினவாதம் தன்னுடைய அடக்குமுறையை ஈழத்தமிழர்கள் மீது ஏவத்தொடங்கியது. அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. ஈழத்தமிழர்கள் என்பவர்கள் இந்த நாட்டின் சொந்த குடிமக்கள். ஆண்டாண்டுகாலமாக அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், சிங்களவர்களின் வரலாறு அப்படியானதொன்றல்ல. அதனைவிட ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த காலத்தில் ஈழத் தமிழர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் கோலோச்சிக் கொண்டிருந்தார்கள். இவற்றை பொறுத்துக் கொள்ளமுடியாத சிங்கள பேரினவாதம் ஈழத்தமிழர்களை கண்டு அஞ்சியது. அதன் வெளிப்பாடாகவே ஈழத்தமிழரை ஏதோவொரு வகையில் அழித்துவிட வேண்டுமென எண்ணி தமிழருக்கு எதிரான அடக்குமுறைகளை மெல்ல மெல்ல ஆரம்பித்தது. 1947 இற்கு பின்னரான தமிழரின் வரலாறு என்பது இரத்தக்கறைகளால் எழுதப்பட்டவை. சிங்கள இராணுவம் தமிழர் தேசத்தில் செய்த அட்டுழியங்களை, அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொள்ளமுடியாது என சீற்றம் கொண்டு எழுந்த வீரனே தமிழினத்தின் தேசிய தலைவன் பிரபாகரன். தமிழினத்தின் மேல் கொண்ட தீரா அன்பினால், தமிழ் மண்ணின் மீதான பற்றினால், பழந்தமிழர் வீர மரபின் தொடர்ச்சியாக அறநெறியும், போர் வழியும் இணையும் இடத்தில் நின்று தனது மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்காக ஆயுதம் ஏந்தி போராட துணிந்த தலைவன் தான் பிரபாகரன்.

தன்னினத்தின் விடிவு தமிழீழம் பிறப்பதில்தான் இருக்கிறது என்கிற கொள்கையில் முழுமூச்சாக செயற்பட்ட ஒப்பற்ற தலைவர் பிரபாகரன். ஒரு இனத்தை இன்னொரு இனம் ஒடுக்குமானால் அந்தக் கட்டமைப்பின் மீது ஒடுக்கப்பட்ட இனம் சீற்றம் கொள்வது இயல்பு. அந்த சீற்றத்தை ஒருமுகப்படுத்தும் வடிவமாக ஒரு தலைவன் உதித்தெழுவான் என்பதே உலகப் போராட்ட வரலாறுகளின் விதியாகும். அந்த விதிக்கு உண்மையான சொந்தக்காரனாக பிறப்பெடுத்தவர் தான் தமிழீழ தேசிய தலைவர். தமிழினத்தின் நிலம் மீட்கவும் தமிழினத்தின் விடுதலைக்காகவும் சமர் புரிந்த மாவீரர்களை வழிநடத்தி, பெரும் ஆயுத பலம் கொண்ட சிங்கள ராணுவத்தை விரட்டிய வெற்றி நாயகன் அவர். காலாகாலமாக தமிழர்கள் வாழ்ந்த மண்ணில் உரிமையுடனும், நிம்மதியுடனும் அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக ஆயுதம் ஏந்தியவர் தேசிய தலைவர். “யாருடைய பெயரைக் கேட்டால் இனத்தின் எதிரி அஞ்சி நடுங்குகிறானோ அவனே தலைவன” என்பதற்கு அமைய வீரத்தின் தலைமகனாக வாழ்ந்தவர் தேசியத்தலைவர். நிறைய மானம், நிறைய வீரம், நிறையத் துணிவு, பணிவு, தெளிவு, கருணை, அன்பு, அறிவு, ஆற்றல், அடக்கம், பண்பு, மாண்பு, ஈகம், கனவு, ஒழுக்கம் - இவை எல்லாவற்றையும் வைத்து ஒரு மனிதனைப் இறைவன் படைப்பானாக இருந்தால் அவர் தான் தேசிய தலைவர். உலகின் பண்பாளர்கள் மதிக்கும் நற்பண்புகளை கொண்ட தன்னாட்சி பிரதேசத்தை கட்டியெழுப்பிய மகத்தான தலைவன் என்பதுடன் - கல்வி, விவசாயம், தொழில்நுட்பம் என அனைத்து துறைகளிலும் தமிழர் தாயகத்தை ஏனைய நாடுகளுக்கு குறிப்பாக சிங்கள தேசத்துக்கு சவால் விடும் வகையில் வளர்த்தெடுத்த மிகப்பெரிய அறிவுஜீவி அவர்.

தமிழர்களும் தமிழ் மண்ணும் எவருக்கும் அடிபணியக்கூடாது என்பதை தன்னுடைய வாழ்க்கை மூலம் வாழ்ந்து காட்டிய மகத்தான ஒரு தலைவர் அவர். “எதிரிக்கு எதிரி நண்பனுக்கு நண்பன்” என்ற வீரனுக்கே உரித்தான பண்புடன் ஸ்ரீலங்காவையும் சர்வதேசத்தையும் கையாண்ட அவருடைய பண்பு உலகில் வாழ்ந்த உன்னதமான வீரத் தலைவர்களின் பட்டியலில் அவரையும் இணைத்திருக்கிறது. சர்வதேச சமூகமே வியக்கும் அளவுக்கு அவருடைய தலைமைத்துவ பண்பு தமிழர்களுக்கு உலகமெங்கும் ஒரு மரியாதையை ஏற்படுத்தி கொடுத்தது என்றால் மிகையாகாது. இன்று உலகமெங்கும் தமிழர்கள் நிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்கு பின்னால் இருக்கும் நாமம் தேசிய தலைவர் “பிரபாகரன்” என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதுவே நிதர்சனமாகும்.

இன்று உலகில் வாழ்கின்ற இனங்கள் தங்களுடைய தலைவர்கள் என்று பலரை மகுடம் சூட்டி வாழ்ந்துகொண்டிருந்தாலும், ஈழத்தமிழர்களும் உலகெங்கும் வாழும் தமிழர்களும் தங்கள் நெஞ்சை நிமிர்த்தி “எங்கள் தலைவன்” என்று கூறும் ஒரே ஒரு தலைவராக இருப்பது தேசிய தலைவர் மாத்திரமே. காரணம், தலைவன் என்று கூறுவதற்கு உரிய அனைத்து பண்புகளையும் கொண்டவராகவும் அந்த பண்புகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவராகவும் தமிழர்களுக்கு தெரிந்த ஒருவர் என்றால் அது தேசியத் தலைவர் மாத்திரமே. அந்த அடிப்படையில் அவரின் இலட்சியம் ஒரு நாள் வெல்லும். அவரின் உருவம் என்றும் தமிழினத்தின் இதயங்களை ஆழ்ந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் அவருடைய இலட்சிய கனவு மெய்ப்படும் வகையில் அவருடைய பாதையை தெரிவு செய்து பயணிக்கும் இலட்சக்கணக்கானவர்கள் அவருடைய விடுதலை தாகத்தை முன்னெடுத்து செல்லவேண்டுமென இந்த உன்னதமான நாளில் உறுதி பூணவேண்டுமென “ஈழமுரசு” அறை கூவல் விடுப்பதுடன், தமிழீழ தேசிய தலைவரின் 72 ஆவது அகவைக்கு இதயம் கனிந்த வாழ்த்தை தெரிவிப்பதில் “ஈழமுரசு” பெருமகிழ்ச்சி கொள்கிறது.

ஈழமுரசு



தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2026

1st Mortgage, HomeEquity Line of Credit,
2nd & 3rd Mortgages, Refinance &
Private Mortgage
And For All Other Mortgage Needs

Jey Rasathurai BBA (Hon), AMP
Team Leader/Mortgage Broker
416-624-4843
New Office Address:
305 Milner Ave, 3rd Floor Unit #301
Toronto ON M1B 3V4



MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
MORTGAGE CLINIC
www.mortgageclinic.ca

வியாழன் தோறும் CANADA EELAMURASU

ஈழமுரசு

SCAN ME

முரசு: 28 | நவம்பர் 25, 2026 | இதழ்: 474

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988

Realtors Wanted
FLEXIBLE SPLIT
OR FLAT FEE



UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090

தலைவர் மேதகு வே. பிரபாகரன் பிறந்தநாள் ஈழத்தமிழரின் தேசிய நாள்





QUICK & AFFORDABLE IMMIGRATION SERVICES
- PR APPLICATION
- FAMILY SPONSORSHIP
- STUDENT VISA
- WORK PERMITS
- SUPER VISA
- CAREGIVER VISA
- VISITOR VISA
- BUSINESS VISA

CALL NOW:416-902-8225



RAMACHANDRAN LAW
Professional Corporation



LONGO LAWYERS
Our Clients aren't just a file
Each are our life



SHENTHURAN SUBRAMANIAM
B.SC, M.B.A., J.D.
(PERSONAL INJURY LAWYER)
4960 YONGE STREET, SUITE 401
TORONTO, ON. M2N 6K1
www.longolawyers.ca
CELL: 647-992-2417 PHONE: 416-800-4232
FAX: 416-800-6247 TOLL FREE: 1-844-800-4232



- Residential Mortgage Financing
- Lenader Shopping & Structuring
- Mortgage Pre-Approvals
- Refinancing & Equity Access
- Investment Property Financing
- Renewal & Retention Strategy



Branavan Kailasakiri
Mortgage Agent Level 1
647-407-2312
FIDES
branavan@fidesmortgages.ca







RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

வீடு வாங்க, விற்க அல்லது
அது சம்பந்தமான விடயங்கள் அறிய
இலவச ஆலோசனைகளுக்கு உங்கள் நண்பன்
ஆனந் தர்மலிங்கம்

Office: 416.287.2222
1265 Morningside Ave. #203
Toronto, ON. M1B 3V9



Ananth
Tharmalingam
Sales Representative
416.939.9525

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

















தலைவரின் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் நோக்கத்தில் 1984 - 2009ம் ஆண்டுவரை திரைமறைவில் (**Shadow fleet**) கடலூடாக நிகழ்ந்த சம்பவங்களின் தொகுப்பு கப்டன் விஜய் (சின்னவர்) அவர்களால் எழுதப்பட்டு சித்திரை 4ம் திகதி 2026ல் ரொறன்ரோ, லண்டனில் வெளிவந்த சின்னவரின் நினைவுகளில்... என்ற தமிழ், ஆங்கில நூல்கள் இலவசமாக.

இந்த வாரம் மாவீரர்கள் வார சமர்ப்பணமாக INTERNATIONAL LIBRAR லுல் பதிவேற்றம் செய்யப்பட்டதை இதனால் தெரிவிக்கிறோம்

விபரம்

archive.org

ltte ship adventures

இலவசம் சின்னவரின் நினைவுகளில்.....

நூல் விபரம் ..... நூல் விபரம் (இதை அழுத்தால்)



தமிழீழ தேசிய தலைவரின் பயணத்தை முன்னெடுப்போம்

உலகத் தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கென விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்காக தனித்தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவி பற்றுறுதியோடு தமிழர் நாமென்ற தலை நிமிர்வுடன் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழ மக்களின் அடையாளமாகவும், தமிழர்களைத் தனிப் பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாகவும் விளங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் கொண்ட கொள்கையில் இறுக்கமான பற்றுறுதி கொண்டவர்களாய் தமிழீழ தேசத்தையும் அதன் விடுதலையையும் அதிகம் நேசித்தவர்கள். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு செயல் உருவம் கொடுத்தவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை பிரயோகிக்கவும் களமாடி, தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திர வேள்விக்கு தம் உயிர்களை வித்தாகி விருட்சமாய் மிளிர்பவர்கள் மாவீரர்கள்.அந்த மாவீரர்களின் தலைவனாகவும் உலகமெங்கும் வாழும் ஈழத்தமிழர்களின் பாதுகாவலனாக விளங்கிய-இன்றும் விளங்கிக்கொண்டிருக்கும் தமிழீழ தேசிய தலைவரின் அகவையை கொண்டாடுவதற்கு உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் தயாராகிவருகிறார்கள். 30 ஆண்டுகளுக்கு மேலாக தன்னுடைய மண்ணையும் மக்களையும் பாதுகாத்த காவலனாக தேசிய தலைவர் இன்றும் கோடிக்கணக்கான மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழீழ தேசிய தலைவரின் நிழலின் கீழ் 30 ஆண்டுகளாக தமிழினம் கௌரவமான இனமாகவும் எவருக்கும் அடிபணியாத இனமாகவும் சிறந்த கல்வியாளர்களாகவும் பண்பாளர்களாகவும் அனைத்து பண்புகளையும் கொண்ட ஒரு இனமாகவும் ஈழத்தமிழினம் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டத்தை உலகநாடுகள் சிலவற்றுடன் இணைந்து ஸ்ரீலங்காவின் அரசு முடக்கியிருந்தாலும் தேசிய தலைவனும் மண்ணின் மைந்தர்களான மாவீரர்களும் விட்டுச்சென்ற தாகம் ஈழமண்ணில் இன்றும் அழியாமலே இருக்கிறது. விடுதலை வேட்கையின் தீவிரம் சற்று ஓய்ந்திருந்தாலும், தேசிய தலைவரினதும் மாவீரர்களினதும் வழியை இன்றும் ஈழத்தமிழர்கள் பின்தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.2009 க்கு முன்னரான 30 வருடங்களாக சிங்கள தேசத்துக்கும் வல்லரசு நாடுகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் சிம்ம சொற்பனமாக திகழ்ந்ததற்கு ஈழத்தமிழினத்தின் ஒற்றுமையே மிகப்பெரும் ஆயுதமாக இருந்தது.அந்த ஒற்றுமையே தேசிய தலைவரின் விடுதலை வேட்கைக்கான போராட்டத்துக்கு ஆணிவேராகவும் அமைந்திருந்தது. அந்த ஒற்றுமை 2009 இற்கு பின்னர் சிதைந்துபோயிருக்கிறது.ஆனாலும் தமிழர் தாயக மக்களும் புலம்பெயர் மக்களும் தங்களுடைய தலைவன் விட்டுச்சென்ற பாதையை மறக்கவில்லை.அந்த பாதை வழி நடப்பதில் அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.ஆனால்,அந்த மக்களை வழிநடாத்துவதற்கு தான் ஒரு தலைவன் இல்லை.

ஆனாலும் தங்களுடைய தலைவனையும் மண்ணின் மைந்தர்களையும் நினைவுகூருவதில் தமிழர் தாயகம் எத்தனை தடைகள் வந்தாலும் மன உறுதியுடன் அதனை நிகழ்த்தி காட்டிவருகிறார்கள். அந்த அடிப்படையில் இந்த வருடமும் தமிழர் தாயகமெங்கும் பேரினவாதிகளால் சிதைக்கப்பட்டிருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்டு வருகிறது. ஆம், எமது மாவீரர்களை நினைவேந்துவதற்கும் அவர்களது தியாகங்களை உலகுக்கு பறைசாற்றுவதற்கும் உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் தாங்கள் வாழும் மண் பரப்பில் ஈடிணையற்ற தமிழினத்தின் மாவீரர்களை நினைவு கூருவதற்கு தங்களை தயார்படுத்திக்கொண்டு வருகிறார்கள். முள்ளிவாய்க்கால் அவலம் அரங்கேறிய 2009 இற்கு பின்னர் தமிழர் தாயகம் ஒரு மூடிய சிறைச்சாலைக்குள் இருந்தவாறே தங்களது உறவுகளையும் மாவீரர்களையும் நினைவு கூர்ந்து வந்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய சிங்கள இனவெறியர்கள் மாவீரர்களின் கல்லறைகளையும் நினைவிடங்களையும் சிதைத்தனர். "மாவீரர் துயிலும் இல்லங்கள்" இருந்த இடங்களை அழித்துவிட்டு அதில் இராணுவ முகாம்களை அமைத்தனர். ஆனாலும் ஈழத்தமிழர்கள் எத்தனை அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் வந்தாலும் ஒவ்வொரு வருடமும் தமிழீழ தேசிய தலைவரின் காலத்தில் இடம்பெற்றதற்கு ஒப்பாக தங்களது வரலாற்று கடமையை ஈழத்தமிழர்கள் நிறைவேற்றிவருகிறார்கள்.

எங்களது தமிழீழ தேசிய தலைவர் காட்டிய வழி எந்தக்காலத்திலும் திசைமாறாமல் இருக்கும் அவர் விட்டுச்சென்ற போராட்டம், விடுதலைச்சுடர், வீரம் - தாகம் என்பன இந்த பூமிப்பந்தில் தமிழினம் என்ற ஒரு இனம் இருக்கும்வரை உயிர்ப்புடனேயே இருக்கும் என்பதை உலகுக்கும் பேரினவாத சிங்கள அரசுகளுக்கும் இனவாதிகளுக்கும் ஈழத்தமிழர்கள் காட்டிக்கொண்டே வருகிறார்கள். அதன் அடிப்படையில் தான் இம்முறையும் தமிழர் தாயகமெங்கும் மாவீரர்களின் தியாகங்களை போற்றி அவர்களை நினைவுகூருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இந்த நாளை நாங்கள் கடந்துபோகும் ஒவ்வொரு விநாடியும் எமது மாவீரர்கள் சிந்திய இரத்தம் - அவர்களது தியாகங்கள் போன்ற வீர வரலாற்றை இந்த உலகுக்கும் எமது இளம் தலைமுறையினருக்கும் கடத்தவேண்டிய பாரிய பொறுப்பு ஈழத்தமிழர்களிடத்தில் இருக்கிறது.எங்களது வீரர்கள் செய்த தியாகங்கள் - வரலாற்று கடமைகள் தொடர்ந்தும் உயிர்ப்புடன் பரவியிருந்தால் மாத்திரமே மாவீரர்கள் கண்ட கனவு நனவாகும் நாளை எட்டமுடியும். அதற்கு இளம் தலைமுறையினர் எமது மாவீரர்களின் கனவுகளை சுமந்தவர்களாகவும் அறிந்தவர்களாகவும் கல்விச்சமூகமாக வளர்க்கப்படுவது அவசியமாகும். நடைமுறைக்கு சாத்தியமில்லாத விடயங்களுக்கு பின்னால் சென்று காலத்தை கடத்துவதை விடுத்து தமிழீழ தேசிய தலைவரும் மாவீரர்களும் கண்ட கனவு நனவாகும் சூழலை ஏற்படுத்துவதற்கான பயணத்தை இந்நாளிலிருந்தாவது தமிழ் தலைவர்களும் புலம்பெயர் செயற்பாட்டாளர்களும் இணைந்து ஆரம்பிப்பது காலத்தின் கட்டாயமாகும். ஈழம் - புலம் என்ற சொற்பதங்கள் ஒரு குடையின் கீழ் அணிதிரளும் காலம் மலரும் பொழுதுதான் எங்கள் மாவீரர்களது தியாகங்களுக்கு வலிமை கிடைக்கும்.வெறுமனே நினைவேந்தல்களுடன் மாத்திரம் ஒன்றுபடுவதை நிறுத்தாமல்,எமது தமிழீழ தேசியத்தலைவரும் மாவீரர்களும் விட்டுச்சென்றிருக்கும் கடமையை முன்கொண்டு செல்வதற்கும் நாம் ஒற்றுமைப்படுவது அவசியமாகும்.அதற்கான பயணத்தை இந்த புனித நாளிலேயே தொடங்குவதற்கு அணிதிரள்வோம்.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து



"இது எமது இனத்துக்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடாத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU

எம்முடனான தொடர்புகளுக்கு:
+1 (437) 254-9588

உங்கள் விளம்பரத்தை 3x2 அளவில் ஈழமுரசு பத்திரிகையிலும் ஈழ முரசு இணையத்தளத்திலும் மற்றும் உலகத்தமிழர் வானொலி இணையத்தளத்திலும் பிரசுரிப்பதற்கு வாரம் 15 டொலர்கள் மட்டுமே.



நன்றி
தொடர்புகளுக்கு
+1 (437) 254-9588

www.eelamurasu.ca
Email: eelamurasu@yahoo.com

All the rights reserved to Eelamurasu publication. Every effort is made to pro- vide accurate information in this publication. Eelamurasu Publication is not re- sponsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



நாடடைவோம் என
நாலுபேர்
உந்த
நாற்பது பேர்
ஆயுதம் ஏந்தி
ஈற்றில் ஒருவன்
இறுகப்பற்றி
இனத்தை
எழுச்சிகொள்ள வைத்தான்!

இன்று
கூச்சமற
குறைபிடித்து
கறைபூசும் எம்
நிலத்தார் கனபேர்
கொள்கை வெறிபிடித்து
நின்றாராகினும்
பின்னர்
வால் பிடித்து வஞ்சகம்
புரிகையிலும் – கரிகாலர்
கலங்கி ஒன்றும்
நின்றதில்லை!

ஏற்றலும் தாற்றலும்
இடையிடையே
மடை மாற்றலும்
வந்து போக
தமிழர் அவர் தம்
ஆற்றல்
ஒன்றே போதும்
என்று
அரண் புகுந்து
இளையவர்க்கு
உரம் ஏற்றி
எதிரியவன்
சிரம் நரித்த
சிருடையான் – ஆனான்
எங்கள் தேசத்தின்
முகவரியாய்!

தொட்டதற்கும்
எம்மை
சொரிவதென்ற
சிங்களத்தின்
சிரங்கு நோயின்
குரங்குச் சேட்டைகளை
உலக அரங்கம்
அதிரும்படி
பறை கொட்டி
படை நகர்த்தி
அவர் தம் கொட்டம்
அடங்க கொடியேற்றி
வெற்றிப் பரணி
பாட பெரும்
தலைவனானவன்!

நாடு கட்ட
புறப்பட்ட
கருந்தியலை,
தேசவரைடத்தை
தமிழ் தேசிய சிந்தனையை

கழுத்தில்
அணியாகவும்
தோல்களில்
பச்சையாகவும்
சொற்களில்
தீயாகவும்
இதயத்தில்
எரிமலை பிளம்பாகவும்
ஏந்திச்சுமக்கிறது
இந்த
தலைமுறை !.



செந்துப் பிழைக்கிறது
சிங்களத்துப்
பச்சிளையும்

ஈர் பதினைந்து
ஆண்டுகளில்
எட்டிய உச்சம்
எக்கச்சக்கம்
இது புரியவில்லை
எம்மவர்க்கு..!

கூர் தீட்டியது
உலக வல்லரசு தன்
புத்தியை!

அடுத்தடுத்த
பதினைந்து ஆண்டுகளில்
ஆர் அறிவார்
அவன் திட்டம் என்று?

புவி சார் அரசியலால்
பிரிந்து நின்ற
கூட்டமெல்லாம்
கூடி நின்று
சிங்கள வெறியருடன்
கூட்டமைத்து!
புலி வேட்டை
ஆடவென்று
மனித உரிமைகளுக்கு
மயக்க ஊசி
கொடுத்துவிட்டு

மூட்டிய
வஞ்சகப் போரில்
வல்லாதிக்க பேய்கள்
முன்!
குறுகிய நிலத்துள்
பெருகிய இலட்சிய
வேட்கையுடன்
முழங்கிய சேனையை

பொஸ்பரசால்
எரித்து
கோர தாண்டவமாடி

பணிந்துவிடுங்கள்
என்ற
வல்லாதிக்க
வாஞ்சையில்
சிக்காமல்
கொள்கையில்
நின்று
தமிழ்க்குலம்
காத்தான்!

சண்டையிட்டு
சாவதே மேலென
நந்திக் கடலோரம்
ஒரு காவியம் படைத்தான்.

இறைமையை
விட்டுக் கொடாமல்
தானே
கொடையானான்
ஆயிரம் ஆண்டுகள்
தாண்டியும்
வரலாறு போற்றும்
எங்கள்
தேசியத் தலைவனான்!!

–வால் ஜெயச்சந்திரன்–





AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மாடம்
CASH FOR GOLD
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் மிகக் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
உங்கள் பழைய நகைகளை நியாயமான விலைக்கு எம்மிடம் விற்கலாம் வாங்கலாம்
கனடிய அரசின் அங்கீகாரம் பெற்ற முழு காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை
அம்மாவுக்கு நீங்க அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8 | ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861



எம்மினத்தின் இறைவனுக்கு
இனிய பிறந்த நாள்
நல் வாழ்த்துகள்
வாழ்க வளத்துடன்

ஆயிரத்து ஒள்ளாயிரத்து ஐம்பத்து
நான்காம் ஆண்டினிலே11
காந்தள் பூ மலரும்
கார்த்திகை மாதத்திலே11
மாண்புள்ளோர் பிறந்திட்ட இருபத்தி ஆறாம் தேதியிலே11
வேலுப்பிள்ளை பார்வதிக்கு வேங்கை
கையாய் நீர் பிறந்தீர் 11

மற்றவர் இன்புற உற்றவர்
தனைப்பிரிந்தீர்11
பெற்றவர் மானம் காக்க மறவர்களை
நீர் இணைத்தீர்11
தெய்வீக பிறவிகளின்
தெய்வீக துறவறத்தை11
மாவீரர் எனப் போற்ற வழிவகை
செய்தவர் நீர்11

மண்ணுக்காய் மரணிப்போம்
மறுத்திடோம் சத்தியம் 11
மறவர்க்கு இறப்பேது வாழ்வது
நித்தியம்11
மகன் வர வேண்டுமென
பெற்றோர்கள் பத்தியம் 11
மனமது குளிரவே வராதது
துர்ப்பாக்கியம்11

தற்துணிவு தந்திரம் படையணியின் லட்சியம்11
துணிந்து போராடினால்
ஜெயமது நிச்சயம்11
வெற்றி கிடைத்திட
பயிற்சி அவசியம் 11
மடிந்தாலும் விதைகள்
விதையாகும் சத்தியம்11

தனித்துமே ஜொலித்திடும்
தமிழுக்கு நிகரேது 11
தன்மான தலைவனின்
புகழினை நீ கூறு11
படித்திடு வரலாறு
நமக்கு நிகர் வேறாரு11
பகலவன் வெயிலுக்கு வற்றுமோ காட்டாறு11

ஒன்று பட்டிருந்திட்டால் ஒடுக்கிட முனைவோர் யார்11
ஒற்றுமை கண்டே தான் ஒதுங்கியே ஓடுவார் பார்11
வரலாறு உணர்டெமக்கு வழிகாட்டி அதுவே தான்11
சத்தியம் அங்கிருந்தே சாட்சியங்கள் சொல்லிடும்கேள் 11

நெஞ்சுரத்தின் வலிமையது போர்க்களத்தில் தெரிந்தது பார்11
நச்சு மனம் கொண்டவரால் நம்மவர்கள் அழிந்ததை பார் 11
மடிந்தாலும் மனங்களில் மறவர்கள் நினைவதைப் பார்11
மகத்தான காவியம் மடியாது வருவதை பார்11

யாதுமானவரே ஏம் தாயுமானவரே
தலைவரானவரே இறைவனானவரே11
வரமானவரே எம்மினத்தின் கரமானவரே11
புது ரகமானவரே தனித்தரமானவரே
மேன்மை யானவரே மேதகுவானவரே11

தாயகத்தின் விழியென ஒளிதரும் முத்தென 11
வாசப்பூங்கொத்தென தமிழரின் சொத்தென11
வழிந்தோடும் ஊற்றென அசைந்தாடும் கீற்றென11
வானத்தின் நிலவென வல்வெட்டித்துறையானென11

வாழ்த்துக்கள் சொல்லியே வாழ்த்துவோம் வாழ்க என

யூட் ஜீன்சியா
யாழ்ப்பாணம்





பள்ளியில் தோழராய் தொடங்கினோம்
பழகும்போது நண்பராய் நெருங்கினோம்
தேசத்திற்காய் புறப்பட்டாய் தம்பியானாய்
ஆளுமையை வெளிப்படுத்தினாய்,
தலைவனாய்
தேசியம் உன்னை உணர்ந்த போது
தேசியத் தலைவனானாய்.
இன்று உலகத்தமிழரின் ஒப்பற்ற
தலைவனுமானாய்
ஆம், எல்லாமும் ஆனாய் எல்லோருக்கும்,
ஆனால்
அறிமுகம் ஆகும்போதும், ஆபத்தில்
இருக்கும்போதும் இன்று எங்கும்
உன்பெருமை உயர்ந்த பொழுதும் எனக்கு
என்றும் நீ தந்த உறவு
அந்த நட்புறவு ஒன்றுதானே
யார் இருப்பார் உன்போல, என் உள்ளத்திலும்
நீ இருப்பாய் அந்த நட்புடனே!



நண்பனை வாழ்த்தும் நண்பன்
சிவபாலன் பாலசுந்தரம்
ஈழமுரசு நிர்வாகி


வாகன விபத்தா? அழையுங்கள்
ABS - MR. P.SINGARAJ
TAYLOR & BABER PROFESSIONAL CORPRATION
HONEST & FRIENDLY SERVICE CALL:
ABS MR.P.SINGARAJ
416.993.8443 905.471.3058
PG 45



அண்ணனுக்கு அகவை எழுபத்திரண்டு (Nov 26, 2026)

கண்ணின் இமைமோல் காத்து நின்றவன்
பெண்ணின் மானம் பெரிதும் போற்றியே
மண்ணை என்றும் மதித்துத் தொழபவர்
எண்ணம் நிறைந்த எங்கள் தலைவரே

பொன்னெனப் போற்றிப் புகழ்ந்து பாடியும்
தென்னவன் தரிசனம் செழுமையும் கண்டுமே
மன்னவா உன்னையும் மகிழ்ந்து வாழ்த்தவே
இன்னருள் தந்தாய் இன்றுன் திருநாளே

தாய்மண் தவிக்குதே தலைவனைத் தேடியே
வாய்விட்டு அழுதிட வார்த்தைகள் இல்லையே
சேனைகள் வகுத்துமே செய்தனை சாதனை
ஏனையோர் வியந்திட ஏற்றமும் கண்டுமே

மேதகு என்றுமே மேவிடும் வார்த்தையும்
ஓதலின் நன்றாய் ஓங்கியே பரவிடச்
சாலவும் சிறந்தவர் சான்றோர் போற்றிடும்
காலமுந் தந்தளம் கார்த்திகை மைந்தனே

ஆசான் என்றுனை அழைப்பது தகுமே
பேசாதோர் இல்லையே பேரன்புப் பொக்கிசம்
போராடும் வீரரைப் போற்றியே வளர்த்தனை
வாராயோ என்முன்னே வாழ்த்தி வணங்கவே

மாவீரம் பேசிடும் மானத்தமிழ் மண்மீது
மாவீரன் என்றுன்னை போற்றும் மாந்தரும்
கார்காலம் கண்திறந்து கரிகாலன் புகழ்பாட
பார்எங்கும் ஒன்றிணைந்து பாவிசைத்து
வாழ்திடுமே

அகவையும் பலவாய் ஆண்டுகள் கடந்திட
முகமது மலர்ந்தே மண்ணின் தவிப்பினை
களமது ஆடியே களிப்புடன் நின்றஎம்
தளரா மனதுடை தங்கத் தலைவனே

தமிழினம் போற்றும் தானைத் தலைவனே
அமிழ்தினும் இனிய அண்ணன் ஆனவரே
அகவை எழுபத் இரண்டிலே இன்றுனை
அகமும் மலர்ந்து அன்புடன் வாழ்த்துவேன்

மகர யாரில் மகிமை பாடி
சிகரம் ஏற்றிச் சிந்தையில் போற்றி
உருவங் கண்டே ஓம்பும் வார்த்தை
இருகரம் கூப்பியே தொழுவேன் வாழ்கவே!

கவிவாணிக் கதிர்
விஜயராணி மதியழகன்
ஒட்டாவா, கனடா



உங்கள் உறவுகளின் இழப்பில் உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக உங்களுக்காக சேவைபுரிய

Tharma stanislaus. BCom.
Funeral Counselor
call us:647-713-6049
dharman20@yahoo.com
"Saying Goodbye is so hard Let us make it easy for you"

AJAX
CREMATORIUM
& VISITATION CENTRE

கொள்கையினை பேரம் பேசாத தலைவனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்



ச. வி.கிருபாகரன், பிரான்ஸ்.

"கல்தோன்றா மண் தோன்றா காலத்தில் வாழுடன் மூத்த தமிழ்". "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா." போன்ற எமது முன்னோர் வாங்கியங்களிற்கு, 20-21ம் நூற்றாண்டுகளில், செயல் வடிவம் கொடுத்தவர், எமது தேசிய தலைவரும், தமிழீழ விடுதலை புலிகளின் தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன், தான் கொண்ட கொள்கையில் உறுதி கொண்டு, தனது இளம் வயதிலிருந்து ஈழத்தமிழருக்காக இரவு பகலாக தொடர்ந்து போராடி, ஈழத்தமிழர்களின் தாயாக பூமியான இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கில், சுதந்திர தமிழீழத்தை நிறுவி, சகல கட்டமைப்புகளுடன் பல வருடங்களாக ஓர் நடைமுறை அரசை அமைத்து உலகத்துக்கு காண்பித்தவர் தான் தலைவர் பிரபாகரன். உலகத் தமிழர்களின் இவ் மாபெரும் தலைவருக்கு எமது மனப்பூர்வமானா பிறந்த நாள் வாழ்த்துக்கள். "சூரியன், மழை இருட்டு காலங்களில் தெரிவதில்லை, அதற்காக சூரியன் மறைந்துள்ளதாக கூற முடியுமா? நன்றி. ச.வி. கிருபாகரன், ஸ்தாபக பொதுசெயலாளர், தமிழர் மனித உரிமை மையம் - TCHR, பிரான்ஸ்.

26 நவம்பர் 2026. Con rem aut dunt entiatem rehenit volorepta dit et doloritat voluptum voluptas et unt is alias rehenime la

COMMERCIAL & RESIDENTIAL MORTGAGES
PURCHASE AND REFINANCE
Commercial & Residential 1st & 2nd mortgages.
vacant land financing.
"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE



T.Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License # 10216
416.457.0651
Email: antonyres@gmail.com
40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5 | Tel: 416431.5115

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS

சோதி வடிவாகத் தோன்றிய பொருளே!

பார்வதி அம்மையின்.
பல்லாண்டு நோன்பால்.
கார்மேகம் கலையக்.
கரிகாலன் வந்துதித்தனன்.
கடலோர மாளிகையில்
வந்துதித்த அண்ணலே !
உன்னால் ஊர் முகம் மாறி.
உயர்ந்தது தமிழினம் .
கம்பெடுக்கப் பயந்திருந்த.
இனத்திற்குத் துணிவு தந்து. வில்லெடுத்து
விளையாடும் .
வீரம் தந்தாய் .
சோதி வடிவாகத் தோன்றிய பொருளே !
காரிருள் கலைத்த பேரொளியே!
நீ வாழுவாய் இன்னும் நூறாண்டு. யாதுமாகி
நின்றெம்மைக்
காத்திட்ட வடிவே!
யாருமற்ற இனமாக .
நம் தமிழர் இன்று.

ஏதிலிகளாக ஆனது
மீண்டும் எம் வாழ்வு.
சூடு சுறணையற்றோர் கைகளில். நாணயக் கயிறு
.
கூனிக்குறுகி வரிசையிட்டு கொடுப்பதை வாங்கும்
நிலமையில் கைகளிங்கே!
கைகட்டி நிற்கும்
கலாச்சாரம் உடைத்தவா!
எங்கள் கைகள் உயர வேண்டும்.
கண்ணகையாள் கோயிலின் மணியோசையும்
விண்ணளாவி ஒலிக்கிறது.
நந்திக்கடலின் அலையோசையும்
நாலு திசையும் கேட்கிறது.
அஞ்சற்க என்ற நின்
அசரீரி எம் நெஞ்சத்தை நிறைக்கிறது.
எம் நெஞ்சத்தை

– மயிலைக்கவி.





AR GROUP
ROYAL LEPAGE Ignite Realty Brokerage

உங்கள் கனவு இல்லம்
உண்மையாகக்க
நாங்கள் உதவுகிறோம்!

வாங்குதல் | SOLD விற்பனை | வாடகை (Lease) | முதலீட்டு ஆலோசனை

ARASAN RAJADURAI
REALTOR®
416-500-9550

எந்தவித ரியல் எஸ்டேட் தேவைக்கும்
இன்றே தொடர்பு கொளஞ்ளுங்கள்!

இந்தியாவின் அழுத்தமும் தலைவரின் உடையாத உறுதியும்

1987 யூலை 27 ஆம் திகதி நள்ளிரவு



புதுடில்லியில் தலைவர் தங்க வைக்கப்பட்டிருந்த அசோகா விருந்தினர் விடுதியின் அறையினுள் அழைப்பு மணி ஒலித்தது. இந்திய உள்நாட்டுப் புலனாய்வுத் திணைக்களத்தின் இயக்குனர் திரு. நாராயணன் கதவிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தார். கதவு திறக்கப்பட்ட பின் உள்ளே வந்து பிரதமரின் இல்லத்திலிருந்து நேராக இங்கு வந்துள்ளேன் என்று பேச்சை ஆரம்பித்த அவர், பிரதமர் ராஜீவ்காந்தி உங்களை அவசரமாகச் சந்திக்க விரும்புகிறார் என்று தலைவர் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்தார். அதை ஏற்றுக்கொண்டு தலைவர் அவர்கள், திரு. நாராயணன் ஒழுங்கு செய்த வாகனத்தில் ஏறி பிரதமர் ராஜீவின் இல்லம் நோக்கி விரைந்தார்.

பிரதமரின் இல்லத்தை வாகனம் சென்றடைந்ததும், முன்னே வந்த திரு. ராஜீவ்காந்தி, "உம்மைப்பற்றி அறிந்திருக்கின்றேன் நீர் ஒரு சிறந்த வீரன்" என்று புகழாரம் சூட்டியபடி, அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றார். சம்பிரதாயபூர்வமான நலன் விசாரிப்புகளும் முடிய, வந்த விடயம் பற்றிக் கதைப்பதற்கு இருபகுதியினரும் தயாரானார்கள்.

பிரதமர் ராஜீவ்காந்தியுடன் அவரின் செயலாளரும், மற்றும் திரு. நாராயணன், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோரும் உடன் இருந்தனர். தலைவர் பிரபாகரனுடன் திரு. அன்ரன் பாலசிங்கம் உடனிருந்தார்.

சொற்ப நேர மௌனத்தைக் கலைத்தபடி, பிரதமர் ராஜீவ் காந்தி பேசத் தொடங்கினார். தான் வரைந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றி ஒரு மேலோட்டமான விளக்கத்தை அளித்துவிட்டு, இந்த ஒப்பந்தம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதை எனக்கு விளக்குங்கள் என்று தலைவரிடம் கேட்டார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த முக்கியமான குறைபாடுகள் பற்றித் தனது கருத்தை தலைவர் அவர்கள் கூறத் தொடங்கினார்.

முதலில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத்திட்டம் ஒரு முழுமையான சுயாட்சித் திட்டமாக இருக்கவில்லை. அதாவது, உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் அதனிடம் இல்லை என்று எடுத்துக்கூறினார். மேலும் இந்த மாகாணசபை முறையில் சிங்கள மத்திய அரசிற்கே அதிகூடிய அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன், நினைத்த உடனேயே இந்த மாகாண சபையை கலைத்துவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு என மாகாண சபையின் கையாலாகாத்தனத்தை ராஜீவ்காந்திக்கு எடுத்து விளக்கினார். அத்துடன், இந்த ஒப்பந்தம் தமிழரின் தாயகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

வடக்கு கிழக்கு இணைப்பென்பது தற்காலிகமானதாகவே இருக்கின்றது. நிரந்தர இணைப்பு தொடர்பாக, கிழக்கில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்ற நிலைப்பாட்டை நாம் ஏற்கமாட்டோம். ஏனெனில் வடக்கு கிழக்கு என்பது பிரிக்க முடியாத தமிழர் தாயகமாகும். எனவே இணைப்பு பிரிப்பு அதற்கான தேர்தல் என்ற ஒப்பந்த விதிகளை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று தலைவர் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.

அத்துடன் எமது மக்களின் அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு அரசியல் ஒப்பந்தத்தை எமது மக்களுடன் கலந்தாலோசிக்காது செய்துவிட்டு அதை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக 72 மணிநேரத்தில் புலிகள் ஆயுதங்கள் ஒப்படைக்க வேண்டும் என்று கோருவதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என, ஒப்பந்தம் தொடர்பான அபிப்பிராயத்தைத் தலைவர் அவர்கள் எடுத்து விளக்கினார்.

தலைவரின் விளக்கத்தை அவதானித்துவிட்டு ராஜீவ், வடக்கு கிழக்கை இணைப்பதற்காக கிழக்கில் அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற விடயத்தை நாம் எப்படியும், பின்னர் நீக்கப்பார்க்கின்றோம். அதேபோல அதிக அதிகாரங்களை மாகாண சபைக்குப் பெற்றுக்கொடுக்க, பின்னர் முயற்சிக்கின்றோம். ஆனால் இப்போது இந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்று தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார். திரு. ராஜீவ்காந்தியின் வாய்மொழி உத்தரவாதத்தை எப்படி நம்புவது எனத் தலைவர் சிந்தித்தார்.

எழுத்தில் உள்ள ஒரு ஒப்பந்தத்தை ஏற்கின்றோம் என்று புலிகள் கையெழுத்திட்ட பின்னர் எழுதப்பட்டதற்கு முரணாக அதை நடைமுறைப்படுத்தும்படி சிறிலங்கா அரசைக் கோர ராஜீவ் காந்திக்கு அதிகாரம் இல்லையே! அவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தாலும் எழுதப்பட்டதற்கு மேலாக தமிழர்களுக்கு அதிகளவில் உரிமை கொடுக்க, பேரினவாத ஜே.ஆர். ஜெயவர்த்தனா உடன்படுவாரா?

இந்தியப் பிரதமருக்கு வெளிப்படையாகவே, தலைவர் சொன்னார், முக்கியமான பல குறைபாடுகளைக் கொண்ட இந்த ஒப்பந்தத்தை எம்மால் ஏற்கமுடியாது என்றார். தலைவர் தனது முடிவை மாற்றி ஒப்பந்தத்தை ஏற்கவேண்டும் என்று ராஜீவ்காந்தி விடாப்பிடியாக வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தார். இந்தியப் பிரதமரின் வேண்டுகோளைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அங்கிருந்த பண்ருட்டி இராமச்சந்திரனும் கேட்டுக்கொண்டார்.

இந்தியப் பிரதமர் எவ்வளவோ சொல்லியும் ஒப்பந்தத்தை ஏற்கமுடியாது என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் கீழிறங்கி வரவில்லை. இந்த நிலையில், தலைவரிடம் வேறொரு வேண்டுகோளை ராஜீவ் விடுத்தார். நீங்கள் (தலைவர்) கூறுவதுபோல ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை ஆனால் அதற்கு எதிராகச் செயற்படாமல் விடுவீர்களானால், உங்களுக்குச் சில நன்மைகளை நாங்கள் செய்வோம் என்றார்.

அதாவது, வடக்கு-கிழக்கில் ஒரு இடைக்கால அரசை உருவாக்கி, அதன் நிருவாகப் பொறுப்பைப் புலிகளிடம் ஒப்படைப்பது, அடுத்தது, புலிகள் இயக்கம் ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை சம்பிரதாயத்திற்காக ஒருதொகை ஆயுதங்களை ஒப்படைத்தால் போதும். அத்துடன், புலிகள் இயக்கத்தின் செலவுகளுக்காக மாதாந்தம் 50 இலட்சம் ரூபாவை (இந்திய ரூபா) இந்திய அரசு வழங்கும் என்று ராஜீவ்காந்தி உறுதி கூறிவிட்டு, இதையாவது ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.

ஆனாலும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற இந்த நிலைப்பாட்டிலிருந்து தலைவர் மாறவேயில்லை. ஆயினும், ஒப்பந்தத்தை அமுலாக்கிப் பார்ப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்காது இருக்கின்றோம். நீங்கள் முயற்சித்துப் பாருங்கள். ஆயினும் எமது மக்களின் நலன்களைப் பாதிக்காதவரை நாங்கள் ஒப்பந்த அமுலாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் எனத் தலைவர் தெரிவித்தார்.

பின்னர் விடயங்கள் மிகவேகமாக நடந்தன. தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது, வெளியாருடன் தொடர்புகொள்ளக்கூடாது என்று புலிகளிற்கு விதித்திருந்த தடைகள் நீக்கப்பட்டன.

இதேவேளை, இரண்டொரு நாளில் கொழும்புக்குப் பறந்த ராஜீவ்காந்தி, அங்கே ஜே.ஆருடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, மீண்டும் இந்தியா திரும்பினார். ஒக்ரோபர் 2ஆம் திகதி, மீண்டும் தலைவர் தமிழீழம் வந்தார்.

15ம் பக்கம் பார்க்க...



14ம் பக்கத் தொடர்ச்சி...

சேது அணைதாண்டிய வானரங்கள் போல இந்தியப் படைகள் தமிழீழத்தில் குவிந்தன.

இந்தியப் பிரதமருக்குக் கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம் குறித்த தொகை ஆயுதங்களை ஒப்படைத்து, தனது நல்லெண்ணத்தை தலைவர் காட்டினார்.

ஆனால் வடக்கு-கிழக்கு இடைக்கால அரசை நிறுவும் விடயத்தில் ஜே.ஆர் இழுத்தடித்தார். அதற்குப் பதிலாக கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டார், புதிய பொலிஸ் நிலையங்களைத் திறந்தார். இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில், இந்தியப் பிரதமர் புலிகளின் முதுகில் குத்தத் தொடங்கினார். சமூகவிரோதிகளை, மக்களால் அந்நியப்படுத்தப்பட்ட ஆயுதக் குழுக்களை மீண்டும் தமிழீழத்திற்குக் கூட்டிவந்து, அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி, புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிட்டார். தலைவருக்கு வாக்குறுதி அளித்தது போலல்லாது, ஜே.ஆரின் அரசுக்குச் சார்பாக ராஜீவ்காந்தி நடக்கத் தொடங்கினார்.

இந்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலமாக்க, சாகும்வரை சாத்வீகப் போரைத் தொடுக்கத் திலீபன் முன்வந்தான் ஆயினும் இந்திய அரசால் திலீபன் சாகடிக்கப்பட்டான். திலீபனின் தியாகச் சாவுடன் விழித்தெழுந்த தமிழ் மக்கள் இந்திய அரசுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கினர். இந்தவேளையிலேயே எமது தளபதிகளான புலேந்திரன், குமரப்பா உட்பட 12 போராளிகள், இந்திய சிங்கள சதிக்குப் பலியாகினர். மக்களின் கோபாவேசத்தை வெளியுலகிற்குத் தெரியவிடாமல் தடுக்க நிதர்சனம், ஈழமுரசு போன்ற தொடர்பு சாதனங்களை இந்தியப் படைகள் நாசம் செய்தன. அத்துடன் இந்திய - புலிகள் போரும் தொடங்கியது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இந்த இரண்டு அரசுகளின் நலன்களையும் நிறைவேற்றும் ஒரு வஞ்சக உடன்பாடாகும்.

இந்திய அரசின் பிராந்திய நலனைப் பாதுகாக்க இலங்கை அரசு உடன்பட வேண்டுமாயின், இலங்கை அரசின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க இந்திய அரசு உதவவேண்டும். இதுதான், ராஜீவுக்கும்-ஜே. ஆருக்கும் இடையில் நடந்த எழுதப்படாத உடன்பாடு.

தனது நலனைப் பேணுவதற்காக தமிழ் மக்களது நலனை வேள்விக்கிடாய் ஆக்கி, சிங்களப் பேரினவாதப் பூதத்திற்குக் காணிக்கையாக்க இந்தியா முயன்றது.

இந்த நோக்கத்துடன் தலைவரைக் கொல்வதற்காக ஒரு விசேட கொமாண்டோ அணியை ராஜீவ்காந்தி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொன்று தனது ஒப்பந்த பங்குதாரரைத் திருப்திப்படுத்த ராஜீவ்காந்தி முயன்றார்.

போர் விஸ்வரூபம் எடுத்தது. இந்தியப் படைகளால் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போரைத் தடுத்து நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்காக, ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டு வருமாறு, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதங்கள் மூலமாகத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

தலைவரின் கடிதங்களை ராஜீவ் காந்தி பொருட்படுத்தவேயில்லை.

தமிழ்நாட்டில் அப்போது தங்கியிருந்த எமது மூத்த உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்த முரசொலிமாறனை ராஜீவ் காந்தியிடம் தூது அனுப்பி போரை நிறுத்தும்படி வேண்டினர். பிரதமர் அலுவலகத்தில் வைத்து தன்னைச் சந்தித்த முரசொலி மாறனிடம் ராஜீவ் சொன்னார், "பிரபாகரன் என்னுடைய காலடியில் வந்து விழும் வரை போரை நிறுத்த மாட்டேன்". ராஜீவ்காந்தியின் எச்சரிக்கையைக் கேட்டுவிட்டு தி.மு.க தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கூறினார், "ஏன் இந்தியப் படையுடன் சண்டை இடுகின்றீர்கள்? பூண்டோடு அழிந்துவிடப் போகின்றீர்கள். உடனேயே ஆயுதங்களுடன் சரணடைந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுரை கூறினார்.

தலைவர் பிரபாகரனைக் கொன்று போரை வென்றுவிட்ட ஒரு வெற்றிச் செய்திக்காக, நேருவின் பேரன் டில்லியில் தவங்கிடந்தார். ஆனால் அவர் விரும்பிய செய்தி அவரைச் சென்றடையவேயில்லை!

மிரட்டல் இராசதந்திரத்தைக் கையாண்டு பார்த்த டிக்சிற் அவர்கள் தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று தோற்றார். அதனால் கோபமடைந்த டிக்சிற், வார்த்தைக் குண்டுகளை அள்ளி வீசினார் அது எந்த நன்மையையும் டிக்சிற்றுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அரவணைக்கும் இராசதந்திரத்தைக் கையாண்டு பார்த்து, தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று ராஜீவ்காந்தியும் தோற்றார். அதனால் கோபமடைந்த ராஜீவ்காந்தி, தலைவரைக் குறிவைத்து இந்தியப் படைகளை ஏவிவிட்டார். தீமையைத் தவிர அது எந்த நன்மையையும் ராஜீவ்காந்திக்குப் பெற்றுக்கொடுக்கவில்லை!

நன்றி: படியுங்கள் அறியுங்கள்

தகவல்: பாலா அண்ணை

விஞ்சுபுகழ் வீரமுடன் வெஞ்சமரில்
விளையாடும் நெஞ்சுரம் கொண்டெழுந்த
அஞ்சாத வேங்கை அவன், ஆழ்கடல் முத்தாய்
அருந்தமிழ்ச்சொத்தாய் வாழும் தமிழினம்
தழைத்தோங்கிச் செழித்திடவே ஈழத்தே
முகிழ்ந்தெழுந்த வீரியத்து வித்தானவன்,
வாழும்வரலாற்றில் வான்மையுள்ள வரமாகி
சூழும்பகைவிரட்டும் சுந்தரனாம் எம்தலைவன்
நீளக்கிடக்கின்ற சரித்திரத்தில் நின்றொழிரும்
நீறுபூத்த நெருப்பானவன், பழுதுற்ற தமிழ்நிலம்
பண்படுத்த எழுந்தவன் விடுதலைப்பயிரென
மூத்தவர் இளையவர் விழிக்குநிகர்
அணிகளாய் முப்படை நடத்திடும் வரமாவன்,
மங்கலம் பொங்கிட மாதமிழ் மிளிர்ந்திட
பொங்கிடும் உணர்வெலாம் சங்கமம் ஆக்கிய
எங்களின் மன்னவன், வீசும்காற்றும் எங்கள்
வேங்கைத்தலைவன் வீரக்கதைகூறும் மூசும்
கடலலையும் மன்னவன் புகழ்பாடும் பிரபஞ்சம்
உரமோடு பிரபாகரன் பெயர்கூறும் காலம்
கற்றுணர்ந்த காத்திரமான வரலாறு அவன்
ஞாலத்தில் எமைவளர்த்த உண்ணதப்பேராறு,
முந்துபுகழ் முத்தமிழைக்காத்திடவே பூத்தமகன்
செந்தமிழ்த்தாய் விலங்கொடிக்கச்செருக்களத்தே
நடந்தமகன், தூயமொழிச்சிறப்பை தொல்தமிழின்
அருஞ்சிறப்பை தொல்தமிழர் போர்த்திறத்தை
அழகுறவே அகிலத்தில் பறைசாற்றியபெருவீரன்
வந்துதித்த நாளதிலே வாழ்த்தியே
மகிழ்ந்திடுவேன்.

-சயந்தன் பசுபதி-





மாவீரம் போற்றுவோம்



ஏட்டினிலே அடங்காத எழுச்சிக்கு வித்தாவான்
எல்லோரின் நெஞ்சினிலும் என்றென்றும் சொத்தாவான்
காட்டினிலே விலங்கொத்த காடையர்கள் கூட்டமதை
கட்டோடு அழித்தொழித்த கரிகாலன் எம்தலைவன்
போற்றியேநான் பாடவந்தேன் போர்க்களத்தின் நாயகனே
பொல்லாரின் கதைமுடிக்கும் போற்றுதற்கு உரியவனே
தோற்காத வீரமுடை தோளுடையோன் அவன்புகழை
தொகுத்திங்கு வழங்கிடுவேன் தொழுதிட்டே அவன்பாதம்

மண்ணதிரும் படையணிகள் மண்காக்கும் இலக்குடனே
மாவீரம் படைத்திட்ட மறவர்கள் துணைகொண்டு
விண்ணதிர எதிரியெமை வீழ்த்திடவே முனைந்ததை
வீணான நோக்கமென்று விரட்டியதோர் காலமுண்டு
பெண்ணடிமைத் தனமறுத்து பெண்களணி வேங்கையராய்
பெருமையுடன் போரிட்ட பொற்காலம் நமக்குண்டு
கண்ணியமாய் ஒருமித்துக் களமாடித் தமிழீழம்
காத்திட்ட வரலாற்றுக் காவியங்கள் பலவுண்டு

முந்தியெம் தவமெனவே மூத்தவன்நீ கிடைத்தாய்
மூவேந்தர் வீரமெல்லாம் மூலமாகக் கொண்டவனே
பிந்திவந்த நாங்களனுனை பின்பற்றி வழிநடந்து
பிதாமகன் நீயென்று பிடிமானம் கொண்டதுண்டு
நஞ்சேந்தும் கழுத்தோடு நயமுடனே துப்பாக்கி
நடுங்காத கரத்துடனே நாட்டிற்காய் தாங்கியதும்
வெஞ்சினமும் விலக்கிட்டே வேற்றுமைகள் தகர்த்திட்ட
வேங்கையர்தம் தலைவனையே வீரத்துடன் வாழ்த்திடுவோம்

(ஆக்கம் – செல்வி மயில்வாகனம்)



வேள்வியில் வந்த வேங்கையே வாழ்த்துகிறோம்.....

வேள்வியில் வந்த வேங்கையே
வீழ்ந்திடா வீரம் கொண்டவரே
மழைத்துளி போல் தமிழ் இனம்
அலையாய் வந்து
வாழ்த்துகின்றோம்
அகம் மகிழ்ந்து மலர்
பொழிகின்றோம்

கண்கள் தேடும் கரிகாலா–எம்
தலைவன் நீயே கரிகாலா
ஆண்டுகள் ஓடலாம்
ஆயிரம் இடர் வந்து போகலாம்
அகலுமா உம் நினைவு கரிகாலா
தமிழ் இனத்தின் தலையே–எம்
தந்தையே நீ எங்கே கரிகாலா

புனிதம் நிறைந்த புத்தகம் நீ
உலகம் படிக்கும் உன்
வீரத்தையே
கார்த்திகையில் உதித்த
கரிகாலனே
சூரியனாய் நீ வந்தாய்
தமிழ் இனத்தில்

அகம் நிறைந்து வாழ்த்தும்

கவிஞாயிறு
நாவாயூரான்
வென்சிலாஸ் அனுரா.



வா வா தமிழீழத் தேசியத்
தலைவா நீ வா அண்ணா வா;

மதிப்பிற்குரிய தமிழின்
மாண்புமிகு மகுடமே நீ வா
அண்ணா வா,

உனக்கு இறப்பு இல்லை
என்பது உறுதி - அது
தமிழினத்தின் வரலாற்று நீதி - நீ
வா அண்ணா நீ வா,

தமிழர்கள் ஒரு தேசிய இனம்
இல்லை, என்றான் சிங்களவர்கள்.
எங்களை அடிமைகள் என்றான்
சிங்கள பௌத்த பேரினவாத
இனவெறியன்,

இல்லை, தமிழர்கள் ஒரு
தனித்துவமான தனிப்பெரும்
மொழி தமிழின் உரித்துடையோர்
என்று தந்தாய் தமிழர்க்கு தமிழீழ
நாட்டை அண்ணா,

அன்புத் தலைவா நீயே
தமிழருக்கு ஒரு தேசியக்
கொடியை உருவாக்கித்
தமிழீழ நாட்டையும் உருவாக்கி
தமிழர்கள் நாங்களும் ஒரு
பாரம்பரிய தமிழ் தேசிய இனம்
என்று உலகத்தின் செவிகளுக்கு
அதிர உரைத்தாய், அண்ணா நீ
வா அண்ணா,

ஈனத்தனம் இல்லா இமயமே
- தமிழீழ நாட்டின் உருவமே -
தமிழீழத் தமிழர் எம் சுதந்திர
சுயநிர்ணய வடிவமே - மனிதநேய
வள்ளலே - நீ வா அண்ணா,

தமிழீழத் தாய் உன் வரவை
எதிர்பார்த்து காத்திருக்கிறாள் -
அவள் உன் அழகான சுதந்திர
தமிழீழ மலர்வை காண தவம்
இருக்கிறாள் நீ வா அண்ணா,

மாவீரர்கள் எம்மோடு
துணை இருப்பார் - அவர்
துணையோடு புலிகள் நாங்களும்
உன் கரம் பற்றி தமிழீழம்
அமைக்க வீறுநடை போடுவோம்
- தமிழர் எம் தமிழின் ஆயுத
எழுத்தே - தமிழர் எம் சுதந்திர
விடுதலையின் இமயமே நீ வா
அண்ணா வா,

கலைபண்பாட்டு கழகம்,
பிரான்ஸ் தமிழீழச்
சங்கங்களின் கூட்டமைப்பு

– செ.சீலன்

புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்.



Cell Tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
♦ Rogers Wireless
♦ Telus Mobility
♦ Fido
♦ Bell Mobility
♦ Mobilicity
♦ Freedom Mobile
♦ Public Mobile
♦ Chair Mobile
Phone: 416-266-6818 / 416-999-4126 / 416-891-1234
Toll Free: 1-866-439-9393
info@celltelmobility.com | www.celltelmobility.com
2637 Eglinton Ave East, Scarborough ON. M1K 2S2 (Eglinton / Midland)





எங்கள் அண்ணன் தமிழீழத் தேசிய தலைவர்
"மேதகு" வே.பிரபாகரன் அவர்களுக்கு
72 ஆவது இனிய பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

கார்த்திகை மண்ணிலே காவியம்
புத்திட்ட எங்கள்
காவலன் பிறந்தநாளிது – தமிழ்
வார்த்தைகள் தொடுத்து வாழ்த்தி
வணங்கிடும்
வரலாற்றுப் பொன்னாளிது!

செந்தமிழ்ச் சேயிழையாள்
சீறி எழும்போதில்
வெந்தழலாய் வந்த வேந்தன் – எங்கள்
முந்தைத் தமிழர்களின்
மூதாதைக் காவலில்
வந்துதித்த மைந்தன்!

வேலூன்றி நின்றிட்ட வண்புலத் தில்லத்துப்
பாலன் வளர்ந்திட்ட பாதையில் – நெஞ்சம்
நாளும் துடித்ததோர் ஈழத் தமிழரின்
நாளம் பிழிந்திட்ட வேதனையில்!

கரிகாலன் போலக் காரிருள் நீக்கி
புதியதொரு வரலாறு கண்டான் – அறத்தின்
இமயம் தொட்டு எல்லாளன் போல செங்கோல்
வழுவாது நிமிர்ந்தான்

ராசராசன் எங்கள் ராசேந்திரன் போல
அறிவு, கலை, அரண் கட்டி
அரசாட்சி நடத்திய பேராளன் – என்றும்
பண்டார வன்னியன் பாசறைப் பற்றோடு
தமிழீழம் கண்ட முழயாளன்

நிலமும் நீரும் விண்ணும் காக்க
முப்படை கண்டவனே!
தமிழர் புலிக்கொடி ஏந்தி குலக்குடி காத்து
புகழ்கொடி நட்டவனே!
தீமை செய்யும் மாற்றானுக்கும் கருணை
காட்டியவனே!
பார் போற்றும் மாண்பை ஏந்திப்
பண்பால் நின்றவனே!

இருக்கின்றாயா இல்லையாயென
இன்றும் குழம்புகின்றோம் – ஆனாலும்
பாயும் உந்தன் பாதை எமக்கு ஒளியைத்
தருமன்றோ!

ஏயும் இன்பத் துன்பம்
தாண்டி ஈழம் சேரவே!
நாயகன்நீ காட்டிய பாதை எமக்கு
என்றும் வழியா(கு)மே!

கார்த்திகை மண்ணிலே காவியம்
புத்திட்ட எங்கள்
காவலன் பிறந்தநாளிது – தமிழ்
வார்த்தைகள் தொடுத்து
வாழ்த்தி வணங்கிடும்
வரலாற்றுப் பொன்னாளிது!

பேரன்போடும்
பெரும் பாசத்தோடும்
தம்பி

– வ.கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி
"சோழன் குடில்"
15.11.2026

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



Vilosanan Sivatharman
416-993-0826

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

• Visitation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com



Christeen Seevaratnam
416-258-6759

தமிழீழத் தேசியத் தலைவர மேதகு வே பிரபாகரன்

அவர்கள் பற்றிய அறியாத பக்கங்கள்

"வெளிக்கிடுங்கோ வீட்டை போகவேணும்" என்று அண்ணை உதவியாளரிடம் சொல்ல பாதுகாப்பு ஏற்பாடுகளிற்காக மெய்ப்பாதுகாவலர் முகாமும் தொலைபேசியும் பரபரக்கும். மெய்ப்பாதுகாவலர்களிடம் இருக்கும் பரபரப்பெதுவும் அண்ணையிற்குத் தெரியவராது.

அண்ணையின்செயல்களிலும் வித்தியாசம் ஏதும் தெரியாது.திட்டமிட்டபடி சந்திப்புகள் நிகழும். வேலைகள் நிறைவாக அவர் எழுந்து வானத்தின் அருகில் வர கதவுகள் திறக்கும் . அடுத்த நொடி வாகனங்களின் கதவு பூட்டும் சத்தம் சடக்...சடசடக்..

வாகனம் புயலைப்போல உறுமியபடி புறப்படும். காட்டின் மரங்களும் சிலிர்த்துப் போயிருக்கும்.

கிரவல் தரையில் இரைந்தபடி சக்கரங்கள் சுழல்வது காலச்சக்கரம் சுற்றுவதைக் கேட்பதுபோல் உணர்த்தும்.

ஓய்வறியா உழைப்பாளியான தலைவரின் வாழ்வில்விடுமுறையென்பதும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவளித்ததென்பதும் மிகவும் அரிது.

ஆனாலும் பிள்ளைகளின் துணைவியாரின் உணர்வுகளிற்கு மதிப்பளித்து அவர்களின் அன்பின் எதிர்பார்ப்பில் வீடு செல்வதுண்டு.

பெரிய யுத்தங்கள் நடைபெறும் போதோ அல்லது பேச்வார்த்தைகளின் நேரங்களிலோ அண்ணை வீட்டை சென்றது கிடையாது.

வாரங்கள் மாதங்களாகியும் வீடு செல்லாது நின்ற தருணங்கள் உண்டு.

அதிகரித்த வேலைப்பழுவும் களமுனை நெருக்கடியும் மாதக்கணக்கில் வீடு செல்ல முடியாத தருணங்களும் உண்டு.

ஒருதடவை இவ்வாறு நெடுநாளாக வீடுவராத அப்பாவை நினைத்து துவாரகா மிகவும் கவலையுற்றிருந்தாள்.

வீட்டின் அருகில் இரைந்து செல்லும் வாகனங்களின் சத்தங்களை கேட்டு திடுக்கிட்டு எழுந்து அப்பா வாறன் என்று காத்திருப்பாள்.

ஏமாற்றம் ஏக்கம் அவளை அவருக்கொரு கடிதம் எழுதத்தூண்டியது.

"அன்புள்ள அப்பா!மாதங்கள்.நீங்கள் எங்களை பார்க்க வந்துபலவாகிவிட்டன. எப்போது வருவீர்கள்" என்று ஏக்கமோடு நீளும் அந்த கடிதம்.

அந்த எழுத்தின் ஆழம் தலைவரின் மனதில் அதிர்வலைகளை ஏற்படுத்தாமல் இல்லை.

பயணமொன்றில் வாகனத்தில் அமர்ந்திருந்த மெய்ப்பாதுகாவலர்களின் பொறுப்பாளரிடம் இதை பகிர்ந்து கொண்டுள்ளார்.

முகாமிலிருந்து அண்ணை வீடு இருக்கும் தூரம் பதினைந்து இருபது கிலோமீற்றர் தூ ரத்திற்குள்ளவோ அல்லது குறைவானதாக இருந்தாலும், படையணிப் போராளிகளை சந்திப்பிற்காகவும் அல்லது பயிற்சிகளை மேற்பார்வை செய்யவும் வீட்டின் அருகேயுள்ள முகாம்களிற்குச் சென்று வந்தாலும் அண்ணை



அடிக்கடி வீடு செல்பவரில்லை.

அவரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தமிழரின் தனி இராட்சியமாக விளங்கிய நிலத்தில் சகல அதிகாரங்களுடன் இருந்தாலும் தனக்கு தானே வரையறைகளை விதித்து உன்னத போராளியாக உலகின் முதற் தரமான முன்னுதாரணமாக இருந்தவர்.

போராளிகளிற்கு இயக்கத்தின் கட்டுப்பாடு என்னவோ அதையே அண்ணை முதலில் பின்பற்றுவார்.

அண்ணை விடுமுறையில சென்றாலும் நீண்ட நாட்கள் அங்கே நிற்பவர் அல்ல ஓரிரண்டு நாட்கள் தான்.

விடுமுறையில் சென்றாலும் அவரது பிரதான தொலைத்தொடர்பாளர் ஏதாவது அவசரமான செய்திகளோடு வந்தால் அடுத்த முப்பது நிமிடங்களிற்குள் முகாமில் நிற்பார்.

உடற்சுகவீனமென்றால்கூட தனது பாசறையில் தான் ஓய்வெடுப்பாரே தவிர வீடு செல்வதில்லை.

அண்ணை வீட்டில் நிற்கும் விடுமுறை நாட்கள் எந்தக் கட்டத்திலும் முடிவுக்கு வரலாம் என்பதால் ஒவ்வொரு கணமும் குதூகலமாகவும் கொண்டாட்டமாக வருமே கழியும்.

சீருடையில் வீட்டுக்கு வருபவர் வீட்டினுள் சீருடையிலிருந்து சாரம் ரீசேட்டுக்கு மாறியிருப்பார்.

இடுப்பிலோ அல்லது கையிலோ இருக்கும் கைத்துப்பாக்கியை காணமுடியாது.

வீட்டினுள் நுழையும் போதும் வெளியே வரும்போதும் கைத்துப்பாக்கியுடனேயே இருக்கும் அவர் பிள்ளைகளோடு கொஞ்சிக் குலாவும்போது எங்கே மறைத்து வைத்திருப்பார் என்பது யாருக்கும் தெரியாது.

வயிற்றுக்கும் நெஞ்சிற்கும் குறுக்காக சாரத்தை இறுக்கி வரிந்து கட்டிக்கொண்டு பிள்ளைகளை குளிக்க வார்ப்பது முதல் சமையலறையில் அக்கா அருகில் நின்று சமையலுக்கு உதவிசெய்வதுவரை வீடே அவரது செயல்களால் நிறைந்து போயிருக்கும்.

முற்காலியொன்றிலிருந்து கொண்டு மரக்கறிகளை அளவாக, அழகாக நறுக்குவதைப்பார்கும்போது ஆனையிறைமீட்கும் படையை கட்டி வளர்த்த பெருந்தலைவரின் வானளாவிய விம்பம் மறைந்து நல்ல கணவனாக சிறந்த அப்பாவான உருவமே தெரியும்.

அடிக்கடி சமையல் கூடத்திற்குள் வருவதற்கு அக்கா அவரை அனுமதிப்பதில்லை. அதற்கு சரியான காரணமொன்றிருந்தது. இனிப்பு மற்றும் கொழுப்புச் சத்து அதிகமான உணவுகள் அவருக்கு ஆகாதென்று மருத்துவப் போராளிகளின் அறிவுறுத்தல். ஆனால் சமையலறையில் உதவி செய்யும் சாக்கில் அக்கா கவனிக்காத நேரங்களில் பிள்ளைகளுடன் சேர்ந்து இனிப்புகளை எடுத்து சாப்பிட்டு விடுவார்.

அக்கா வெளியில் சென்றதும் பாலச்சந்திரனுடன் இணைந்து இரகசிய நகர்வொன்றைச்செய்து சமையலறைக்குள் நுழைந்து பலகாரங்களைத்திருடும்போது அவர்களது தகவல் சொல்லிகளின் கவனக்குறைவால் அக்காவிடம் பிடிபட்டு முளிப்பார்கள்.

நல்லா பேச்சும் வாங்குவார்கள். சின்னக்கோபமும் செல்லக் கடிதலுமாக சுவையான அனுபவம்.

ஒரு முறை அண்ணன் விடுமுறையில் வீடு வந்தபோது அன்று தைப்பொங்கல் நாள்.அவர் கொண்டாட்டங்களை எதிர்பார்த்து செல்பவரல்ல இயற்கையாக அன்று அப்படி அமைந்துவிட்டது.

வீதிகள் அயல் வீடுகள் எல்லாம் பொங்கல் கொண்டாட்டத்தில் களைகட்டியிருந்தது. பட்டாசு வெடிக்கும் சத்தங்களும் சிறுவர்கள் ஆரவரிக்குமொலிகள் அண்ணனின் வீட்டுக்குள்ளும் கேட்டன. பாலாவுக்கு வெடிகொழுத்தி விளையாடவிருப்பம்.

அப்பா நாங்களும் பட்டாசு கொளுத்தி விளையாடுவோமா. அண்ணை பெரிதாகச்சிரித்தார்.அக்கா ஆத்பத்தான விளையாட்டு என்று மறுத்தார். அண்ணையும் அண்ணன் படையும் கொழுத்திப் போட்ட வெடிகளில் இலங்கை அரசாங்கமே ஆடிப்போய் இருக்கிறது.உலகம் வியந்து போய்திகைக்கிறது.

அண்ணையோ வீட்டில் குழந்தைகளோடு குழந்தையாக வெடிகொழுத்திவிளையாட தயாரானார்.

மெய்ப்பாதுகாவலர் வெடிகளை வாங்கிவர இரண்டு அணிகளாக பிரிந்து வெடி கொழுத்தி விளையாடினார்கள்.

விளையாட்டு விபரீதமாகிவிடக்கூடதென்ற பதட்டத்தில் அக்கா தலையிட்டு விளையாட்டாட்டைநிறைவுசெய்தார்.

தமிழீழத்திலும் வெளியேயும் வீரசாதனைகளைப்படைக்கும் பேரியக்கத்தின் தலைவன் தியாகத்தையும் வீரத்தையும் மீண்டும் எமது மக்களிடையே உருவாக்கிய தலைவன் பிள்ளைகளோடு சேர்ந்து பிள்ளைகளாகவே மாறிவிடுவார்.

வீட்டில் மட்டுமல்ல அறிவுச் சோலை செஞ்சோலை சென்றாலும் அவர் இப்பிடியே. குழந்தையாகமாறி குதூகலிப்பார்.

20ம் பக்கம் பார்க்க...

CHRIS BREAD BAKERY
Fresh Bread Baked Daily Tamil Eelam Style
Come in for all your Tamil Eelam Food catering services available
2617 Eglinton Ave. E, Toronto ON. M1K 2S2
Tel: 416-BOS GUYS (267-4897) | www.chrisbreadbakery.com

19ம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டில் ஓய்வாக இருக்கும் நேரங்கள் கொஞ்சம் என்பதாலும் அவருடன் கதைக் வேண்டிய, விடயங்கள் அதிகமென்பதாலும் வீட்டில் நிற்கும் போதெல்லாம் அவரது அருகாமையிலேயே கழியும் அக்காவின் பொழுதுகள். சொல்ல நினைப்பதில் சொல்லியது பாதி சொல்லாதது மீதியாக அவர்களது அன்பும் புரிந்துணர்வும் மிக இறுக்கமாக பிணைப்பு. அண்ணைக்கு பிடிக்காத அல்லது அவரது போராட்ட கொள்கைகளிற்கு மாறான எந்த விடயத்தையும் அக்கா செய்வதில்லை.

ஏன் நினைப்பது கூட இல்லை. அண்ணனையும் அப்பிடித்தான்.அக்காவின் உணர்கவுகளிற்கும் கருத்துகளிற்கும் மதிப்புக் கொடுப்பார்.

பிள்ளைகள் உரிய வயதை அடைந்ததும் பயிற்சி எடுத்து போராளிகளாக வேண்டும் என்று பிள்ளைகள் சிறுவயதிலிருக்கும்போதே அண்ணா சொல்லி வந்துள்ளார்.

ஆரம்பத்தில் அண்ணையின் வாதத்திற்கு எதிர்விவாதம் செய்வார்.

“பிள்ளைகள் படிக்க வேணும் படிச்சும் நாட்டிற்குச் சேவை செய்யலாம் தானே.”

இது அக்காவின் வாதம். வார்த்தைகளினுள்ளே தாயுள்ளம் பொதிந்து கனக்கும்.

“இப்ப சண்டையில் நிக்கிற பிள்ளையள் யார். அவையின்ர அம்மா அப்பா பிள்ளைகள் படிக்க வேணும் என்று தான் ஆசைப்படுகினம் முதலில் எங்களுக்கு நாடு வேணும் பிறகு பாக்கலாம்.”

இது அண்ணையின் தெளிவான பதிலுரை. அக்காவும் தாயென்ற நிலையிலிருந்து விட்டுக்கொடுக்க மாட்டார்.

தனது கருத்திற்கு பலம் சேர்க்க அருகில் நிற்கும் தலைவரின் உதவியாளரையோ அல்லது பாதுகாப்பிற்கு பெறுப்பாகவுள்ளவரையோ அழைப்பார். அவர்கள் சிரிப்போடு நழுவி விடுவார்கள்.

அக்கா தேசத்தின் விடுதலை மீதும் பற்றுக்கொண்டவர்தான். தாய்மையுணர்வில்தான் அவ்வாறு பேசுகிறார் என்று அண்ணைக்கும் தெரியும். தலைவரின் அம்மாவும் கடைசி மகன் போராடப்புறப்பட்ட ஆரம்ப நாட்களில இப்படித்தான் பிரிவுதுயர்கொண்டிருந்தார்.

பின்னர் வந்த நாட்களில் அவர் காலத்தின் தேவையை புரிந்துகொண்டார். அந்த தெளிவிலும் உறுதியிலும் தான் பஸ்ரியாம்பிள்ளை வீட்டில் வந்து மிரட்டிய போது

“உன்ர பிள்ளை எங்கே என்று தெரியும்” என்ற போது “பிறகேன் இஞ்ச் மினக்கெடுறாய் போவன் போய் பிடி” என்றார் பார்வதி அம்மா உறுதியாக.

காலமும் களமும் தானே மனிதர்கள் மாற்றுகிறது வரலாற்றை உருவாக்கிறது. நெருப்பில் எரியாத உலோகங்கள் விழும் போது மட்டும் புடம் போடப்படும் மற்றவை சாம்பலாகி விடும் வரலாற்றிலும் அப்படி தான்.

போராட்டத்தின் காரணமாக ஏற்படும் எந்த நெருக்கடியையும் அண்டை வீட்டினுள் கொண்டுவருதில்லை. பொதுவாகவே காரணமில்லாமல் யார் மீதும் கோபப்படுவதில்லை.

அவரவர் பிரச்சினைகளை அவர்களுடன் நேரடியாக பேசிக் தீர்த்து விடுவார். பேசாமலும் கவனிக்காமலும் விடுவதுகூட அவரது பாங்கு.

அதிகம் மன இறுக்கம் நிறைந்த நாட்களில் அண்ணை விடுமுறை எடுப்பதில்லை.அந்த இறுக்கமாக சூழ்நிலைகள் மாறி நிலமை சற்றுச்சுமுகமான பின்னர் தான் ஓய்வு கொள்வார்.

வீடு செல்லும் சில சந்தர்ப்பங்களில் விசேடமாக சில போராளிகளை அழைப்பதுண்டு. சாள்ஸ் மற்றும் துவாரகாவை படிப்பில் ஊக்கப்படுத்தும். நோக்கத்தில் சில போட்டிகளை ஏற்பாடு செய்வார். மெய்ப்பாதுகாவலர் அணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகள் மற்றும் அறிவுச் சோலை நிர்வாகத்தினருடன் எதிரியாக வீட்டில் சாள்ஸ் அன்ரனி துவாரகா கலைக்கோவன் மற்றும் அவர்களிற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அக்கா வீட்டில் மெய்ப்பாதுகாவலர். பொதறிவுப்போட்டிகள்,கலைநிகழ்ச்சிகள் வலைப்பந்தாட்ட மென்று ஏதாவதொன்று நடக்கும். போட்டி அவர்களின் வகுப்பறையில் நடைபெறும்.

அறிவுசார் போட்டிகளில் மெய்ப்பாதுகாவலர் அணிப்போராளிகளே அதிகம் செல்வார்கள். தலைவரும் ஒரு பங்களராக இருந்து கைதட்டுவதும் சிரிப்பதும் என்று அந்த இடமே குதூகலமாக இருக்கும்.

தொல்வியடைந்த சாள்சின் அணியை கிண்டல் செய்வார். “எப்படி எப்படி வந்தாங்கள் நல்லாய் தந்தாங்கள்” என்று தோல்வியை உறைக்கும் படி நக்கல் விடுவார்.

தாங்க முடியாமல் ஒருகட்டத்தில் சாள்ஸ் அழத்தொடங்கி விடுவான் அடுத்த போட்டி எப்ப என்றும் அதில் தாங்கள் செல்வதாக கூறிச் சமாளிக்க முயல்வான்.

வலைப்பந்தாட்ட த்தில் சாள்ஸ் அன்ரனி மற்றும் வீட்டில் நிற்பவர்கள் செல்வதுண்டு.

சாள்ஸ் அன்ரனி தலைமையில் அக்கா வீட்டு அணி வென்றாலும் தலைவர் விடமாட்டார்.

“நாங்கள் புத்திசாலிகள் எங்கள் பலம் மூளைதான்” என்று மெய்ப்பாதுகாவலர் அணி சார்பாகவே கதைப்பார். இப்படியான போட்ட்டிகள் இயல்பாக அறிவுத்தேடலுக்கும் பயிற்சி க்கும் வழிவகுத்தது.

வீட்டில் மட்டுமல்ல இயக்கத்தின் கட்டமைப்புகளிற்குள்ளே ஆரோக்கியமான போட்டிகளை ஊக்குவித்தார்.

பயிற்சியில் தாக்குதல்களில் சிறந்து விளங்கும் படையணிகள் பற்றியும் அதன் தளபதிகள் குறித்தும் பாராட்டிப் பேசுவார். கேட்பவர்களிற்கு தாங்களும் செய்யவேண்டுமென்று ஆர்வம் வரும். தவறுகள் குறித்துப்பேசும்போதும் சுயகவுரம் பாதிக்ககூடியவாறோ மரியாதைக்குறைவாகவோ பேசமாட்டார்.

அடுத்த முறை அந்த தவறை செய்ய எண்ணாதவாறிருக்கும்.கோபப்பட்டால் அவரது முகம் மாறி கண்கள் சிவந்திருக்கும் ஆனாலும் வார்த்தைகளில் தெளிவும் நிதானமும் இருக்கும். அந்த கோபத்திலும் கெட்டவார்த்தைகளோ மரியாதை குறைவான சொற்களோ அவரது வாயிலிருந்து வராது.

சாள்ஸ் அன்ரனி, துவாரகா பாதுகாப்பு காரணங்களிற்காக வெளியே சென்று படிக்கும் சூழல் இல்லை. ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு வகுப்புகள் மூலமே அவர்களது கல்வியைத் தொடர வேண்டிய நிலை. இருந்தாலும் ஒரு பாடசாலைக்குரிய சூழலில் படிப்பது போன்ற சூழலை உருவாக்க கண்காட்சி ஒன்றுஏற்பாடாகியது.

அந்த கண்காட்சியில் சாள்ஸ் நீர்மூழ்கி கப்பல் போன்றவை உருவாக்கிக்அதை நீர்த் தொட்டியில் விட்டான். இருந்தாலும் நீர் அழுத்தம் காரணமாக அது மூழ்க வில்லை மிதந்தது.

ஏமாற்றமடைந்தவன் மீண்டும் முயன்றான் முடியவில்லை. ஆனால் பின்னாளில் அவற்றின் மூலமான படிப்பினைகள் தரமான தயாரிப்புகளல உருவாக உதவியது. தங்கை துவாரகா எல்லைகளை வரையறுத்து அவற்றை கண்காணிக்கும் முறையை உருவாக்கியிருந்தார். நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் எப்படி கண்காணிப்பு செய்வதென்று விளக்கம் கொடுத்தார்.

மிகவும் சிலர் மட்டுமே பார்வையாளராக கலந்துகொள்ளும் அந்த நிகழ்வென்றாலும் அதற்காக அவர்கள் பல நாட்களாக உழைத்தார்கள்.

துவாரகா தனது விடயத்தை விளக்கப்படும் தருவதில் ஆர்வமாக இருந்தாள்.

“இப்ப நாங்கள் செய்யிற தகவல் கட்டுப்பாட்டு முறையை கண்ணி முறையில் இலகுவாகவும் துல்லியமாகவும் செய்யலாம்.

தமிழீழம் கிடைச்சால் இது நடைமுறையில் கொண்டுவரலாம்.”

அவர் சொல்லி முடிக்க முன்னரே தலைவர் நின்று துவாரகாவை நேராகப்பார்த்தார்.

“என்ன கிடைச்சால்....என்று இழுவை.

தமிழீழம் கிடைச்ச உடனே என்று சொல்ல வேணும்.” மகளின் வார்த்தைகளைத் திருத்திருத்தினார்.

எந்த கணத்திலும் தலைவர் தனது தமிழீழத் கனவை நிலைநிறுத்தியே அவரது எண்ணங்கள் இருக்கும்.

இந்த திருத்தம் பின்னாட்களில் துவாரகா வன்னி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்று அதன் இறுதியில் நிகழ்ந்த கண்காட்சியில் வெளிப்பட்டது.

அப்போது தொலை தூரத்திலிருந்து தொலைத் தொடர்பு மூலமான மருத்துவமுறை பற்றி விளங்கப்படுத்திக்கொண்டிருந்தார்

“தமிழீழம் கிடைச்ச உடனே எங்கட இடங்களில எல்ல இடங்களிலும் மருத்துவ வசதிகள் கிடைக்க கூடியவாறு இதைச் செய்யலாம்” என்று மிகவும் நம்பகமான முறையில் விளங்கப்படுத்தினார்.

தேசம் தான் அவரது வீடு
ஒவ்வோரு வரும் அங்கத்துவர்

ஆக்கம்.
துளசிச்செல்வன்.
உறுதுணை.
விசாலகன்
கலைக்கோன்.
சோபிதன்.



மேதகு மாவீரன்
தமிழ் அன்னை உவந்த திருப்பெரும்
தவப்புதல்வன்
தமிழீழ மக்கள் மனம் நிறைந்த மா
பெரும் தலைவன்
தலைமுறை கண்டிராத நிகரறு தமிழ் மறவன்!
தமிழினத்தின் தாகம் தனை
உணர்ந்த
தேசியத் தலைவன்
தரணியே வியந்த தமிழீழ போரின்
வீரத் தமிழன்!
பிரபாகரன் எனும் பெயர் உற்ற
மால் மருகன்!
புலியாகி புயலாகி போர்க்கள நெருப்பாகி
உயிராகி உணர்வாகி உண்மை
உள் ஒளியாகி
அருவாகி உருவாகி அயராத
தீர உளமாகி
அசலாகி அனலாகி அழியாத
வீர கனலாகி
அயனாகி அணியாகி உருவாகி இழகா உருக்காகி

உறவாகி உயிராகி இன்னுயிர் ஈக
உக் கிரனாகி
ஓரங்க வடிவாகி எதிரிப் படைகளின்
அந் தகனாகி
ஓயாத அலையாகி ஒப்பில் ஆதவன்
ஒளிக் கதிராகி
ஆறாத சுடராகி அக்கினிக் குஞ்சாகி
அருண் மொழியாகி
அம்புலி நிலவாகிஅணையாத தீப
ஒளியாகி
வெஞ்சமர் வென்றாடி வேலவன் வேல்
விழியாகி
வேல்விழிவேரோடிவெவ்வினையகல
வீரம் விளைவுமாகி
வேங்கைகள் .ரவைகளாகி வெற்பையை
துகள்களாகி
வெற்றிகள் குவித்த வேந்தே
அன்றும் இன்றும் என்றும் எங்கள் ஈழதேசத்தின்
தேவனே
ஓரொளி நிழலில் வாழ்கினும்
ஈழவர் எம் மனங்களில் வாழும்
ஈடு இணையிலா
சக்தி நீ
எங்கிருந்தாலும் வாழ்வீராக

-கவிஞர்.சிவா சின்னத்தம்பி-





பிரபாகரன் எனும் போதினிலே.
தமிழ் ஈழம் பிறக்கும் எம் மூச்சினிலே.
அவன் நாமத்தை நாம் தினமுரைத்தால்.
எங்கள் நெஞ்சினில் வீரம் பொங்கிடுமாம்.
கடல் அலை தவழும் வல்வை நகரினில்.
தமிழ் ஈழத்தை ஆள வந்துதித்தான்.
மன்னவன் பிறந்த நேரத்திலே.
எங்கள் மக்கள் மகிழ்ந்தனர் ஈழத்திலே.

வேலு பிள்ளையின் வாரிசானவன்.
வேல் கொண்ட வேலனாய் எதிரி மார்பை பிழந்தவன்.
வெங்களம் ஆடிட வேங்கையாய் எழுந்தவன்.
சுந்தரத் தமிழுக்கும் சுருதி சேர்த்தவன்.
பட்டம் பதவிக்கு ஆசை இல்லாதவன். பாரத படைக்கு பதில் சொல்லிப் போனவன்.
தமிழ் ஈழத்தின் தலைவன் இவனே தங்க தமிழுக்கு வாய்த்த குகனே.

வருடத்தில் ஓர் முறை மலர்கின்ற கார்த்திகைப் பூப் போல வாய் அசைத்தே.
உதிர்ந்திடும் வார்த்தையை கேட்பதற்காய்.
உலக மக்கள் விழித்திருப்பார்.
ஒருமுறை பேசிடும் வார்த்தையிலே.
ஓர் ஆயிரம் அர்த்தங்கள் பதிந்திருக்கும்.
உன் பேச்சினில் சத்தியம் நிலைத்து நிற்கும்.
தமிழ் ஈழமே மூச்சு என பதிந்திருக்கும்.

தங்கத் தமிழுக்கு வாய்த்த குகனே

2009 ஆம் ஆண்டோடு.
உன் குரல் கூட உலகெங்கும் ஒலிக்கவில்லை.
உன் உருவமும் மக்களுக்கு தெரியவில்லை.
முள்ளி வாய்க்காலோடு ஈழத்தின் ஆதவன் மறைந்து போனதா.
இல்லை வரலாற்றில் உன் நாமம் பதிந்து போனதா.
எது எப்படியோ ஈழத்தின் தலைவனாய் மக்கள் மனங்களில்.
என்றென்றும் நீங்காது நிலைத்திருப்பாய்.
தமிழ் ஈழத்தின் தலைவன் இவனே
தங்கத் தமிழுக்கு வாய்த்த குகனே.



தரைப்படை கடற்படை வான் படையோடு
மறத்திகள் படையுடன் மக்கள் படையும் திரட்டியவன்.
எதிரியைப் பந்தாடி வீரத்தை நிலை நாட்டினாய்.
உலகெங்கும் உணர்ச்சித் தமிழையும் விதைத்திட்டாய்.
அந்தக் காவியம் படைத்த கரும்புலித் தலைவனை.
கவிதை புனைந்தே போற்றிடுவோம்.
எங்கள் இதயத்தால் அவனை வாழ்த்திடுவோம்.
உன் 72 வது அகவையிலே.
ஈழ நாடும் தமிழ் மக்களும் நலம் பெறவே.
உன் நாமத்தை தினம்தினம் போற்றிடுவோம்.
மனம் நிறைந்தே உனை வாழ்த்திடுவோம்.
வாழிய நன்றாய் வாழியவே.
வரலாற்றுத் தமிழ் போல வாழியவே.

இது என்றென்றும் தாய் மண்ணையும் மக்களையும் நேசிக்கும் உங்களில் ஒருவனான நெடுங்கேணியூர் சிற்றர்.





பார்வதியம்மாளின் கருவகத்தில்

யூதகுலத்தில் யோகேபேத் கருவில்
ரஷ்யாவில் மரியா உலியானோவ் கருவறையில்
இந்தியாவில் பிரபாவதி போஸ் கர்ப்பத்தில்
ஈழத்தில் பார்வதியம்மாளின் கருவகத்தில்
இப்படி அவ்வப்போது
உடைந்த பனிக்குடத்திற்குள்ளிருந்து
மனிதர்களல்ல சில புனிதர்கள்
மறுபிறப்பெடுத்தனர்.
மறுபிறப்பில் எனக்கு நம்பிக்கையில்லை
கவிதை எழுதத் தொடங்கியபோது
ஒரு நம்பிக்கை ஊற்றெடுத்தது.

ஊரிக்காட்டுப் பள்ளியில்
விடுதலை ஊட்டவளர்த்த
யாரும் அறியா அந்த ஆசான்
அவர் தாள் பணிந்து
தலைவணங்குது தமிழினம்.

அரசாங்க வேலையில் சேர
நல்லாப் படிக்கணும்–என்று
அரசாங்க அலுவலர் அப்பா சொல்ல
அதுவல்ல என்பணி
நமக்கான அரசாங்கத்தையே
நாமதான் அமைக்கணும்
அதுவே என்பணியென்று சொன்னது
மாபிளுக்கு குறிவைத்து அடித்து
விளையாடிய பிள்ளை
வேலுப்பிள்ளையின் பிள்ளை.

யுத்தமும் அதன் சத்தமும்
மெத்த விருப்போடு
நாம் ஏற்றதெல்ல
போரும் அதன் வலியும்
விருப்போடு வந்தவையல்ல.
நெருப்புகள் எம் மீது எறியப்பட்டபோது
பருப்புக் கறியோடு
மாண் தின்னப் பிறந்தவரல்ல நாம்.

மாண்டியனுக்கும் பண்டாரவன்னியனுக்கும்
கரிகாலனுக்கும் பிறந்த,
எறிந்த எரி நெருப்புக்களை
எறி குண்டுகளாக்கி
எம்மையே எறி குண்டுகளாக்கி
வெடித்து வீர மறவரான
மண்டியிடாத நம் மாவீரம்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னும்
இனவழிப்பில்லையென்று
தேசியம் பேசாது ஏசிப்பிழைத்து
ஒரேதேசம் ஒரேசரக்கு (மன்னிக்கவும்)
ஒரே கொள்கை கொண்டோரில்
எந்தத்தவறுமில்லை,
அவர்களின் மரபணுவில்த்தான்
தவறும் கலப்படத்திரிபும்.
மறப்போம் மன்னிப்போம்.

கவிதை ஆக்கம்
மருத்துவர் போல் ஜோசேப்



தமிழனத்தின் பெருந் தலைவன்



வீறுகொண்ட தோற்றம் மக்கள்மீது கருணை பொழியும் பேச்சு ஈடிணைற்ற ஒப்பிலாத் தலைவன் தமிழினத்தின் விடுதலைக்காகத் தன்னையே ஈகம் செய்த மாபெருந் தலைவன்.

தமிழனம், தம் தேசத்தை - மொழியைப் - பண்பாட்டைப் - உரிமைகளைப் பேணிக்காக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டில்

மக்களை நெறிப்படுத்திய மாவீரன்.

தனித்தமிழ் பயன்பாட்டுக்கான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்திய செம்மல்.

உலகிலே தமிழ்மொழி தொன்மையான மொழி உலகச் செம்மொழிகளிலும் முதல்மொழி தமிழ்மொழி. தமிழ்மொழியே தமிழர் தேசத்திற் கோலோச்ச வேண்டும் எனக் கருதிய தமிழ்ப் பற்றாளன்.

எமது தாயகம் எங்கும் அமைந்துள்ள அங்காடிகளிலும், தெருப்பெயர்ப் பலகைகளிலும் தமிழ்மொழியே காட்சிதர வேண்டும் தமிழர் ஆட்பெயர்கள் அனைத்தும் தமிழ்மொழியில் வழங்க வேண்டும் தமிழ்மொழியே தமிழரின் அடையாளம் என்ற கோட்பாட்டைச் செயற்படுத்திய செயல் வீரன்.

தமிழர் சமூகத்திற் புரையோடிக் கிடக்கும் சாதிய மடைமைத்தனத்தை வேரோடு சாய்க்க முயன்ற சமூக சீர்திருத்தவாதி.

தமிழரின் மரபுவழிக் கலைகள்மீது தணியாத தாகம் கொண்ட ஈழக்கரிகாலன் அக்கலைகளில் நாட்டம் கொண்ட கலைஞர்கள் அனைவரையும் அணைத்து, ஊக்கம் கொடுத்த மாபெரும் தலைவன்.

தமிழினப் பெருந்தலைவன் பிறந்த பொன்னாள்

தமிழினத்தின் நினைவில் நிற்கும் திருநாளாகும்.

செந்தமிழ்ப் பேரொளி

காரைதீவான்.





காலம் சுமக்கும் கனவு

மலையென நிமிர்ந்த நினைவுகள் -
கடலென விரிந்த கனவுகள் -
வானென உயர்ந்த இலட்சியங்கள் -
எல்லாம் ஒரு பெயருக்குள்
இன்றும் உயிர்த்திருக்கின்றன!
புயலுக்குள் பூவாக அல்ல -
புயலையே எதிர்கொண்ட மரமாக,

இருளுக்குள் ஒளியாக அல்ல -
இருளைத் தாண்டத் தேடிய
விடியலாக,
காலத்தின் பக்கங்களில் பதிந்தவர்!
தாயின் விழியில் தவழும் பிள்ளைபோல்
ஒரு இனத்தின் நெஞ்சில் தவழும் நினைவு -
வேர்களைத் தேடும் மரம்போல்
தன் மண்ணைத் தேடும் உணர்வு -
மௌனத்திலும் பேசும் வரலாறு!
அகவை எழுபத்திரண்டு -
ஆனால் நினைவுகளுக்கு
வயதில்லை
கனவுகளுக்குக் கால
எல்லையில்லை
இதயத்தில்
பதிந்த பெயர்களுக்கு
மறதியின் மரணமில்லை!
காலம் என்னும் நதியில்
நினைவுகள் என்னும் தீபம்
அணையாமல்
மிதக்கட்டும் -
அண்ணனின் அகவை நாள்
வரலாற்றின் இதயத்தில்
ஒரு கவிதையாக மலரட்டும்!

பிரிதிவிராஜ் லோஜி
கனடா

தேசத்தின் சிற்பிகள்

வடகடல் அலையோரம் பிறந்தாயே தலைவா,
நிலத்தின் குரலாய் நிமிர்ந்தாயே தலைவா!
ஷதுயருற்ற மக்களின் வழிகாட்டும் விளக்காய்,
இருள் சூழ்ந்த பாதையில் ஒளியாக நின்றாய்.
செங்காந்தள் மலர்களும் சுடர்களும் மிளிர,
வரலாற்றுப் பக்கங்களில் தியாகங்கள் வளர,
எரிந்திடும் அகல்விளக்குச் சுடரின் வழியே
என்றும் வாழ்கிறது உன் வீரக் கனவே.
நீதியை வென்றெடுக்க இளைஞரின் சக்தியை
நீ அன்று உணர்த்திச் சென்றாயே:
"வாலிபர்களே ஒரு தேசத்தின் சிற்பிகள். போராட்டத்தின் உந்து சக்திகள்.
தூய மனமும், துணிவும், இலட்சிய உறுதியும் கொண்ட இளைய
தலைமுறையால் மட்டுமே
வரலாற்றை மாற்றி அமைக்க முடியும்."
எழுபத்திரண்டாம் பிறந்தநாளின் வேளையிலே,
உன் வார்த்தைகள் எதிரொலிக்கும் வையகத்திலே,
அதே இலட்சிய உறுதியோடு இளையோர் நிமிர்வார்,
நீ தந்த கனவை என்றும் சுமப்பார்!

விமல் நவரத்தினம்
ஐ.நா பிரதிநிதி, ஏபிசி தமிழ் ஒலி, மனித உரிமைகள்
செயல்பாட்டாளர்





பிரபாகரன் என்னும் மாவீரர்

“அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து; அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்த போது தான்; வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது.”

– தமிழீழ தேசியத் தலைவர்.

தன்னியல்பான விதி பிறக்கும் சூழ்நிலையை, உலக விடுதலைப் போராட்டங்களின் மீதும், கடந்த வரலாறுகளின் மீதும் கூர்மையான நுண்ணுணர்வு கொண்டவர்களால் மட்டுமே அவதானிக்க முடியும். அவதானித்தார் பிரபாகரன் என்னும் மாவீரர்.

தங்களின் மூதாதையர்களான திராவிடப் பழங்குடிகள் நிறைந்து வாழ்ந்த இலங்கைத் தீவினை, சிங்களர்களின் தேசம் என்று பௌத்த மதவாத பிக்குகள் நிலை நிறுத்திய வரலாற்றுத் திரிபினை அறிந்த போது தான் தன்னியல்பான விதி முதன் முதலில் தேசியத் தலைவரின் நெஞ்சினில் உருக்கொண்டது.

இலங்கை, காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்பு சிங்களப் பேரினவாதத்தின் ஆதிக்கம் தமிழர் பகுதிகளை விழுங்கத் தொடங்கியிருந்த காலகட்டம் அது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்பட்ட தமிழர்களுக்கான நிலப்பகுதிகளை தக்க வைத்துக் கொள்ளும், மறுக்கப்பட்ட உரிமைகள் கோரும் அறவழிப் போராட்டங்கள் தமிழர்களால் தொடர்ந்து நிகழ்ந்தது. சிங்களப் பேரினவாத அடக்குமுறையால் அமைதி வழி வலுவிழந்து போகும் சூழலில் தான் வரலாற்றின் தன்னியல்பான விதிக்கு ஆயுதத்தால் வடிவம் கொடுத்தார் தமிழீழ தேசியத் தலைவர்.

சிங்களக் கட்சிகளிடையே நடந்த ஆட்சி பிடிக்கும் ஆசைகளுக்காக, ஈவிரக்கமற்ற சிங்களப் பயங்கரவாத அரசக் கட்டமைப்புகளாலும், பௌத்த மதவாதிகளாலும் தூண்டி விடப்பட்ட சிங்களப் பேரினவாதத்திற்கு பலியாக்கப்பட்டது தமிழினம். அமைதியே வாழ்வியலாக வரித்து வாழ்ந்திருந்த தமிழினம் அனுபவித்த வலியே வரலாற்றின் தன்னியல்பான விதியான விடுதலை இயக்கத்தை உருவாக்க அவரைத் தூண்டியது.

“கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கும் தூண்கள்” என்கிற குறிக்கோளுடன் விடுதலைப் புலிகளை வழி நடத்திய சீரிய தலைமைப் பண்பாளர் அவர். சிங்கள அரசின் தரப்படுத்துதல் சட்டம் தமிழினத்திடமிருந்து கல்வியை பறித்தது. ஆனால் தமிழீழத்தில் விவசாயத்திலிருந்து விமானத் தொழில்நுட்பம் வரை தன்னிறைவு பெறும் கல்வியாக தேசியத் தலைவரால் தான் வாய்த்தது.

கலை, இலக்கியம், ஊடகம் என எங்கும் தமிழ், எதிலும் தமிழென தமிழ் அங்கு தான் நிறைந்தது. முப்படைகள் வரை தமிழ் பெயர்கள் எங்கும் வியாபித்தது. வெறும் விழாக்களைத் தலைமுறையாக கடத்துவதில் மட்டுமில்லை பண்பாடு. எளிய மக்கள் எந்த வித அச்சமும் கொள்ளாது நிர்வாகத்தை வழி நடத்தும் பொறுப்பில் இருப்பவர்களிடம் அணுக முடிகிறதோ, கேள்விகள் கேட்க முடிகிறதோ அந்த இடத்தில் தான் உண்மையான தமிழர் பண்பாடு நிலை கொண்டிருப்பதாக சொல்ல முடியும். அதனை அங்கு உருவாக்கிக் காட்டினார் தேசியத் தலைவர்.

காவல் துறை, நீதித் துறை, வங்கிகள் என அனைத்து அதிகாரங்களும் மக்கள் அணுகும் வண்ணம் பிரம்மாண்டங்கள் ஏதுமின்றி எளிமையாக செயல்பட்டது. நிலம் தக்க வைத்துக் கொள்ளும் இனமே இறையாண்மை உடைய இனமாக வாழும். இறையாண்மையில் துளியும் சமரசம் கொள்ளாமல் நிலம் மீட்க சமர் புரிந்த மாவீரர்களை வழி நடத்தி, பெரும் ஆயுத பலம் கொண்ட சிங்கள ராணுவத்தை விரட்டிய வெற்றி நாயகன் அவர். இனக் கட்டமைப்பின் தூண்களை தங்கள் உள்ள உறுதியால் தாங்கி நின்ற தீரர்களின் தலைமையாக ஒரு தன்னாட்சிப் பிரதேசத்தை, உலகத்தின் மனித மாண்பாளர்களே வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டியவர்.

இந்த தன்னாட்சியைக் கண்டு மனித நேயர்கள் வியந்தார்கள். ஆதிக்கவாதிகள் பயந்தார்கள். இன்று இலங்கையை பங்கு போட்டுக் கொண்டிருக்கும் ஆதிக்க நாடுகள் விதித்த சமரசத்திற்கு துணை போயிருந்தால் தமிழீழம் என்றோ கிடைத்திருக்கும். ஆனால் அதன் உயிர்ப்பான நிலங்களையும், வளங்களையும் வேட்டையாடி இந்த நாடுகள் களித்திருக்கும். தாங்கள் தோற்றாலும் இந்த உயிர்ப்பை தலைமுறைகளுக்கும் கையளித்து விட்டுப் போக வேண்டும் என்று தான் சமரசத்திற்குத் துளியும் இடங்கொடுக்காமல் ஆயுதங்களை மௌனித்தார்கள் புலிகள். சிங்களப் பேரினவாதமும், இந்தியப் பார்ப்பனீய அதிகாரமும் சேர்ந்து நின்றாலும் வெல்ல முடியாத ஆன்ம பலம் கொண்டவர்களை உருவாக்கிய பேருறுதி கொண்டவர் பிரபாகரன் அவர்கள்.

ஆண்களுக்கு வீரம், தீரம் என்றும், பெண்களுக்கு சாந்தம், அமைதி என்றும் நிறுவிய ஆணாதிக்க சமூகத்தில் பெண்களும் வீரத்திற்கும், தீரத்திற்கும் சளைத்தவர்களல்ல என நிரூபித்த பேராண்மையாளர் அவர். பெரும் இலக்கான நாட்டின் விடுதலைக்கு எழுச்சி கொள்ளும் பெண்களின் முன்பு அவர்களின்



உடலை இலக்காக வைத்து ஆணாதிக்கவாதிகள் கட்டி வைத்த வரையறைகள், சாதியம், மூடப் பழக்கங்கள் போன்ற அனைத்தும் உதிரும், பெண்களின் உள்ளார்ந்த அச்சங்கள் தூர விலகும் என்கிற தெளிவான கண்ணோட்டம் கொண்டு பெண்களை போராட்டக் களத்தில் ஈடுபடுத்தினார்.

நுகர்வை நோக்கிய பெண்ணியக் கூப்பாடுகளை வளர்த்தெடுக்கும் வலதுசாரித்தனத்திற்கு மாற்றாக இன விடுதலை நகர்வை நோக்கி உழைக்கும் மக்களை அணியப்படுத்தும் இடதுசாரிப் பெண்ணியவாதிகளை வளர்த்தெடுத்து, காலங்காலமாக புரையோடிப் போன பெண்ணிய அடக்குமுறைகளை வேரோடு பிடுங்கியெறிந்தார். ஆதிக்கவாதிகளை ஆட்டம் காண வைக்க பெண்களிடம் உறுதிகளை ஊன்றினார். ஆண்களுக்கு நிகரான பெண்களின் வீரம் சிங்கள ராணுவத்தை விரட்ட வீறு கொண்டு எழுந்தது.

27ம் பக்கம் பார்க்க...



26ம் பக்கத் தொடர்ச்சி...

பல வெற்றிகளை ஈட்டித் தந்தது. கரும்புலியாகும் தன் துறப்பையும் உவகையுடன் இனத்திற்கு ஈந்தது. வீரம் மட்டுமல்ல கலை, இலக்கியங்களில், கவிதைகள் புனைவதில், ஊடகப் பொறுப்பில், நிர்வாகத் தலைமையில் என விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகளெங்கும் பெண்கள் நிறைந்து இருந்தார்கள். மாவீரர்களாக இன்றும் தமிழர்கள் உள்ளமெங்கும் பரவி இருக்கிறார்கள்.

"எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முழு மனதுடனும், நேர்மையுடனும் தயாராக இருக்கிறோம்" என்றவர் அவர்.

நேர்மையான சமாதானம் அவருடையதாக இருந்தது. மேற்பூச்சு சமாதானம் அமைதி உடன்படிக்கை ஏற்படுத்தியவர்களிடம் இருந்தது. சிங்கள ராணுவம் புலிகளிடம் வீழ்ந்த பொழுதெல்லாம் சமாதானத் தூதுவர்கள் வந்தார்கள். போர் நிறுத்தம் ஏற்பட்டது. புலிகள் போரினால் சீர்குலைந்த பகுதிகளை சீரமைத்தார்கள். மக்கள் வாழ்வியலை மீளக் கட்டமைத்தார்கள். ஆனால் சிங்களப் பேரினவாத அரசு சர்வதேசமெங்கும் பயணித்தது. இலங்கையின் வளங்களை அடகு வைத்து ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. இவற்றை குறித்தெல்லாம் தூதுவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. ஆயுதங்கள் அளித்த சர்வதேசத்தின் சூழ்ச்சிகளும், பேரினவாதத்தின் வஞ்சகமும் இணைந்து தமிழினத்தைக் கொன்று குவித்தது. போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் இலட்சியங்கள் மாறாது என்ற தங்கள் கொள்கைக்கு உயிர் கொடுத்து விட்டு ஆயுதங்களை மௌனித்தார்கள் புலிகள். எண்ணற்ற புலிகளின் உயிர் ஈகத்தோடு தனது குடும்பத்தையும் தமிழீழத்திற்காக அர்ப்பணிக்கும் தியாகச் சுடரானார் தேசியத் தலைவர்.

"மக்களுக்காக போராடுபவராக ஆயுதம் கொண்டவர்கள் அதிகாரத்தையும் கைக்கொள்கின்றனர். இந்த அதிகாரம் தவறான வழியில் வழிநடத்தப்பட்டால் அது சர்வாதிகாரத்தில் தான் முடியும். அதனால் தான் எங்கள் இயக்கத்தை மிகவும் கட்டுப்பாடும், ஒழுக்கமும் கொண்டதாக வைத்திருக்கிறோம். இரக்கமற்றவர்களுக்கு எதிராகவே நாங்கள் இரக்கமற்றத் தன்மையை கடைப்பிடிக்கிறோம்." மக்களுக்காக ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்திற்கும், மக்களுக்கு அச்சம் தருவதற்கு ஆயுதம் ஏந்திய தீவிரவாதத்திற்கும் இடையினில் உள்ள வித்தியாசம் தேசியத் தலைவரின் கூற்றுகள் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள், விளங்கினாலும் சர்வாதிகாரத்தையே தங்கள் நோக்கமாகக் கொண்டவர்கள்

இளம் வயதிலேயே வல்வெட்டித் துறை நூலகத்தில் நாளிதழ்களும், புத்தகங்களும் படிக்கும் பழக்கம் கொண்டவர் அவர். அவற்றிலிருந்த தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை, சிங்கள காவல் துறையால் தமிழர்கள் சித்திரவதை என்கிற செய்திகள் ஒவ்வொன்றும் இரத்தத்தை கொதிக்கச் செய்தன என்றும், சாகும் முன்பு இரண்டு சிங்கள ராணுவத்தினரையோ, காவலர்களையோ சுட்டு விட வேண்டும் என்ற அந்த மிகச் சிறிய லட்சியமே வீட்டை விட்டு கிளம்ப காரணம் என்றும், அதற்கான வழியும், பயணமும் தான் தன்னினத்தின் விடிவு தமிழீழம் பிறப்பதில் தான் இருக்கிறது என்கிற முடிவெடுக்கச் செய்ததாகவும் நேர்காணல்களில் கூறியிருக்கிறார்.

குடிமக்களை எந்த வித வேறுபாடும் பார்க்காமல் காக்க வேண்டிய ஒரு அரசின் கட்டமைப்பே இனப்பாகுபாடு பார்த்து ஒரு இனத்தை ஒடுக்குமானால் அந்தக் கட்டமைப்பின் மீது ஒடுக்கப்பட்ட இனம் சீற்றம் கொள்வது இயல்பு. அந்த சீற்றத்தை ஒருமுகப்படுத்தும் வடிவமாக ஒரு தலைவன் முன் வருவான் என்பதே உலகப் போராட்ட வரலாறுகளின் விதியாக இருக்கிறது. தன்னினத்தின் மீது அளவிலா பற்று கொண்ட அவர் உணர்விலும் இந்த இயல்பான விதி பொருந்தியது. அந்த பயங்கரவாத அரசக் கட்டமைப்பின் மீது தன்னால் இயன்ற அளவு ஏதாவது செய்ய வேண்டும் என்று தூண்டியது. அவர் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டது. அந்த ஆயுதங்களையும் சிங்கள அரசக் கட்டமைப்புக்கு எதிராக பயன்படுத்தினாரே தவிர சிங்கள மக்கள் மீது பிரயோகிப்பதைக் குறித்து எந்த நிலையிலும் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

"பிரபாகரன் பிறப்பிலேயே வீரனென்றும், பதினைந்து வயதிலேயே தமிழீழக் கனவு பிறந்தது என்றும் கதையளக்கிறார்கள். ஆனால் எனக்கு அந்த வயதில் தமிழீழம் என்பது கூட தெரியாது. நாங்கள் தொடர்ந்த பாதையே இனி தமிழர்களுக்கான நிரந்தர விடியலாக தனித் தமிழீழமே அமையும் என்கிற லட்சியத்தை தந்தது" என்று படிப்படியான தங்கள் வளர்நிலைகள் தந்த லட்சியத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இன்று கதையளப்பவர்களின் முகமூடிகளை நாம் அவிழ்ப்பதற்கு ஏதுவான கருத்துக்களை முன்பே பதிவு செய்திருக்கிறார். இவ்வாறு தமிழ் சமூகத்தினிடையே வளரும் நச்சுக்களை போன்றவர்களின் குணங்களைக் கூட அறிந்த தீர்க்கமான அரசியல் பார்வை அவருடையது.

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று முழங்கினார் பாரதிதாசன். அந்த வரிகளுக்கு உயிர் கொடுத்தவர் தேசியத் தலைவர். மக்கள் மீது பேரன்புடைய மனிதனே ஆயுதம் ஏந்துவான். அமைதியான, கட்டுப்பாடான குடும்பத்தில், வறுமை என்பதையும் அறியாத வீட்டினில் பிறந்து தன்னினம் உரிமையுடனும், நிம்மதியுடனும் வாழ அந்த மனிதன் ஆயுதம் ஏந்தினார். வெள்ளையரை எதிர்த்து தீரத்துடன் நின்ற பாளையக்காரர்களும் ஆயுதம் ஏந்தினார்கள். இந்திய தேசியப் படையை கட்டியமைத்து விடுதலைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போசும் ஆயுதம் ஏந்தினார். அவர்களும் இறுதியில் வெள்ளையரிடம் தோல்வியையேத் தழுவினார்கள். தோல்வியைத் தழுவியதால் ஆயுதம் ஏந்திய அவர்களை தீவிரவாதிகள் என்று நமக்கு வரலாறு சொல்லித் தரப்படவில்லை. தியாகிகள் என்றே அழைக்கிறோம். ஆனால் சிங்களப் பேரினவாத வெறியாட்டத்திற்கு எதிராக, மக்களுக்காக ஆயுதம் ஏந்தியவரை, இன்று அனைவருடைய குரலையும் பதிவாக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்த செயலிகளில் புகுந்து கொண்டு நச்சுத் தன்மையுடன் பேசித் திரிகிறார்கள். ஆனால்,தமிழினம் இந்த உலகில் இருக்கும் வரை அவருடைய வீரமும் அவர் தமிழ் இனத்துக்கு செய்த தியாகமும் மறையப்போவதில்லை.

வாழ்கின்றான் பிரபாகரன் எம்மோடு!
செந்தமிழின் தீரம் சிதைந்திடா நெஞ்சினில்
வெந்தழல் மூண்டெழுந்த வேங்கையவன் - சந்தத்தில்
வீழ்ந்திடாத் தன்மையுடன் வீறுகொண்டு நம்முன்னே
வாழ்வான் பிரபாகரன் எம்மோடு!
களத்தினில் நின்றவன் காலத்தால் வீழ்ந்தெனக்
கற்பனைக் கூண்டுக்குள் காரிருளில் - தளத்தினில்
எண்ணங்கள் யாவும் எழுச்சியாய் ஏந்தியே
மண்ணின் மைந்தன் வாழ்கிறான்!
மாளாத கொள்கையும் மாவீரர் பாதையும்
நாளும் வழிநடத்த நம்முன்னே - தோளோடு
தோள்நின்று காக்கும் துணிவினில் என்றும்
நாள்மலராய் வாழ்கிறான் நம்முடன்!
சமர் பல கண்டவன் எங்கள் - தானைத்
தலைவன் பிரபாகரன் என்றும் வாழ்கிறான்
எம்மோடு பிரபஞ்சம் அவன் பெயர் ஒலிக்கவே!
மண்ணின் உரிமையை மீட்கவே முன்வந்து
விண்ணில் புகழ்பரப்பிய வீரவன் - கண்ணில்
கனலாய் ஒளிவீசிக் காலங்கள் கடந்தும்
நின்னிடை நம்முடன் நிலைக்கின்றான்!
புயல்போல எழுந்து புவிபோற்ற வாழ்ந்தவன்
செயல்போற்றும் மாவீரன் சீர்நெஞ்சம் புயமெடுத்துத்
தமிழர் விடியலுக்காய்த் தன்னுயிர் ஈந்தவன்
அமிழ்தாய் வாழ்கிறான் எம்முடன்!

- தங்பாலு







எங்கள் தலைவா நீர் எங்கே இருப்பாய் உங்கள் பிறப்பே எம் இனத்தின் சிறப்பா?

பிறப்பாய் பிறப்பாய்
மீண்டும் நெருப்பாய்...
திறப்பாய் திறப்பாய்
சிறப்பாய் வெடிப்பாய்...
இருப்போம் தமிழர் இனிமேல்
பொறுப்பாய்...

நெருப்பை சுமந்த
கருப்பை உமதே
இருப்போம் பொறுப்போம் ஈழம் எமதே...
நாளை நமதே - நம் நாடும் நமதே...

எங்கள் தலைவா நீர் எங்கே இருப்பாய்
உங்கள் பிறப்பே எம் இனத்தின் சிறப்பா?

பிறப்பாய் பிறப்பாய்
மீண்டும் நெருப்பாய்...
திறப்பாய் திறப்பாய்
சிறப்பாய் வெடிப்பாய்...
இருப்போம் தமிழர் இனிமேல்
பொறுப்பாய்...

நெருப்பை சுமந்த
கருப்பை உமதே
இருப்போம் பொறுப்போம் ஈழம் எமதே...
நாளை நமதே - நம் நாடும் நமதே...

விதைச்ச தெல்லாம் வீடு வரும்
புதைச்ச சனம் கோடி பெறும்
நினைச்ச படி நாடு எனும்
நீண்ட காலத் தீர்வு வரும்...

வன்னி மண்ணும் தந்த உம்மை
எண்ணி இன்னும் தேடுகிறோம்
இந்த தலைவன் இல்லை என்ற வார்த்தையில்தான்
வாடுகின்றோம்...

தலைவா இசைவா உந்தன் இழப்பை
யார்.....பொறுப்பா?
வா .....தலைவா....

எங்கள் தலைவா நீர் எங்கே இருப்பாய்
உங்கள் பிறப்பே எம் இனத்தின் சிறப்பா

பிறப்பாய் பிறப்பாய்
மீண்டும் நெருப்பாய்.....
இருப்போம் இருப்போம் தமிழர்
பொறுப்பாய்

நெருப்பை சுமந்த
கருப்பை உமதே
இருப்போம் பொறுப்போம் ஈழம் எமதே...
விழி மூடி அழு கின்றோம் விரல் நீட்டி

வா தலைவா....
வலி தீர வழியில்லை
பலி கேட்க
வா தலைவா....

குழி மூடி பகை தீர்க்க
குகை மூடி
வா தலைவா...
புலியாக ..... வா.....தலைவா...
புயலாக..... வா.... தலைவா...
அழி யாத தமி ழாக அழ கான சிரிப் போடு வெளி யாகி

வா தலைவா...
வா வா.... தலைவா...
எங்கள் தலைவா நீர் எங்கே இருப்பாய்
உங்கள் பிறப்பே எம் இனத்தின் சிறப்பா

பிறப்பாய் பிறப்பாய்
மீண்டும் நெருப்பாய்...
திறப்பாய் திறப்பாய்
சிறப்பாய் வெடிப்பாய்
இருப்போம் தமிழர் இனிமேல்
பொறுப்பாய்

நெருப்பை சுமந்த
கருப்பை உமதே
இருப்போம் பொறுப்போம் ஈழம் எமதே...
தலைவன் இல்லை என்றால் இங்கே
யார் பொறுப்பா?
யார்..... பொறுப்பா?
எங்கள் தலைவா நீர் எங்கே இருப்பாய்
உங்கள் பிறப்பே எம் இனத்தின் சிறப்பா?

பிறப்பாய் பிறப்பாய்
மீண்டும் நெருப்பாய்...
திறப்பாய் திறப்பாய்
சிறப்பாய் வெடிப்பாய்...
இருப்போம் தமிழர் இனிமேல்
பொறுப்பாய்...

நெருப்பை சுமந்த
கருப்பை உமதே
இருப்போம் பொறுப்போம் ஈழம் எமதே...
நாளை நமதே - நம் நாடும் நமதே...

திருப்பூர் சுடலை
மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர்
நாம் தமிழர் கட்சி



எழுபத்தி ரெண்டில்
எழுந்த வீரம் நீர்தானே...
வல்வெட்டி மண்
தந்த தீபம் நீர்தானே.

தமிழன் என்ற திமிரும் வரவே
வைத்தவர் நீர்தானே..
தாய்மண்ணிற்காக
தன்னுயிர்
தந்த தியாகம் நீர் தானே...

என்றும் எங்கும் வாழும்
தலைவர் நீர்தானே...
எங்கள் நெஞ்சில் வாழும் இறைவா நீர்தானே...

அடக்கி ஆண்ட இனத்திற்கு
நீர் கொடுத்தீர் விடுதலைப் பாடம்.
முடங்கிக் கிடந்த இனத்திற்கு
நீர் கொடுத்தீர் விடுதலைத் தாகம்.

சினம் கொண்டது சிறுத்தை,
எதிரியைக் கண்டு.
பயம் கொண்டது சிங்கம்,
உம்மைக் கண்டு.

வீழ்ந்துவிடா வீரம்,
உந்தன் வரலாறு.
மண்டியிடா மானம்,
உந்தன் புகழ் பேராறு.

ஆயுதம் கூட இன்று
மௌனிக்கலாம்.
ஆனால், உம் சகாப்தம்
ஒருபோதும் மௌனிக்காது.

உம் பெயர் சொன்னாலே...
எம் இனம் நிமிர்கிறதே
உம் கொள்கை கேட்டாலே...
எம் நெஞ்சம் நிறைகிறதே
கடல் கடந்தாலும்
வாழுதையா உம் பேரு...
காலம் கரைந்தாலும்
கேட்குதையா உந்தன் பேச்சு...

தோல்வி என்பது முழவல்ல...
முழவு என்பது வெற்றியும் அல்ல.
தலைவர் என்பவர் மனிதர் அல்ல...
அதையும் தாண்டிப் புனிதர் ஆவார்.

அவர் ஒரு இனத்தின்
நம்பிக்கைடா...
அவர் பேரை சொன்னா எதிரி நடுங்குவாண்டா...

ஈழமகள்-அபிசேகா.







கடலலை ஓயாத
கரையோர மண்ணில்,
கனவுகள் சுமந்தொரு
காவியம் பிறந்தது!
வல்வெட்டித்
துறையின் மடியினில்
உதித்து,
வரலாற்று
ஏட்டில் பெயரொன்று
பதிந்தது!
பகைவரின் அச்சமும்,
பாமரர் நம்பிக்கையும்,
பார்வை ஒன்றினில்
நிலைகொண்டு
நின்றது!
கொள்கையின்
உறுதியும்,
கொண்டதோர்
இலக்கும்,
காலங்கள் கடந்து
கதைபல சொல்லுது!
அஞ்சா நெஞ்சமும்,
ஆளுமைத் திறனும்,
அகிலம் வியந்திட
அடையாளம் ஆனது!
நெஞ்சத்தில் கனலும்,
நினைவுகளில்
வீரமும்,
நிறைந்தொரு
தலைவனின்
பிறந்தநாள் இதுவே!

from
R soorya
Montreal

GANESHA
TAKE OUT AND CATERING
Ganesh / Raj
Tel : 905-305-0522 | Cell : 416-358-5225
இலங்கை, இந்திய உணவகம் 411 Manhattan Dr,Unit #2,Markham,ON L3P 7P4



தமிழ் மானங்காக்க துடிக்கிற ஈழமுரசு பத்திரிகைக்கு நன்றி !

தலைவன் வாழ்க !

பொங்குமாங் கடலை அள்ளப்
புறப்பட்ட சிறிய கைபோல்.
தங்குமோர் இமயம் தன்னைக் கையில்
தாங்கிட நினைத்தாற் போல.
எங்குமே புகழை நாட்டி
இனத்தினைக் காத்த வேங்கை.
செங்கதிர் பிரபாகரனைச்
செப்புதல் எளிதோ சொல்வீர்?

சிறந்தநல் தியாகத் தீயால்
செந்தமிழ் விடியலானாய்!
அறந்தனை நெஞ்சில் ஏந்தி
ஆர்த்தெழுந்திட்ட வேங்கை!
பிறந்தமண் விலங்கொடிக்கப்
பிறந்த மாமனிதன் நீயே! உன்
பிறந்தநாள் கார்த்திகையே
மாவீரத்தின் மாதம் ஆச்சே!

ஈழத்தை அமைக்க நின்ற
இணையிலா வேங்கை யன்றோ!
குவலயம் எதிர்த்த போதும்
கொடும்பகை வென்றோன் அன்றோ!
வானொத்த விழிகளாலே
வரலாற்றை மாற்றியோனே!
நாளெல்லாம் தமிழர் நெஞ்சில்
நிலைத்திட்ட தலைவன் வாழ்க!

முகங்காட்டிப் பெயரெழுதி வைக்க வெண்ணா
முடிவற்ற பேரொளியாய் மண்ணில் வீழ்ந்த
அகங்காட்டி நின்றாரை நெஞ்சில் ஏற்றி
அழியாநல் வீரமுடன் போற்றி நிற்போம்!
யுகங்காட்டி நின்றபெருந் தியாகத்தாலே
உயிரீந்து தமிழிற்காய் உரமாய்ப் போனோர்
செகம்காணா வித்தாகி முளைப்பார் மீண்டும்
செங்கண்ணீர் தூவியிங்கு வணங்குவோமே!

-மா.சித்திவினாயகம்-


Gogulam
"Where you find Art"

கோகுலம் இது ஒரு கலைக் களஞ்சியம்
வயலின் கருவி, வீணை, மோரசிங் , கடம், தபேலா, புல்லாங்குழல்,நடன உடை (Custom), சாரீ, வேஷ்டி , குத்துவிளக்கு ,
இசைக்கருவிகள், பரத நாட்டிய அணிகலன்கள் (Jewellery), பரத நாட்டிய புத்தகங்கள்,CD,DVD சுவாமி சிலைகள், அனைத்து
அளவுகளிலும் சுவாமி மாடம், சுவாமிப் படங்கள், பூஜை பொருட்கள்,சுவாமிப் பாட்டு அனைத்தையும் பெற்றுக்கொள்வதுடன் காவடி, கரகம்,
மயில்தோகை, பொய்க்கால் குதிரை, கிரீடம் போன்றவற்றை வாடகைக்குபெற்றுக்கொள்வதுடன் அரங்கேற்றத்திற்கான மேடை அலங்காரங்களும் செய்து தரப்படும்
Phone:(001)416 265 2093
2654, Eglinton Avenue East (Brimley & Eglinton),Scarborough Ontario M 1 K 2 S 3 Canada | Opening Time:11 A.M To 9 P.M | www.gogulam.com

தேசியத் தலைவரின் பிறந்தநாள் வாழ்த்து

இன மொழி மண் விடுதலை
என்பது வெறும் சொல்லல்ல,ஒரு
இனத்தின் உயிர் மூச்சு! இனத்தின் உரிமைக்காக வரலாற்றில்
தடம் பதித்தவர்.

ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்க
முடியாத ஆயுதபோராட்டபாதையில்
தமிழீழ சுதந்நிர உணர்வை ஊட்டி ய
தமிழினத்தின் வரலாற்று நாயகன்..

விடுதலை என்பது வெறும் சொல்லல்ல,
ஒரு இனத்தின் உயிர் மூச்சு நம் இனத்தின் உரிமை தேடிய நீண்ட-
தொரு போராட்டம்.
மண்ணின் உரிமைக்காகத் துடித்தது ஒவ்வொரு நெஞ்சம்!

வெப்பத்தில் நின்றபோதும் நம்பிக்கையை விட்டதில்லை,
வலியின் நடுவிலும் எதிர்காலத்தை நம்பினோம்."
அமைதியை தேடினோம், ஆனாலும் மக்களின் வலி
மறந்ததில்லை."
விடுதலை போராளிகளின்
வழிநடத்தல் பேசும் வரலாறு,
போர்களின் வலியைச் சொல்லும் மக்களின் கண்ணீரும் வரலாறு!

ஆயுதப் போராட்டம் கடந்த காலத்தின் கடின வரலாறு,
அதன் பின்னணியில் மறைந்திருக்கிறது ஆயிரம் உயிர்களின்
சோகம்!

விடுதலை என்ற கனவைச் சுமந்தவர்கள் பலர்,
தியாகத்தின் நினைவுகளாய் வாழ்கின்றார்கள் இன்றும்!
வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற பெயர்,
ஈழ வரலாற்றில் விவாதிக்கப்படும் ஓர் அத்தியாயம்!

தேசிபத் தலைவர் மேதகு பிரபாகரன்
அவர்களின் பிறந்தநாள் என்பது
ஒரு மனிதரின் பிறந்தநாள் மட்டுமல்ல,
மொழி, மண், உரிமை, தேசியம்
பண்பாட்டை நினைவுகூரும் நாள்

தமிழரின் வரலாறு பேசும் வரை
தமிழீழ தேசியத் தலைவரின்
பெருமை உலகெங்கும் உயரட்டும்.
பிறந்தநாள் என்பது நினைவுகளின் நாளாகட்டும்,
பெருமகனின் பாதையில் நின்று,
தமிழினத்தின் பெருமை பாடி,
பிறந்த நாளினை வாழ்த்திடுவோம்
அன்புடன்

சுயகவி துரை
கனடா
26-12-2026



தலைவனை அகத்தனில் நிறுத்திடுவோம்

நீழலினை அகற்றிடும் ஒளியென
நீத்தியன் கருவினில் புத்தானே!
நளிரினை நாங்கிடும் மழையென
தமிழினம் நிமிர்ந்திட வைத்தானே!
கலிதனை களைந்திடும் புலியென
கார்த்திகை நீங்களில் பிறந்தானே!
நளிகடல் நடுவினில் கலமென
நம்மகன் தமிழ்நிலங் காத்தானே!

வரையினை தோள்களில் வைத்தொரு
வலிமையை மார்பினில் கொண்டானோ!
வரையரை வகுத்தொரு வண்படை
வடித்தவன் வல்லமை வரலாறோ!
திரைகடல் மீதினில் தினமுமே
தீண்டிடும் பகைவனுக் கூற்றுவனோ!
கரையினை யடைந்திட களம்பல
கண்டவன் போர்முறை புதிரன்றோ!

அடிமையின் விலங்கினை அறுத்திட
அவனியில் உளியென பிறந்தானே!
மிடிமையில் உழன்றிடும் தமிழரை
மீட்டிடும் கலமென வந்தானே!
விடுதலை யெனுமொரு கனவினை
விழிப்புடன் உயிர்ப்புற வைத்தவனே!
கொடியவர் வெம்மையைக் களைந்திடும்
கொற்றவன் எம்மினத் திறையன்றோ?

குடையினுள் தமிழரை இணைத்தவன்
கொற்றவன் தலைமகன் கரிகாலன்
படையது வரிப்புலிப் பெரும்படை
பாரினில் தமிழரின் காவலரண்
கடைநிலை வரிப்புலி சமர்வரை
கருநிழல் களைந்தவம் தலைவனது
விடுதலை யெனுமொரு கனவினை
விழுதென சுமந்துசெல் வீறுடனே!

தலைவனை அகத்தனில் நிறுத்திடு
தரணியில் அவன்வழி உழைத்திடவே
வழிவழி வாழ்ந்தநம் நிலத்தினை
விழியினால் ஒருகணம் நோக்கிடுநீ
எழுஎழு தமிழராய் எழுந்துநில்
எம்மினக் கொடியினுள் இணைந்ததில்
விழுந்ததும் நகைப்பவர் திகைத்திட
வெறிகொண் டெழுந்திடு உலகினிலே!

-ஆக்கம்: சீகி ஆனந்தன்-



எம் தலைவன் !!



கார்த்திகை 26 தமிழர் நெஞ்சம் கனக்கும் ஒரு நாள்.
மேதகு பிரபாகரன் என்ற பெயர்,
தமிழர் வரலாற்றில் போற்றப்படும் ஒர் அத்தியாயம் பிறந்த நாள் !!

தாய் மண்மீது நீர் கொண்ட பற்றும்
தன் இனத்தின் மீது நீர் கொண்ட உணர்வும் என்றும் அழியாது !!

வீரம், தியாகம், மானம் என்ற சொல்லுக்குள் பல அர்த்தங்களையும்
கண்ணீர்த் துளிகளையும் அடுத்து வரும் தலைமுறைக்கு
அழகாய் காட்டினீர் !!

காலங்கள் பல மாறினாலும் உம் வரலாற்றுச் சுவடுகள் என்றும் நீங்காத நினைவுகள்.
72வது அகவை காணும் உமக்கு எமது
சிரம் தாழ்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள் !!!

அன்புடன்
அனிஷ்ரா ஹரிகரன்
நாவலர் தமிழ்ப்பாடசாலை
நியூயோர்க் அமெரிக்கா



நிச்சயமாக! இதோ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் நினைவு நாளுக்காக, உணர்வுபூர்வமான அழகிய கவிதை.

தமிழினத்தின் நெஞ்சில் நீங்கா நினைவு!

நினைவு நாள் கவிதை

மண்ணின் மடியில் மறைந்தாலும், மக்களின் மனதில் மறையாதவனே! காலங்கள் கடந்து சென்றாலும், காவியமாய் நிலைத்திருப்பவனே!

தியாகத்தின் பாதையிலே தடம் பதித்த வரலாறே! தமிழர் நெஞ்சங்களிலே தங்கிவிட்ட நினைவுகளே!

உன் பெயரை உச்சரிக்கையில் உணர்வுகள் பேசுகின்றன! உன் வரலாற்றை நினைக்கையில் இதயங்கள் கனக்கின்றன!

காலம் பதில் சொல்லட்டும், வரலாறு சாட்சி சொல்லட்டும், எம் இனத்தின் நினைவுகளில் உம் பெயர் நிலைத்து நிற்கட்டும்!

மறக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது, நினைவுகளில் என்றும் வாழும் ஒரு வரலாற்றின் அத்தியாயம்!

நினைவில் வாழும் தேசியத் தலைவருக்கு எங்கள் இதயபூர்வமான நினைவஞ்சலி!

தமிழர் நினைவு உள்ளவரை, நினைவுகள் அழிவதில்லை!

செல்லத்துரை கோபாலகிருஷ்ணன்

Green Field
Construction Project Management

• Premium Custom Build Homes • Renovation & Remodeling • Commercial • Restaurants • Office Building Service • Design to Construction & Project Management to meet your needs • Quality workman-ship & an on time performance



Jude
416.986.9222
Email: consalas.j@gmail.com
Web: www.greenfield.ca
3 Fredrick Wilson Ave,
Markham, Ont.

“மேதகு” எனும் மந்திரம்

ஈழசரித்திரத்தின் அழியாத அத்தியாயமாய்,
ஈழத்தமிழர் நெஞ்சில் என்றும்
எரியும் நெருப்பாய்,
எழுபத்திரண்டு ஆண்டுகள் கடந்தும்
எம் ஈழமக்கள் மனங்களில் நிலைத்துநிற்கும்
தமிழினத்தின் தனிப்பெரும்
சரித்திரத்தின் வரலாறு.

மேதகு! இந்த மூன்றெழுத்துச் சொல்லை உச்சரிக்கும்போது ஏன் இத்தனை உணர்வுகள் நெஞ்சுக்குள் எழுகின்றன?

ஏன் இந்தப் பெயர் இன்றும் பலருடைய உரையாடல்களில் ஒலிக்கிறது?

ஏன் இந்த மனிதரின் வாழ்க்கை இன்றும் வரலாற்றில் மாற்றமுடியாத மையமாக இருக்கிறது? காரணம் ஒன்றுதான்!

அவர் வாழ்ந்த காலமும், அவர் உருவாக்கிய அரசியல் தாக்கமும், அவர் தலைமை தாங்கிய இயக்கமும், ஈழத்தில்.. ஈழத்தமிழர் வரலாற்றில் ஆழமான தடங்களைப் பதித்துள்ளன.

இன்று நாம் நினைவுகூர்வது ஒரு தனிமனிதரின் பிறந்தநாளை மட்டுமல்ல, ஒரு காலத்தின் வரலாற்றை, ஒரு சமூகத்தின் அரசியல் எழுச்சியை, பல தலைமுறைகளின் நினைவுகளில் பதிந்த ஒரு ஆளுமையின் வாழ்க்கை பயணத்தை.

பரந்த ஈழதேசத்தில் யாழ்குடாநாட்டின் வல்வெட்டித்துறை மண்ணில் வேலுப்பிள்ளை ஐயாவுக்கும் பார்வதிப்பிள்ளை அம்மையாருக்கும் 26 நவம்பர் 1954 மகனாகப் பிறந்தார் தலைவர் மேதகு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். தனது ஆரம்பக் கல்வியை வல்வெட்டித்துறை சிவபிரகாசா வித்தியாசாலையிலும், அதனை தொடர்ந்து வல்வெட்டித்துறை சிதம்பரம் கல்லூரியிலும் தனது பள்ளிப்படிப்பை தொடர்ந்தார். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அந்தச் சிறுவன், பின்னாளில் இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்த இருந்தார் என்பதை யாரும்

அறிந்திருக்கவில்லை. பள்ளிப் பருவத்திலேயே நூலகங்களில் தன் நேரத்தைச் செலவிட்ட மேதகு அவர்களுக்கு, புத்தகங்களே முதன்மை வழிகாட்டிகளாக அமைந்தன. போரியல் வியூகங்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகளை நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்தார். தியாக உணர்வும்,போராட்டச் சிந்தனைகளும் அவரைப் பெரிதும் ஈர்த்தன.

1970-களின் ஆரம்பத்தில் அப்போதைய இலங்கை அரசு கொண்டுவந்த “கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் தரப்படுத்தல் முறை” தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெரிதும் பாதித்தது. இதனால் எழுந்த இன ஒடுக்குமுறை உணர்வுகளும், தமிழ் மக்களின் உரிமை போராட்டத் தேவையும் அவரைப் பள்ளிப் பருவத்தின் இறுதியிலேயே முழுநேர அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டப் பாதையைத் தேர்ந்தெடுக்க வைத்தன. அந்தப் பாதை பின்னாளில் பல தசாப்தங்கள் நீடித்த ஆயுதப் போராட்டமாக மாறியது.

துணிச்சல் என்பது அச்சமின்மை மட்டுமல்ல! நெருக்கடிகளுக்கு மத்தியில் முடிவெடுக்கும் மனவலிமை எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை தான் நம்பிய கொள்கைக்காக, தன்னை நம்பிய மக்களுக்காக உறுதியுடன் நிற்கும் மனப்பாங்கு. தலைவர் பிரபாகரன் அவர்களின் ஆளுமையில் இவை அத்தனையும் நிறைந்திருந்தன. இதன் விளைவாக தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் “புதிய தமிழ்ப் புலிகள்” என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

பின்னர் 1976 ல் அந்த அமைப்பு முறைப்படுத்தப்பட்டு “தமிழீழ விடுதலைப் புலிகள” (Liberation Tigers of Tamil Eelam - LTTE) எனப் பெயரிடப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு சிறிய கொரில்லா அமைப்பாகத் தொடங்கிய இந்த “தமிழீழ விடுதலைப் புலிகள்” இயக்கம், படிப்படியாக வளர்ந்து தரைப்படை, கடற்படை, வான்படை மற்றும் உளவுத்துறை போன்ற பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட வலுவான ஒரு இராணுவக் கட்டமைப்பாக உருவெடுத்தது. தமிழீழப் பகுதிகளில் மக்களின் அன்றாட வாழ்வை முறைப்படுத்த நீதிமன்றங்கள், காவல்துறைகள், வங்கிகள் போன்ற தனியரசுக்குரிய நிர்வாகக் கட்டமைப்புகளை வெற்றிகரமாக நிறுவி நிர்வகித்தது.

இதன் வளர்ச்சியில் தலைவரின் அமைப்புத் திறனும், கட்டுப்பாட்டை வலியுறுத்திய தலைமைத்துவமும் முக்கியப் பங்கு வகித்தன. ஒரு தலைவரின் ஆளுமை என்பது அவரது தோற்றத்தில் மட்டும் இல்லை. அவர் உருவாக்கிய அமைப்பிலும், அவரது முடிவுகளிலும், கட்டுப்பாட்டிலும், சமூகத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கத்திலும் வெளிப்படுகிறது.

ஆயுதப் போராட்டத்தின் தீவிரமும் இலங்கை அரசினால் ஏற்பட்ட இராணுவ நெருக்கடிகளும் சர்வதேச நாடுகளின் தலையீட்டிற்கு வழிவகுத்தன. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த இந்த ஆயுதப் போராட்டம், 2009-ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப் போருடன் உச்சக்கட்டத்தை அடைந்தது. சர்வதேச நாடுகளின் பூகோள அரசியல் நகர்வுகள், ஆயுதத் தடைகள் மற்றும் இலங்கை அரசிற்குப் பல நாடுகள் வழங்கிய இராணுவ உதவியின் விளைவாகப் போர் முடிவுக்கு வந்தது. ஈழத்தமிழர் வரலாறு என்பது அரசியல் உரிமைகளுக்கான கோரிக்கைகளின் வரலாறு மட்டுமல்ல அது இழப்புகளின் வரலாறும் ஆகும். 2009 ஆம் ஆண்டில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்தபோதும், ஈழத்தமிழர் சமூகத்தின் அரசியல் உரிமைகள், நீதி, நல்லிணக்கம், காணாமல்போனோர் தொடர்பான கேள்விகள் முடிவுக்கு வந்துவிடவில்லை. இன்று போரின் வடுக்களும் நினைவுகளும் எம் கண்முன்னே நிழலாடினாலும், ஈழத்தமிழர்களின் உரிமைக்கான அரசியல் கோரிக்கைகளும் நீதிக்கான தேடலும் என்றென்றும் ஓயப் போவதில்லை.

இனவழிப்பிற்கு நீதி

2009-ஆம் ஆண்டு இறுதிப்போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதநேயச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. போரின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை மற்றும் சரணடைந்தோர் காணாமல் ஆக்கப்பட்டமை ஆகியவற்றை தமிழர்கள் “இனவழிப்பு” என்றே வரையறுக்கின்றனர். இதற்காக ஒரு சுதந்திரமான, சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றம் அல்லது ஒரு சிறப்பு சர்வதேச தீர்ப்பாயம் மூலம் மட்டுமே உண்மையான நீதியைப் பெற முடியும் என்பதில் ஈழதமிழ் மக்கள் உறுதியாக நிற்கின்றனர்.

சுயநிர்ணய உரிமையும் அரசியல் இறையாண்மையும் ஈழத்தமிழர்கள் தங்களை ஒரு தனித்துவமான தேசிய இனமாகப் பிரகடனப்படுத்தி, சர்வதேச சட்டம் வழங்கியுள்ள “சுயநிர்ணய உரிமை” அடிப்படையில் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையைக் கோருகின்றனர்.



அனைத்துலகக் கண்காணிப்பும் பொதுவாக்கெடுப்பும்

இலங்கை அரசின் தற்போதைய அரசியல் சாசனக் கட்டமைப்புக்குள்ளோ அல்லது உள்நாட்டு நீதி பொறிமுறைகளுக்குள்ளோ தமிழர்களுக்கான நீதியோ சரியான அரசியல் தீர்வோ கிடைக்காது என்பதால், சர்வதேச சமூகத்தின் நேரடிக் கண்காணிப்பு அவசியமாகிறது. ஈழத்தமிழர்களின் தாயகப் பகுதிகளிலும், உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் தமிழர்களிடையேயும் சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்பில் ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இந்த பொதுவாக்கெடுப்பின் மூலமே தமிழ் மக்கள் தங்களின் உண்மையான அரசியல் விருப்பத்தை உலகிற்கு ஜனநாயக முறையில் வெளிப்படுத்த முடியும் என்று நம்புகின்றனர். இவை அனைத்தும், ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் ஈழத்தமிழர்களின் உரிமைக் குரல் சர்வதேச அரங்கில் தொடர்வதற்கான முக்கிய அரசியல் மற்றும் நீதிசார் தூண்களாக விளங்குகின்றன. வரலாற்றுப் பக்கங்களில் எழுதப்பட்ட எழுச்சியும், போராட்டக் களங்களில் வெளிப்பட்ட மாவீரர்களின் அர்ப்பணிப்பும், இலட்சக்கணக்கான உயிர்களின் தியாகங்களும் வெறும் நினைவுகளோடு முடிந்துவிடுவதில்லை.

தலைவர் மேதகு.வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தலைமையில் தோன்றி, ஒரு சமூகத்தின் அரசியல் முகவரியை உலக அரங்கில் உரக்கச் சொன்ன ஈழத்தமிழர் போராட்டம், கள மாறுதல்களைச் சந்தித்திருக்கலாமே தவிர, அதன் அடிப்படை லட்சியமான சுதந்திரம், சுயமரியாதை மற்றும் இறையாண்மைக்கான தாகம் இன்னும் தணியவில்லை.தலைமுறைகள் மாறினாலும், வரலாற்றின் சுவடுகள் மனித மனங்களில் நிலைத்து நிற்கும் வரை, நீதிக்கான இப்போராட்டம் புதிய பரிமாணங்களில், ஜனநாயக வழிகளில், சர்வதேச அரங்குகளில் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். வரலாறு நமக்குச் சொன்ன பாடங்களும், தலைவர் விட்டுச்சென்ற இலட்சிய உறுதியும் எமக்கான எதிர்காலப் பாதையைத் தொடர்ந்து செப்பனிடும். “மேதகு” என்பது ஒரு தனிமனிதரின் பெயரல்ல் அது ஈழத்தமிழ் மக்களின் தடையற்ற விடுதலை உணர்வின் நித்திய மந்திரமாகும்!

Shampavi Paskaranathan
Member of Transnational Government of Tamil Eelam (TGTE)
United Kingdom.





எங்கள் அண்ணன் பிரபாகரன்

எங்கள் அண்ணன் பெயரை சொல்லவே அனைவருக்கும் ஒரு பண்பு இருக்கும் தமிழீழ மக்களாக இருந்தால் என்ன போராளியாக இருந்தால் என்ன அண்ணன் பெயரை தலைவர்,தலைவர் மாமா,அண்ணை இப்படி–ந்தான் உச்சரிப்பார்கள் அந்தளவுக்கு மதிப்பும் பற்றும் இருக்கும்.

அண்ணனை பற்றி எழுத நான் அவ்வளவு பெரியவன் இல்லை ஆனால் அண்ணனின் காலத்தில் வாழ்ந்தவனாகவும் அவரின் படையில் இருந்தவன் என்ற வகையில் நான் பெரும் பாக்கியம் கிடைத்துள்ளது அண்ணன–ால் எனக்கு கிடைத்த தற்பொழுதும் கிடைக்கின்ற மதிப்பு என்பது அளப்பெரியது.

ஆழ்கடல் மடியினில் அகழ்ந்தெடுத்த முத்தைபோல், எழுந்தமிழ் விடுதலையை இதயமதில் சுமந்தமகன், வாழுகின்ற பொழுதில் என்றும் தமிழ் செழிக்க உழைத்தமகன், பல்துறை வித்தகனாய் பவனிவந்த பேராளன், வெல்லுதமிழ் இனத்துச்சொல்அரிய செயல்வீரன், வாழ்வின் எல்லைவரை விழியலுக்காய் வளமார் பணிபுரிந்த பார்புகழும் சீராளன் அண்ணனை நினைத்தால் அதை எப்படி சொல்வதென்ற தெரியவில்லை அவரின் ஆளுமை தலைமைத்துவம் என்பதை கற்பனை செய்யவும் முடியாது இனி ஒருகாலத்திலும் எம்மினத்திற்கு இது போன்ற தலைவரொருவர் கிடைக்கவே மாட்டார் என்பது உறுதி. நாங்கள் கடுமையாக இறுதி போர் நடக்கும் போதும் நான் உட்பட எல்லா போராளிகளின் வாயில் வந்த சொற்கள் இறைவா நாம் வாழும் காலத்தில் அண்ணன் வீரச்சாவு என்ற சொல் எங்கள் காதுகளில் கேட்க கூடாது என்பதேயாகும் ஆனால் ..... உங்கள் படையில் ஒரு மாவீரராக மரணிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி
விசுவமடுவூரான்
வே.செல்வன்



தங்கத் தலைவனுக்கு தரணி போற்றும் இறைவனுக்கு அகவை 72



காலங்கள் மாறலாம்!
காட்சிகள் மாறலாம்!
ஆனால் எங்கள் மனங்களில்
தலைவரின் இடம் மட்டும்
என்றும் மாறுவதில்லை!

கூட்டத்தோடு கூடிவந்த
கோடிகளில் ஒருவனல்ல அவர்
போர்க்களத்தில் முன் நின்று
வழிவகுத்த ஒளி அவர்

சூழ்ந்திருந்த இருள் நீக்கி,
சோதனைகள் தாண்டிநின்று,
வீழ்ந்தவனைத் தூக்கிவிட்ட
தோள் வலியும் அவர்தான்?

அன்பினாலே ஆளுமையும்,
அறத்தினாலே நேர்மையும்,
துணிவினாலே வெற்றியையும்
தந்துநிற்கும் வீரன் அவர்!

தன்னலம் மறந்து, தன்இனம் காக்க, தன்னுயிர்
ஈந்தவர் பலருண்டு
தன்உதிரம் தந்த பிள்ளைகளையும்
தாய்மண்ணுக்கே ஈந்தவர் யாருண்டு?

சொந்த பந்தங்களை உடைத்தெறிந்து,
நாட்டு விடுதலைக்காய் களம் புகுந்தாய்
பாசக் கயிற்றை அறுத்தெறிந்து,
மக்கள் துயரையே சுமந்து நின்றாய்!
மனைவி, மக்கள் என அனைவரையும்
மண்ணின் விடியலுக்கு விதையாக்கி,
தனக்கென எதுவும் சேர்க்காமல்
சரித்திரம் படைத்த பெருந்தலைவா!
காலம் அழியலாம், கதைகள் மறையலாம்,
நீ செய்த தியாகம் அழியாது
மக்களுக்காகவே வாழ்ந்து மடிந்த
உன் பெயர் என்றும் மறையாது!

தமிழுக்கு ஓர் அடையாளம் பதித்து,
தலைமுறைகள் பேசும் வரலாறாக
நடம்பதித்தார் நம்ம தலைவர்

தளராது எங்கள் நம்பிக்கை,
தணியாது மக்கள் அன்பும்,
தலைவன் இருக்கிறான்
தரணியை ஆழ்வான் ஒரு நாள்!

அகவை 72 காணும் மேதகுவே!
உங்கள் வாழ்வில் நலமும் வளமும்
நீண்ட ஆயுளும் நிறையட்டும்!





ஈழத் தமிழனுக்கு அகவை தின வாழ்த்துகள்!

காரிருள் சூழ்ந்த கார்த்திகை மாதத்தில்
பார்வதி பெற்றெடுத்த பார்போற்றும் கரிகாலன்!
தாய் மண்ணின் விடியலுக்காய் தாயகம் அமைத்து
தமிழினத்தின் அடையாளம் காத்த தலைவனவன்!
புதுயுகம் படைக்கப் படையுடன் புறப்பட்டு
புயலென எழுந்து பகைப்புட்டுகள் உடைத்தவன்!
சரித்திரத்தின் சாதனையாளன் – நீ!
சத்தியத்தின் காவியத் தலைவன் – நீ!
மண்ணின் மானம் காத்து
காலத்தை வெல்ல வந்த வரலாற்றுக் காவியம் நீ!
ஈழப்பரம்பரையின் பாரி மைந்தனுக்கு
விடுதலைப் போராட்டத்தின் வீரமகனுக்கு
தேர் எடுத்துப் போர்தொடுத்து தமிழீழம் காக்க
வானெடுத்த வள்ளல் எங்கள் தலைவனவனுக்கு
வாழ்த்துகள் பலகோடி...
போர்க்களத்தின் நெருப்பையுண்டு போராடிய எம்
மண்ணின் மன்னன் மாவீரனுக்கு 72–வது
அகவை தின வாழ்த்துகள்!
தமிழினத்தின் தடயங்கள் உள்ளவரை
தலைவா, உன் புகழ் வானளந்து நிற்கும்...

– திருமதி.உஷாந்தி ரவிசங்கர் (ஆசிரியர்)
நாவலர் தமிழ் பாடசாலை– நியூயோர்க்





Shiva Sri S . JANARTHANA KURUKKAL

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்

TEL:647.449.6542 | aarthanan@hotmail.com aarthananyathu@hotmail.com



தாயகத்தில் வாழ்ந்தாலும், புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்தாலும், உலகின் எந்த மூலையில் நாம் வாழ்ந்தாலும், ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் தாயகத்தின் நினைவும், எம் மக்களின் நலன் குறித்த அக்கறையும் என்றும் உயிர்ப்புடன் இருக்க வேண்டும்!

தாயகம் என்பது வெறும் மண்ணல்ல் அது எமது அடையாளம், எமது வரலாறு, எமது மொழி, எமது பண்பாடு, எமது முன்னோர்களின் நினைவுகள், எமது அடுத்த தலைமுறையின் எதிர்காலம்!

எனவே, தாயகத்திற்காக நாம் செய்யும் பங்களிப்பு என்பது வெறும் உதவியல்ல் அது எமது மக்களுக்கான கடமை. சிறியதோ பெரியதோ, பொருளாதார உதவியோ, கல்விக்கான ஆதரவோ, சமூக மேம்பாட்டிற்கான முயற்சியோ, எம்மால் இயன்ற ஒவ்வொரு பங்களிப்பும் ஒரு குடும்பத்தின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு குழந்தையின் எதிர்காலத்தில் ஒளியேற்றும்.

தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றிப் பேசும்போது, அவரது துணிச்சலையும், அசைக்க முடியாத மன உறுதியையும், இலட்சியத்தின் மீது கொண்டிருந்த உறுதியான பற்றையும் நினைவுகூராமல் இருக்க முடியாது.

சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும், தான் கொண்டிருந்த இலட்சியத்தில் உறுதியாக நிற்பது, அசீசுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் முன்னால் மனம் தளராமல் இருப்பது, தனது நம்பிக்கைக்காக முழுமையாக அர்ப்பணிப்புடன் செயல்படுவது போன்ற தலைமைத்துவப் பண்புகள் வரலாற்றில் பேசப்படும் அம்சங்களாகும்.

அதேவேளை, எமது மக்களின் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு துணிச்சல் மட்டுமல்ல, விவேகமும், ஒற்றுமையும், கல்வியும், பொருளாதார வலிமையும், மனிதநேயமும் அவசியம்
என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று எமக்குத் தேவைப்படுவது ஒருவரை ஒருவர் குறை கூறும் மனப்பான்மை அல்ல் ஒருவரை ஒருவர் உயர்த்தும் மனப்பான்மை!
யார் உதவி செய்தாலும் பாராட்டுவோம்.
யார் உழைத்தாலும் ஊக்குவிப்போம்.
யார் நல்ல முயற்சியை முன்னெடுத்தாலும் அவர்களுக்குத் துணையாக நிற்போம்.

எமது சமூகத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அரசியல் பார்வைகள் மாறுபடலாம். அணுகுமுறைகள் வேறுபடலாம். ஆனால் எமது மக்களின் நலன்
என்ற பொதுவான இலக்கில் நாம் ஒன்றிணைய வேண்டும்.
எனவே, விமர்சிப்பதற்கு முன்பாகப் பங்களிப்போம் குறை கூறுவதற்கு முன்பாகக் கைகொடுப்போம் பிரிவுகளை வளர்ப்பதற்குப் பதிலாகப் பாலங்களை அமைப்போம்!

எமது இளைய தலைமுறைக்கு கல்வியைக் கொடுப்போம். எமது மக்களுக்கு பொருளாதார வலிமையை உருவாக்குவோம். எமது மொழியையும் பண்பாட்டையும் பாதுகாப்போம். தாயகத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து உழைப்போம்.

நினைவுகள் மட்டும் எமது அடையாளத்தைப் பாதுகாக்காது
செயல்களே தான் எமது எதிர்காலத்தை உருவாக்கும்!

எமது பலம் ஒற்றுமையில் இருக்கிறது. எமது உயர்வு கல்வியில் இருக்கிறது. எமது எதிர்காலம் அர்ப்பணிப்பிலும், மனிதநேயத்திலும், விடாமுயற்சியிலும் இருக்கிறது!

நாம் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களாக ஒன்றிணைவோம். எமது மக்களின் துயரங்களைத் துடைக்க ஒன்றிணைவோம். எமது உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் உறுதியுடன் குரல் கொடுப்போம். எமது அடுத்த தலைமுறைக்கு நம்பிக்கையான எதிர்காலத்தை உருவாக்குவோம்.

ஒற்றுமையுடன் பயணிப்போம்!
உறுதியுடன் செயல்படுவோம்!
மனிதநேயத்துடன் மக்களுக்காக உழைப்போம்!

–யூட்–



JCS PARTY HALL
Jude Francis
President and CEO
1686 Ellesmere Rd, Toronto, ON M1 H 2V5
Markham IMississauga I Toronto I Scarborough
JC'S GROUP 416.290.6186 | 416.290.6185 jc@jcsgroup.ca / www.jcsgroup.ca



எழுத்தமிழர் நாம்!

ஈழத்தமிழர் நாம் எனப் பெருமிதத்துடன்
உலகம் எங்கும் கூறித் தலைநிமிர்ந்தோம்.

அறத்தால், வீரத்தால், கொடையால், பண்பால்,
விருந்தோம்பலால் எங்கும் நம் அடையாளம் மாறாமல் நின்றோம்.

பாசத்தால், துடிப்பால் எல்லா இடங்களிலும் ஒன்றாக
ஒருமித்திருந்தோம்.

நமது மரபு, வளம், செல்வம் பெருக அயராது அதற்காக
உழைத்திருந்தோம்.

–

உள்ளங்கையளவு உலகமது எமது தாய்மண் – ஆனால்,

எம் தனித்துவமான முயற்சிகளும் கண்டுபிடிப்புகளும் கண்டு
உலகம் மிரண்டது.

யார் இத்தகைய செயல்களின் பின்னால் – என்ற ஆவலான
தேடல் தொடங்கியது.

இராவண மரபில் வந்த அறமும் வீரமும் மிக்க கரிகாலன் என
அவனை அறிந்தனர்.

கைகொடுத்து நட்புவலை விரித்துப் பார்த்தனர்.

"முடியவில்லை!"

ஒரு மரபினர் வேரூன்றுவதும் மட்டுமல்ல, வேற்றினத்தவருக்கு
அச்சுறுத்தலாக,
வீரியத்துடன் இருப்பதும், உயிரைத் துச்சமென இழப்பதுவுமே
பெரும் அச்சுறுத்தலானது.

உயிரைத் துறக்கத் துணிந்தவர்களின் தலைவன் எத்தகையவன்,
பெருவீரன் என்பதை உலகம் கண்டது.

அவன் கண்ட கனவும் அத்தகையது.

அவன் தொடக்கிய கனவதை மக்கள் தம் தோள்களிலும் மனதிலும்
சுமக்குன்றனர்.

அவனுக்காக அவன் மக்கள் இறுதிவரை கூடவே நின்றனர்.

இத்தகைய தலைவனைப் பெற்ற ஈழமக்கள் பெருமிதத்துடன்
தலைநிமிர்ந்து நடப்பதை
எல்லோராலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

வாழ்வில் வஞ்சகம் செய்யப் பலர் மானிட ரூபத்தில் வந்தனர்
சாபமென

சாப வலையில் ஈழத்தமிழர் மட்டும் சிக்காமல் இருந்திருந்தால்!!
நாம் சிக்காமல் இருந்திருந்தால்!!

இன்றைய எம்நிலத்தின் கண்ணீர் கதைகளை நாம் காண வேண்டி
இருந்திருக்காது

அப்படிப்பட்ட ஓரினமாக இருந்திருந்தோம்
அப்படி இருந்திருந்தால்!.
பல வரலாறுகளை உலக வரைபடத்தில் மாற்றியிருப்போம்.

இன்றும் எம் தலைவனின் கனவுகளை இதயத்தில் சுமக்கிறோம்.

அவன் பிறந்தநாளில் அவன் தியாகத்தையும் அவன்
பெருமையையும் எண்ணி மெய்சிலிர்க்கிறோம்.

நாம் வாழும் காலத்தில் இத்தகைய தலைவனைப் பார்க்கக்
கிடைத்ததை எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழினம் இருக்கும்வரை அவன் பெயர் வாழும்.

தமிழீழம் என்ற பெயர் பசுமையாக இருக்கும்.

அன்புடன் தலைவனுக்குச் சமர்ப்பணம்

– சுகி.விது

J.R.B
GROUP CORPORATION
Best Rate Mortgage Arranged
Almost All Services Available
அனைவரும் வீடு வாங்க
சிறப்பான சேவை...

R.R.Rajkumar B.Com (Hons) M.B.A
BUSINESS LOAN 25 K to 500,000 New Business
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகருக்கான
சிறப்பான சேவை
Welfare, ODSP, Medical visit translation services
* Loans * Mortgages
* Insurance * Visa * Real Estate
* Credit Counseling
* Master Card
647-289-6164
416-655-5577



கார்கால மேகமது கடலை தொட்டு
கர்ப்பத்தில் உருவானான் பிரபாகரன்

கும்பிட்டுத் திசை ஓடி ஒழித்தோர் முன்னே
தமிழுக்கு கொடி நட்டான் பிரபாகரன்

தரை கடல் வான் எனப் படை சமைத்து
தமிழீழம் தாய் என்றான் பிரபாகரன்

ஆணுக்கு சரிநிகர் பெண்கள் என்றே
சமதர்மத்து நீதிவான் பிரபாகரன்

அறம் மீறாப் போர்க்களம் தான் தொடக்கி
அதிலே தான் வரை உருகினான் பிரபாகரன்

வானாகி மண்ணாகி ஒளியாகியே
தமிழ்வாழும் நாள் வரை இறைவனே
பிரபாகரன்

வானுயரும் கோபுரமாய் ஒருவன் வந்து
வளர் பிறையின் குளிராகி கலந்து நின்று
தேடி வரும் கன்றாகித் தமிழை சார்ந்து
போக்கி வைத்தான் இன்னல் எல்லாம்
புலியாய் வென்று

அன்று முதல் இன்று வரை அறத்தை காத்து
போர் முறைக்குள் புதியதொரு புறத்தை
சேர்த்து
தலைவன் எனும் தகமைக்கே மகுடம் சேர்த்தான்..
தமிழ் நிலத்தை உலகளவில் உயர்த்தி சென்றான்.

எண் எழுத்து யாவையுமே தொலைத்து
ஏன் பிறந்தோம் என்ற நிலை ஆச்சு
மண் இருக்கும் நிலை கண்டால் மறவன்
மறுபடியும் மானப் போர் நடத்த துடிப்பான்

மௌனம் கலைத்து எங்கள்
மண்ணில் மறுபடி இறங்கி விடு
வதனம் மறைத்துக் கொள்ளு
கவனம் கயவர் நிறைந்திருக்கு

மண்ணும் மகிழும் அந்த
மன்னன் வரவு எண்ணில்.
விண்ணும் நீர் சொரியும்–இந்த
தென்னவன் வருகை தன்னில்.. ...

– கவிப்புயல் சரண்

கலைக்கோவில்
KALAIKOVIL ACADEMY OF FINE ARTS - CANADA
The first authorized Local Training Centre for Annamalai University - Canada Campus (2012 to 2015)

பரதநாட்டியம், மிருதங்கம், புல்லாங்குழல் அனுபவமும் தராதரமும் கொண்ட முன்னணி ஆசிரியர்களினால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன

Kalaikovil Performing Arts Centre 1-50, Innovator Ave.,Stouffville - ON, L4A 0Y2
"Miruthangakalaavithagar" Shri. Kugenthiran Kanaganthiram Director
"Naatya Narthaki" Smt. Vanitha Kugenthiran Director
Professional Studio with a modern stage facilities available for rent. STUDIO LOCATIONS Markham, Scarborough, Brampton, Mississauga, Stouffville, Ajax, Oshawa & Woodbridge
HEAD OFFICE:
30, New Delhi Drive, Unit-64, Markham - Ont. L35 089, Canada. Tel: (416) 292-2425 Toll Free: 1 (877) 513-2425 Fax: (647) 799-1024 Website: www.kalaikovil.com Email: info@kalaikovil.com

தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

Markham Meadow's

8100 Steeles Avenue East, Markham, ON. L6B 1A8

மாவீரர் துயிலும் இல்லம்

மாவீரர் நாள்

நவம்பர் 27-2026 - வெள்ளிக்கிழமை



Tamil National Heroes Day

To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism



ரொறன்ரோ
27-11-2026
வெள்ளிக்கிழமை
TORONTO
Markham Meadow's
8100 Steeles Ave. East
Markham, ON L6B 1A8

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி

மொன்றியல்
27-11-2026
வெள்ளிக்கிழமை
மாலை 5:00 மணி
Maison Athlétique
2125 Rue Lily - Simon,
Montréal, QC H4B 1V3

ஒட்டாவா
27-11-2026
வெள்ளிக்கிழமை
மாலை 5:00 மணி
OTTAWA

Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

கனகாம்பிகை தங்க மாளிகை

சிங்கப்பூரில் வடிவமைக்கப்பட்ட புதிய டிசைன் நகைகளை அனைத்தும் மலிவு விலையில் விற்பனையாகின்றன

CONTACT NOW 416-269-7197 | kana4gopalakrishnan@gmail.com
3160 Eglinton Ave,East,Unit 3 Scarborough,ON M1J 2H3



தலைமகனுக்கு வாழ்த்துப்பா...



காலத்திருமகனாய்
ஞாலத்தில் உதித்த எங்கள்
கரிகாலச் சோழனுக்கு
அகவைநாள்...

ஊருக்கு உறவுக்கு
பெயருக்கு புகழுக்கு
உழைத்தவர் மத்தியில்
வேருக்காய் உழைத்த
வேந்தனே...

நின்படை என்பது
தமிழீழ தேசத்தின்
தன்னிகரற்ற
தனிச்சேனை

நின் வார்த்தை என்பது
அறம் பூசிய சொற்களில்
அமிழ்ந்து வெளிவந்த
அக்கினிச் சுவாலை..

சூரிய தேவனே!
சுடர் மிகு நேசனே!!
வங்கக்கடலை அளந்த
வேலுப்பிள்ளை மைந்தனே,

பார்வதி அம்மாவின்
பவித்திர உதிரத்தில்
புலிப்போத்தாக
வளர்ந்தாய் ஐயா,

தமிழின வரலாற்றில்
தளராத உம் நாமம்
தரணி உள்ளவரை
தலை நாமமாய் வாழும் ஐயா...

கோபிகை.





அறம் வென்ற புலிமறத்துக்கோர் புகழ்ப்பா...

மந்திரப் புன்னகையோனே
மாதவம் செய்தோமே
மன்னவன் நீ எமக்கு
மாபெரும் தலைவனாய் கிடைக்க...

ஒற்றைச் சிரிப்பில் எதிரிக்கு
ஓராயிரம் பதில் நீ கொடுப்பாய்
அற்றைத் தீங்களென உலகம்
அறிய பெரும் போர் செய்தாய்....

தரைப்படை வான்படை கடல் படை
கரும்புலிப் படையென பெரும் புலி நாற்படை
கட்டி நாடுகள் யாவும் பெரும் அச்சம்
கொடுத்தாய்...

அடுப்பங்கரையே தஞ்சமென கிடந்தவரை
அதிசயங்களை அண்ணாந்து பார்த்தவரை
வான் முட்டும் சாதனைப் பெண்களாய்
வலிமையின் ஆற்றலாய் மாற்றிய
பெருமைக்குரியவர்.

அறப்போர் வென்றவனே
அகிலம் வியக்க நின்றவன்
புறமுதுகிடா வீரம் வளர்த்தவன்
புயலென படைவளர்த்து
புறநானூற்று வீரம் வென்றவன்.

அகவை தினம் உங்களுக்கு
அலை அலையாய் வரும்
தடை உடைத்து இனத்தின்
விடுதலைக்காய் போராடும்
வீரத் தலைமகன் உங்களுக்கு
வீண்முட்டும் சாதனைகளின்
பெருந்தலவனுக்கு
வீரத் தமிழச்சியின் அகவை தின
நல்வாழ்த்துக்கள்.

– தமிழ்மொழி

KEV Tax Services
FREE
EFILE SERVICE
STARTING FROM
$ 24.99
CORPORATE INCOME TAX
BOOKKEEPING & ACCOUNTING SERVICES
PERSONAL INCOME TAXES
QUALITY SERVICE WITH REASONABLE FEE
FREE YEAR- ROUND CUSTOMER SERVICE
CORPORATE AND SOLE PROPRIETOR BUSINESS REGISTRATION
அழையுங்கள்:
Ganthiy Selvarajah (B.A Sri Lanka)
2889 Lawrence Avenue, East (Basment) M1P 2S8
(Brimely/Lawrence)
Tel: 416-841-1866 | Fax: 1888.841.8829
Email: ganthiy@rogers.com
website: KEVTAX.com



தலைவர் பிறந்தநாள்!

தலைவர் பிறந்தநாள்!
தமிழர் நிமிர்ந்த நாள்!
மொழியாய்! விழியாய்!
வழியாய்! எங்கள் உயிராய்!
உணர்வாய்! அறிவாய்!
ஆற்றலாய்! மானமாய்!

வீரமாய்! எங்கள் முகமாய்!
முகவரியாய்!
பெருமை மிகு அடையாளமாய்!

பெரும்வீர வரலாறாய்
இருப்பவன் இவன்!
சுதந்திரக் காற்று! சுடரொளிக்
கீற்று!
புரட்சியின் பெரும் வெடிப்பு!
தமிழ்த்தேசிய இனத்தின்
உயிர் துடிப்பு!

ஆண்டுப் பலவாய் அன்னைத்
தமிழ் அருந்தவமிருந்து பெற்ற மகன்!
புறநானூற்று வீரம் படைத்த மறவன்!
மண்ணின் மானம் காக்க
வீரர் படை நடத்தியவன் இவன்!
அடிமை வாழ்வீலும் உரிமைச்சாவு
உயர்ந்ததென்று உணர்த்தியவன்!
இவன் எங்கள் தலைவன்!

எங்களின் அன்புமிகு அண்ணன்!
எங்களின் ஆண் தாய்!
தலைவன் பிறந்தான்!
தமிழன் நிமிர்ந்தான்!
எம் தலைவரின் பிறப்பு!
தமிழினச் சிறப்பு!
நிறைந்த அன்புகொண்டு
நெஞ்சார வாழ்த்துகிறோம்!
வாழ்க! வாழ்க! எம் இறையே !
வாழ்க! வாழ்க!

நீ நிறைய!
பிறந்தநாள் வாழ்த்துகள்!



காலத்தலைவனுக்கு ஒரு கவி வாழ்த்து



எழுத முடியாத
இக்கட்டான நிலையில்
என் பேனா...

வாழ்ந்தக் கூட முடியாத
வரையறைகளில்
என் முகநூல்....

எம் இனந்து ஐயனுக்கு
இன்று பிறந்த தினம்

எங்கள் மனம்
நிறைந்த தினம்...

இதயம் அது
குளிர்ந்த தினம்...
இயற்கை நந்த
இன்ப தினம்....

எங்கள் ஐயப்பன்,
இனம் காத்த மெய்ப்பன்....

எழும் போற்றும்
இடையப்பன்.

தமிழ் காக்கும்
தலைவன் இவன்..

தரணி வென்ற
தமிழன் இவன்...

காலம் நந்த
கரி காலன் இவன்....

சேர சோள பாண்டிய
எழு வேங்கை – எம்
வீர மணி கண்டனே...

தமிழ் தேசியத்து
காவலனே...
தேசம் தேடும்
தீரு முலக் கணபதியே...

தமிழ்ச் சங்கத்
தாபதியே....

எழுந்து இரட்சகனே!!
எமக்கெல்லம்
இறையானவனே..!!

இனிய பிறந்த தின வாழ்த்துகள்
எங்கள் ஐயனே
ஐயப்பனே..!!!

சுரேஷ் தர்மா





எல்லைப்படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச்சமர்களில் நேரடியாகபங்குகொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப்பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் நேசப் பற்றால் ஈர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்கு கொள்வது எமது நேசத்திற்கு பெருமை சேர்க்கிறது எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண்டும் அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவுபெறச் செய்யும்.”

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்



LONGO LAWYERS
Our Clients aren't just a file
Each are our life
SHENTHURAN SUBRAMANIAM
B.SC., M.B.A., J.D.
(PERSONAL INJURY LAWYER)
4950 YONGE STREET, SUITE 401, TORONTO, ON. M2N 6K1
www.longolawyers.ca
CELL: 647-992-2417 | FAX: 416-800-6247 | PHONE: 416-800-4232 | TOLL FREE: 1-844-800-4232



எங்கள் தமிழ்த் தலைவர்
72வது அகவை சிறப்புக் கவிதை
எங்கள் மண்ணின் தலைவர்,
எங்கள் மனதில் வாழும் தலைவர்!

தமிழை நேசித்த தலைவர்
தமிழர் மனதில் நிறைந்த தலைவர்!

ஈழ மண்ணை மறக்க மாட்டோம்
எங்கள் வரலாற்றை இழக்க மாட்டோம்!

தமிழ் எங்கள் தாய்மொழி
தமிழர் நாம் என்பது பெருமை!
எங்கள் மொழி என்றும் வாழட்டும்!
எங்கள் பண்பாடு என்றும் வளரட்டும்!

தமிழ் வாழ்க! தமிழீழம் வாழ்க!!

நாவலர் தமிழ் பாடசாலை
வான்சன் விஜயராஜா

மேதகு தலைவர் பிரபாகரன்

அன்பு பண்பு ஒழுக்கம் இவற்றுக்கெல்லாம் எடுத்துக்காட்டு பிரபாகரன்
ஆர்வமுடன் நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த உத்தமனார்
இயல்பான சிரிப்பு பணிவான பேச்சுடன் மற்றவரை மதிக்கும் பெருந்தகையாளர்
ரூடவ்ழத்தின் பெருமைதனை உலகறியச் செய்த சிந்தனையாளர்
உலகையே தமிழீழத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த மாண்புடையவர்
ஊக்கமுடன் செயலாற்றி வீரமறவர்களைத் தோற்றுவித்த செயலாளர்
எத்தடை வந்தாலும் கொண்ட குறிக்கோளில் தவறாத உத்வேகம் உடையவர்
ஏற்றமுடன் நாட்டு மக்கள் வாழ்வு வளம்பெற வழிவகுத்த மதிப்பாளர்
ஐயந் திரிபறவே போர்க்கலை கற்றதனால் அறப்போர் புரிந்திட்ட அறிவாளர்
ஓற்றுமையே பலமென்று வாழ்ந்து காட்டிய பண்பாளர்
ஓர்மமுடன் காரியங்கள் ஆற்றியதால் மனத்திண்மை கொண்ட மாண்பாளர்
ஔவியம் பேசாத பண்பினால் நட்பு வட்டத்தை அரவணைத்த பண்பாளர்
கள்ளங் கபடமில்லாத பேச்சினால் எல்லோரையும் கவர்ந்திட்ட குணவாளர்
காலமெல்லாம் சேர்ந்து வாழ நல்ல துணை கிடைத்திடப் பாக்கியம் பெற்றவர்
கிட்ட நெருங்கிய எதிரிப் படையணிகளைச் சிதறடித்த வல்லுனர்
கீர்த்தி மிகுந்தவரென்பது அவரது பேச்சினிலே தெரிந்திடுமே
குணக்குன்று இவரென்று குவலயமும் போற்றிடுமே
கூர்மையுடன் புத்திமதி சொல்லி யாவரையும் இயக்கிய தலைவர்
தமிழரின் எழுச்சியின் அடையாளம் நம் தேசத்தின் கலங்கரை விளக்கம்
எங்கள் பிரபாகரன் என்று நாமும் மார்தட்டுவோம்

சாந்தி அரவிந்தன்
மொன்றியல்

LUXSHAN KANDASAMY
NEW HOME & CONDOS EXPERT
We Specialize in Finding New Home & Condos Project that Meet Your Investment Needs. Register on our website to be informed about upcoming new projects & Receive First Platinum/ VIP Access to Price Lists.
416-888-8044
NEW RELEASE HOME.COM
NEWRELEASEHOME.COM


எங்கள் இதயத்தில் வாழும் தேசியத் தலைவர் 72வது அகவைச் சிறப்பு மலருக்கான கவிதை



ஒரு மனிதனின் பெயர் மறையலாம்,
ஆனால் வரலாற்றில் பதிந்த நினைவுகள்
மறையாது.
காலங்கள் மாறலாம், தலைமுறை மாறலாம்,
தமிழர் நெஞ்சில் பதிந்த உணர்வுகள் மாறாது.

ஈழ மண்ணின் வரலாற்றில் உங்கள் பெயரும்
ஒரு பக்கமானது.
பல கனவுகளும் நினைவுகளும்
எங்கள் மக்களின் கதைகளில் கலந்தது.

தாய்மொழி தமிழ் எங்கள் உயிராக
தாய் மண் எங்கள் அடையாளமாக
எங்கள் பண்பாடும் வரலாறும்
தலைமுறைகள் தாண்டி வாழட்டும்!

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
வரலாற்றை மறந்துவிட மாட்டோம்
கடந்த காலத்தின் பாடங்களை உணர்ந்து
நல்லதொரு எதிர்காலம் அமைத்திடுவோம்

எழுபத்தீரண்டு அகவை நினைவில்
எண்ணற்ற வரலாற்றுப் பக்கங்கள்
உங்கள் பயணத்தை நினைவுகூரும் வேளையில்,
எங்கள் மனதில் பல உணர்வுகள்!

இளைய தலைமுறை நாங்கள் இன்று,
தமிழினத்தின் பெருமையைச் சுமந்து நிற்போம்
எங்கள் மொழியையும் பண்பாட்டையும் காத்து
தமிழர் அடையாளத்தை உலகறியச் செய்வோம்!

தமிழ் எங்கள் மூச்சு!!
தமிழர் வரலாறு எங்கள் பெருமை!!
எங்கள் அடையாளம் என்றும் அழியாது!

நாவலர் தமிழ் பாடசாலை
வினேயா விஜயராஜா

மனையும் மனை சார்ந்த நிலமும் மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
இத்துறையில் 23வருடங்களுக்கு மேலாக உங்களுடன்
Mahesan
Subramaniam BBA
Broker / Principal Broker
416-816-0141
mahesans@royallepage.ca
Mortgages | Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds | Debt Consolidation – Refinance
* No Income Confirmations *
Call me more details...
Bus: 416-282-3333
ROYAL LEPAGE Independently Owned and Operated
ignite Realty, Brokerage
KAPITAL CARE MORTGAGE INC. Lic# 12623
MLS MULTIPLE LISTING SERVICE
REALTOR

எங்கள் தங்கத் தலைவனுக்கு அகவை 72.



அன்றொரு காலம் ஈழத்தமிழன் அடிமையாய் அல்லற்பட்டு
அவதிப்பட்டு அடி எடுத்து வைக்க முடியாமல்
ஆண்டவனிடம் அழுது புலம்பி வரம் கேட்டான்.
அல்லலுறும் தமிழருக்கு ஆதரவு கொடுக்க அவதார புருஷ
னை தரணிக்கு அனுப்பினார் ஆண்டவன்

வல்லாதிக்க வெறியர்களை வதம் செய்ய வல்வையில்
உதித்த உத்தம புத்திரன் வேலுப்பிள்ளை பார்வதி
பெற்றெடுத்த
மைந்தன் பிரபாகரன் என்னும் பேராளன்!
வரலாறு மனிதர்களை பிறப்பிக்க சில மனிதர்கள் தான்
வரலாற்றை படைக்க பிறப்பெடுக்கின்றார்கள்
“ பிரபாகரன்” தனி மனிதன் பெயர் அல்ல அது ஒரு
வரலாற்றின் பெயர்!
பிரபாகரன் என்பது அகவையற்றது முதுமை அற்றது
வரலாறு போல் வளர்ந்தே செல்வது.
துடிக்கும் கண்களில் பொறி பறக்கும் பார்வையில் மீடுக்கு
மீசையில் எடுப்பான தோற்றம் தொடுத்த போரில் எல்லாம்
கொடி பறக்கும் வெற்றி விழியலை நோக்கி நடை போட்ட
தலைவா !
என்றும் தமிழர் விடி வெள்ளி வாழ்க!வாழ்க!
அந்த அவதார புருஷனுக்கு அகவை 72 தமிழர் நாம்
வணங்கி வாழ்த்துகின்றோம் காலம் பல கண்ட வீரன்
தமிழர் குலம் ஒன்று சேர்ந்து தமிழன் பலம் எதுவென்று
சிங்களத்துக்கு காட்டி ஈழம் என்ற நிலத்தில் தமிழர் தலை
நிமிர வைத்த எழில்
வேந்தனுக்கு அகவை 72 அவரை அகம் நிறைந்து
அன்புடன் வாழ்த்து கிறோம்
முப்பத்து முக்கோடி தேவர்கள் புச்சொரிய !!
பல்லாயிரம் மாவீரர்கள் வாழ்த்துரைக்க !!
உலகெல்லாம் வாழ் ஈழத்தமிழர் வணங்கி நிற்க நாமும்
ஒருவராய் மனம் நிறைந்து வாழ்த்துகிறோம் !.
தமிழ்த் தாயின் மகனே வாழ்க!வாழ்க! தமிழினத் தலைவா
அண்ணன் பிரபாகரனே வாழ்க!
வாழ்க!
கலையரசி கருணாகரன்
அதிபர் ,
நாவலர் தமிழ்ப் பாடசாலை
நியூயோர்க்
ஐக்கிய அமெரிக்கா

SS SHABRI SECURITY SERVICES

Mano Thangavel
Director
Tel: 416-859-0683
manoshabri25@gmail.com

SS SHABRI SECURITY SERVICES

மலர்ந்தது 26 பிரபாகரஜணியஸம்



பிறந்தது பிரபாகரம்
உயர்ந்தது தமிழினம்
வியர்ந்தது சர்வதேசம்

பாய்ந்தது வேங்கையினம்
வீழ்ந்தது பகையினம்
வென்றது மாவீரம்

உயிர்த்ததே பிரவாகமாய்
சேர்ந்ததே இதயமெலாம்
மலர்ந்ததே 26 பிரபாகரம்

உய்த்துவிடும் உயிரெல்லாம்
மொய்த்து பார்க்கும் உலகெலாம்
ஓங்கிவிடும் ஓர்மமெலாம்

பாவீரமெலாம் பாவிசைக்க
நா வீரம் நடுங்கி நலிந்தோட
தா வீரமென்றே திறக்கும்
தாள்கள் எலாம்

ஓயாத உச்சாடனமாய்
சொரிந்ததே தமிழினம் ஈழ
வானத்தில் உதயசூரியன்
திசைநோக்கி

உயிர் ஆன்மா கீர்த்தியில்
கலந்து வாழும் .கதாநாயகன்
மேதகு �ூபிரபாகரம்.
ஃபிரபாகரணிய
வாழ்த்துகள் !!

வாழ்க இந்த வையமும்
உணர்வுள்ள மக்களும்
உள்ளவரை !!
எங்கிருந்தாலும் எங்களின்
இதயம் உங்களுக்காகவே
துடிக்கும் அண்ணா!!

இவள்
தமிழ்மகள் பரா.(ரம)

MEGA Duct
MEGA ATTIC INSULATION LTD
SPRAY FOAM INSULATION
INSULATION REMOVAL
ADVANTAGES
• LOWER UTILITYBILLS
• SAFER HOME STRUCTURE
• BETTER INDOOR AIR QUALITY
• BETTER INDOOR COMFORT
• LESS HVAC WEAR AND TEAR
Cost - effective investment that lasts for Many years to come
LOWEST PRICE GUARANTEE
We do Heating and Cooling Rebate Available
Attic Installation & Heating and Cooling
CALL NATHAN
416-709-3030 / 416-286-2416



அறம் வென்ற புலிமறத்துக்கோர் புகழ்ப்பா...

மந்திரப் புன்னகையோனே
மாதவம் செய்தோமே
மன்னவன் நீ எமக்கு
மாபெரும் தலைவனாய் கிடைக்க...

ஒற்றைச் சிரிப்பில் எதிரிக்கு
ஓராயிரம் பதில் நீ கொடுப்பாய்
அற்றைத் திங்களென உலகம்
அறிய பெரும் போர் செய்தாய்....

தரைப்படை வான்படை கடல் படை
கரும்புலிப் படையென பெரும் புலி
நாற்படை கட்டி நாடுகள் யாவும் பெரும் அச்சம்
கொடுத்தாய்...

அடுப்பங்கரையே தஞ்சமென கிடந்தவரை
அதிசயங்களை அண்ணாந்து பார்த்தவரை
வான் முட்டும் சாதனைப் பெண்களாய்
வலிமையின் ஆற்றலாய் மாற்றிய
பெருமைக்குரியவர்.

அறப்போர் வென்றவனே
அகிலம் வியக்க நின்றவன்
புறமுதுகிடா வீரம் வளர்த்தவன்
புயலென படைவளர்த்து
புறநானூற்று வீரம் வென்றவன்.

அகவை தினம் உங்களுக்கு
அலை அலையாய் வரும்
நடை உடைத்து இனத்தின்
விடுதலைக்காய் போராடும்
வீரத் தலைமகன் உங்களுக்கு
விண்முட்டும் சாதனைகளின்
பெருந்தலவனுக்கு
வீரத் தமிழச்சியின் அகவை தின
நல்வாழ்த்துக்கள்.

தமிழ்மொழி





அடையாளம்

தென்னிந்தியாவில் கீழடி நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழர் குடியேற்றங்கள் ஏற்பட்டு விட்டது. இதே போல அதே காலத்திலிருந்து அரசியல் ரீதியாகவும், தமிழர்கள் அதிகாரமும் ஆட்சித் தலைமையும் உடைய இனமாக உருவாகி விட்டனர். தென்முனையிலுள்ள தெவுந்தர தென்னாவரம் ஆலயம் உட்பட பஞ்ச ஈஸ்வரங்கள் தமிழரின் தொன்மைக்கும் ஆண்மீக உயர் நிலைக்கும் அறவழி வாழ்வீற்கும் உயர் நாகரிகத்திற்கும் சான்றுகளாக இன்றும் உள்ளன. ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத் தமிழர்களின் அரசியல் அதிகாரம் உட்பட அனைத்து உயர்வுகளும் கருவருக்கப்பட்டது மட்டுமன்றி அடையாளம் இல்லாத அடிமைத் தமிழனாகவும் ஆக்கப்பட்டனர்.

ஆனாலும் ஒற்றைத் தலைவனாக நின்று ஈழத் தமிழருடைய அடையாளத்தை தூக்கி நிமிர்த்தி நாங்கள் யார் என்பதை எங்களுக்கும் தமிழன் யார் என்பதை சகோதர இனத்திற்கும் உலகத்தவர்க்கும் களத்தில் நின்று யதார்த்தத்தில் காட்டிய தலைவன் பிரபாகரன்.

தமிழ்நாட்டு தமிழர் என்ற அடையாளமும் சிறப்பும் தமிழ்நாட்டுத் தமிழருக்கு இருந்தாலும் அங்கேயும் அடக்கப்பட்ட தமிழனாகவும், அடையாளத்தை உணராத தமிழனாகவும், உணர்ந்தாலும் நிச வாழ்வில் உணர்வுடன் தடம்பதிக்க முடியாத தமிழனாகவும்தான் வாழ்ந்து வந்தனர். ஆனால் பிரபாகரன் என்ற தலைவனால் ஒட்டுமொத்த தமிழ்நாட்டுத் தமிழர்களும் உணர்வு பெற்ற தமிழராய், ஓங்கி ஒலிக்கும் சக்தி கொண்ட தமிழராய் உயர்வு பெற்றனர். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஆட்சியதிகாரத்திலுள்ள தமிழர்களும் தேசியத் தலைவரை தமக்கு வழிகாட்டும் தலைவனாக வெளிப்படுத்தி புத்தூக்கம் பெற்றனர். அதே போல் ரினிடாட் போன்ற சிறிய சிறிய தீவுகளில் மொழியையும் கலாசாரத்தையும் அடையாளத்தையும் இழந்து தவித்துக் கொண்டிருந்த தமிழர்களும் தமிழனென்று கூறி தலை நிமிர்ந்து நிற்பதைப் பார்க்கின்றோம். பிரபாகரன் என்ற ஒற்றைத் தலைவனால் ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் மறுமலர்ச்சி பெற்றது. நாம் தமிழர் என்ற அடையாளம் உலகெங்கும் வேர்விட ஆரம்பித்து விட்டது.

எம் கண்முன்னே எம்முடன் வாழ்ந்து உலகம் உள்ளவரை வாழப்போகும் எமது தலைவனின் பிறப்பு எமக்குக் கிடைத்த வரமல்லவா.

- வல்வை நடா -



தலைவன் பிறந்தநாள் தலைநிமிர நின்றநாள்!



வாராது வந்தபெரும் பேறான மாமணியாய்
வல்லையில் கருவான வேங்கை – ஈழ
வரலாறாய் உருவான காந்தள்!

காரிருளில் மூழ்கிமிகு பேரிடரில் வீழ்ந்தவினம்
கரையேறக் கைதந்த தென்னன் – தமிழை
அரசேற்றி அணிசெய்த மன்னன்!

பாராண்ட இனங்கண்ட கீழான
நிலைபோக்கப்
படைகட்டிப் புலியாகிப் பாய்ந்தான் – வந்த
பகைவெட்டிக் களமாடி ஓய்ந்தான்.

உண்மைக்கும் அறத்துக்கும் உயிராகித்
தமிழ்மான
உணர்வுக்கு உரந்ந்ந்த தலைவன் – மண்
உரிமைக்கு உயிர்தந்த முதல்வன்!

விண்ணின்று தெறிக்கின்ற மின்காந்த ஒளியாகி
எதிரிக்கு இடியாகி நின்றான் – நம்
இனத்துக்கு மழையாகி வந்தான்.

சோதனையை வேதனையைப் பாதகத்தை
வென்றுபெரும்
சாதனைகள் பலவீட்டி வைத்தான் –
பிரபாகரத்தை நிலைநாட்டி வைத்தான்!

இனிமையாய்ப் புதுமையாய்
இளமையாய் இருக்கின்ற
இன்தமிழ் போன்றநல் வடிவம் – அவன்
எம்மினம் கண்டபே ருலகம்!

தலைவன் பிறந்தநாள் தலைநிமிர நின்றநாள்
நடைகள் உடைந்தநப் போது – பல
தளைகள் தகர்ந்ததெனப் பாடு!

நிக்கற்ற இனத்துக்குத் திசைகாட்டி யாய்வந்த
நிருமகன் தனைவாழ்த்து வோமே – பிறந்த
நிருநாளை நாம்பொற்று வோமே!

ஆக்கம் – கவியாசான் மாவிலி மைந்தன்
சீ. சண்முகராஜா

MT CPA CA
MAYURAN THARMALINGAM
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
• Audit • Review Engagement • Notice To Reader • Business Advisory • Controllership Services • Corporate Taxes • Personal Taxes • Financial Planning • Cra Audits • Payroll • Bookkeeping
MAYURAN
THARMABALAN, CPA,CA,LPA
647-748-6344
647-989-6298
647-748-6444

www.tharmabalan.ca | 402 - 1585 Markham Road, Scarborough ON M1B 2W1

ஆற்றல் மிகு தலைவரின் அற்புதமான சிந்தனைகள்



எனது பொறுப்பாளர் தலைவரைச் சந்திக்க அவரது வடமராட்சிப் பாசறைக்குச் சென்றபோது நானும் போராளிகள் சிலரும் அவருடன் சென்றோம். உள்ளே தலைவருடன் அவர் நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருந்தார். பகற் சாப்பாட்டு நேரம் வந்தது. தலைவரது பாசறைப் போராளிகளுள் ஒருவர் உணவுக்காக எங்களை அழைத்தார். நாங்கள் உண்ண ஆரம்பித்தவுடன் அந்த மேசைக்குத் தலைவர் வந்தார்.

எல்லோரது உணவுத் தட்டுக்களையும் பார்த்துக்கொண்டு வந்தவர், என்னைச் சுட்டிக்காட்டி இந்தத் தம்பிக்கு மீன் பொரியல் வைக்கவில்லை என்று சொன்னார். பரிமாறும்போது அது தவறவிடப்பட்டதை நான் கவனிக்கவில்லை. அத்துடன் அதுவொரு சிறுவிடயம். அதைத் தலைவர் சுட்டிக்காட்டித் திருத்தியது எனக்கு ஒரு பக்கம் வியப்பாகவும் மறுபக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தலைவர் என்று இருப்பவர் இப்படியெல்லாம் போராளிகளது உணவு விடயத்திற் கூட அக்கறையாக இருப்பாரா! என்று நான் வியந்தேன். அதுவே எனக்கு இனபுரியாத மகிழ்ச்சியையுமளித்தது. ஒரு பொரியல் தவறவிடப்பட்டதையே கூர்மையாக அவதானித்தறிந்து திருத்திய பாங்கு என்னைக் கவர்ந்துவிட்டது. போராளிகளைப் பேதமில்லாமல் நடாத்துவதும் அன்பாகக் கவனிப்பதும் அவர்களது நலனில் அக்கறைப்படுவதும் தலைவரது இயல்புகளிலொன்று என நான் பின்னர் கண்டுகொண்டேன்.

அந்த முதல் நிகழ்ச்சி தலைவரை முதன்முதலில் கண்டபோது நடந்த சம்பவம் எனது மனத்திற் பசுமையாகப் பதிந்துவிட்டது. ஆனையிறவுச்சமர் (1991ம் ஆண்டு ஆ.க.வெ சமர்) முடிந்த பின்னர் எதிரிப்படைகள் டாங்கிகளை அதிகம் பயன்படுத்தினர். டாங்கியின் உறுமற்சத்தமும் அது சுட்ட நீண்ட குண்டுகளும் போராளிகளது மனவுறுதியைக் குலைத்தன. வெற்றிகொள்ள முடியாத ஓர் ஆயுதந்தான் டாங்கி என்ற எண்ணம் எங்களுக்குள் வேகமாகப் பரவியது. ,தனை நன்கு அவதானித்த தலைவர் அவர்கள், டாங்கியின் ,யக்கம் பற்றிய அறிவுகளை அது பற்றிய பலம், பலவீனங்களைத் தளபதிகளுக்குக் கூறத் தொடங்கினார். டாங்கியை "கண்கள் இல்லாத கவசம்" என்று விளங்கப்படுத்தினார். டாங்கிகள் பற்றித் தலைவர் எனக்கு கூறியவற்றை நான் போராளிகளுக்குச் சொன்னேன். இரவு நேரங்களில் டாங்கியைப் பிடிப்பது சுலபம் என்று காரணம் சொல்லி விளக்கினார். அவரது அறிவுரைகளும் விளக்கங்களும் டாங்கிகளை அழிப்பதற்குச் சொல்லித்தந்த வழிமுறைகளும் எனக்கும் போராளிகளுக்கும் மிகுந்த தன்னம்பிக்கையூட்டின.

அந்தக் காலப்பகுதியில் "யாழ்தேவி" படை நடவடிக்கையை எதிரி ஆரம்பித்தான். ஆனையிறவுத் தளத்திலிருந்து கடல் நீரேரிக் கரையோரமாகக் கிளாலி நோக்கி டாங்கிகளுடன் எதிரி நகர்ந்தான். அதைப் புலோப்பளைப் பகுதியில் வழிமறித்து ஒரு எதிர்த்தாக்குதலை நடாத்தும்படி தலைவர் எனது அணியையும் அனுப்பினார். எமது தாக்குதலின் பிரதான இலக்காக டாங்கிகளைத் தெரிவுசெய்தோம்.

காலைச் சண்டையில் எதிரியின் இரு டாங்கிகளையும் ஒரு பவள் கவச வாகனத்தையும் அழித்துக் கைப்பற்றினோம். திகைப்படைந்த எதிரிப்படை நடவடிக்கையைக் கைவிட்டு ஆனையிறவுக்கே திரும்பிச்சென்றது. தலைவர் தந்த அறிவுரைகளும் விளக்கங்களும் அவர் ஊட்டிய தன்னம்பிக்கையுமே டாங்கிகளை அழித்து எதிரியின் படையெடுப்பை முறியடிக்க எங்களுக்குதவின. சண்டை முடிந்ததும் நான் தலைவரைச் சந்திக்கச் சென்றேன். தலைவர் "நான் இரவில் டாங்கிகளைப் பிடிப்பது சுலபம் என்றேன். ஆனால், நீங்கள் பகலிலேயே அவற்றைப் பிடித்துவிட்டீர்கள் என்று சொல்லிப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்.

இவ்விதம், சாதனை செய்யும்படி உற்சாகப்படுத்துவதும் - அதற்கான செயல் வீரத்தை வெளிப்படுத்த எங்களுக்குத் தன்னம்பிக்கையூட்டுவதும்சாதனை செய்யப்பட்டால் அதை மனந்திறந்து பாராட்டுவதும் தலைவரின் இன்னொரியல்பு.

இராணுவத் திட்டமிடலிலும் வியூகம் வகுப்பதிலும் தலைவர் ஒரு மேதைதான். சண்டைகளைத் திட்டமிடும்போது தலைவர் ஓர் அசாதாரண ஆற்றலை வெளிப்படுத்துவதை நான் நேரடியாகவே இரண்டு தடவைகள் கண்டுள்ளேன். யாழ்ப்பாணத்தைவிட்டு வன்னிக்குப் பின்வாங்கிய பின் (1996ம் ஆண்டு) வெற்றிகரமான ஒரு தாக்குதலைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தோம். அப்போது என்னைக்கூப்பிட்டு முல்லைத்தீவு படைத்தளத்தை மிகக்குறுகிய காலத்தில் வேவு பார்த்து முடிக்க வேண்டுமென்பதையும் முக்கியமாக ஆட்லறி இருக்குமிடங்கள், முகாமின் கட்டளையிடங்கள் ஆகியவற்றைத் துல்லியமாக எடுக்க

55ம் பக்கம் பார்க்க...



54ம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார். "எனக்கு முன்னணி வேலி முக்கியமில்லை" என்றார். அதன்படி நாங்கள் வேவுத் தகவல்களைத் திரட்டி முடித்தோம்.

தளத்தைத்தாக்கி அழிக்கும் திட்டத்தைத் தலைவர் வரைந்துகொண்டிருந்தார். அன்றைய நாளில் திட்டமிடலின் முக்கிய விடயமொன்றைத் தலைவர் எனக்குச் சொன்னார். "சாதகமான விடயங்களிற்குத் திட்டமிடுவதைவிடப் பாதகமான விடயங்களிற்குத் திட்டமிடுவது முக்கியம்" என்றார்.

உண்மையில் முல்லைத்தீவு படைத்தள அழிப்புத்திட்டம் நாம் பலவீனமாக இருந்தபோது வரையப்பட்டது. அதில் நாம் வெற்றியை அடையவேண்டும் என்பதில் தலைவர் அதீத கவனம் செலுத்தினார். முறை ஒன்று, முறை இரண்டு, முறை மூன்று என மூன்று வகையான தாக்குதல் திட்டங்களை வரைந்தார். ஒன்று தவறினால் இரண்டு. அதுவும் பிழைத்தால் மூன்று என மாற்றுத்திட்டங்கள் வரையப்பட்டன.

"தளத்தின் கடல் முனைகளை முழுமையாக மூடுங்கள் தளம் தானாக விழும்" என்றார். அவர் கூறியபடி நாம் செய்தோம். தளம் எமது கைக்குள் வீழ்ந்தது. எதிரிப் படைத்தளத்தின் உயிர்நாடியைக் கண்டறியும் ஆற்றல் தலைவருக்குண்டு. இவ்வாறு எதிரி முகாம்களின் உயிர்நிலைகளைக் கண்டறிந்து - அதற்கேற்பத் தலைவர் தீட்டிய திட்டங்கள் பலவற்றை எமது இராணுவ வெற்றிகளில் நாம் பார்க்கலாம்.

சண்டைகளின்போது நாம் அறியாமல் விடும் இராணுவத் தவறுகளை உன்னிப்பாக அவதானித்தறியும் ஆற்றல் தலைவரிடம் நிறையவேயுண்டு. நாம் விடும் தவறுகள் எங்களது மனத்தில் நன்றாகப் பதியும்படி எளிய உதாரணங்கள் வாயிலாக அவர் விளங்கப்படுத்தும் விதம் அலாதியானது. "ஜெயசிக்குறு"ச் சமர்க்களத்தில் ஒரு நாள் எனது போராளிகள் காவலரண் ஒன்றை அமைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென அப்பகுதிக்குள் புகுந்த ஓர் இராணுவ அணியின் திடீர்த் தாக்குதலில் எனது அணி சிக்குண்டு இழப்பைச் சந்தித்தது.

அந்தச் சம்பவத்தையறிந்த உடனேயே என்னைத் தலைவர் கூப்பிட்டார். நடந்ததைக் கேட்டார். நான் விளக்கினேன். முடிவில் தலைவர், "குரங்குக் கூட்டமொன்று வீதியைக் கடப்பதைக் கண்டிருக்கின்றாயா அல்லது அவை தோட்டமொன்றினுள் புகுந்து உணவு தேடுவதைப் பார்த்திருக்கின்றாயா?" என்று என்னைக் கேட்டார்.

அவ்வாறு அவை செய்யும்போது, பாதுகாப்பிற்காக மூத்த குரங்குகள் காவலிருப்பதை அதுவும் சரியான இடங்களில் முழு எச்சரிக்கையுடன் காவல் காப்பதை எனக்கு விளக்கினார். "நீங்கள் அரண் அமைக்கும்போது போட்ட காவல்கள் சரியான இடத்தில் முறையாகப் போடப்படவில்லை, அதனால்தான் எதிரி இரகசியமாக நகர்ந்து நுழைந்ததை நீங்கள் காணவில்லை" என்று எமது தவறுகளைச் சுட்டிக்காட்டி எங்களை நெறிப்படுத்தினார்.

அவர் கூறிய குரங்குகளின் உதாரணமும் மனத்திற்படும்படி அவர் கூறிய விதமும் இன்றுவரை என் மனத்திலுள்ளன. போர் நடவடிக்கைகளின்போது நாம் எத்தனையோ பின்னடைவுகளைச் சந்திக்கின்றோம். அப்படியான வேளைகளிலும் தலைவர் சோர்ந்து போய்விடமாட்டார். தளபதிகளையும் போராளிகளையும் சோரவிடமாட்டார். இதற்கு எனது சொந்த அனுபவத்தின்படி, கிளிநொச்சித்தளம் மீது நடந்த முதலாவது தாக்குதல் நல்ல உதாரணம். அத்தாக்குதல் வெற்றிபெறவில்லை. கூடுதலான போராளிகளை அதிலிழந்தோம். அத்துடன் ஒரு தொன் வெடிமருந்தும் வீணாகியது. தாக்குதல் தோல்வியால் நான் யோசித்தபடி தலைவரைச் சந்திக்கச் சென்றேன். அதை அவதானித்துவிட்டு "நீ அடுத்த, வேவுத் தகவல்களைக் கொண்டு வா, நான் ஒரு தொன் அல்ல பத்து தொன் வெடிமருந்து தேவையென்றாலும் தருகின்றேன்" என்று சொன்னார்.

பேசப்போகின்றார் என்று பயந்தபடியும் தோல்வியாலும் இழப்பாலும் துவண்டபடியும் சென்ற எனக்குத் தலைவரின் வார்த்தைகள் புத்துணர்ச்சி தந்தன. தலைவரிடம் அந்தளவு தொகை வெடிமருந்து அப்போதிருக்கவில்லையென்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அவர் எனக்குத் தந்த தெம்பூட்டல் என்னை வெகுவாக உற்சாகப்படுத்தியது.

தாக்குதலில் என்ன நடந்தது என்று பின்னர் கேட்டார். அந்தத் தவறுகளைத் திருத்தித் தலைவர் போட்ட அடுத்த திட்டம்தான் "ஓயாத அலைகள் 02" எனப் பெயரிட்டு கிளிநொச்சி தளத்தை நாம் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலாகும்.

தலைவருடன் நான் பழகிய நீண்ட அனுபவத்தைக்கொண்டு என்னால் ஒரு விடயத்தைக் கூறமுடியும்.

அது தலைவரின் அற்புதமான தன்னம்பிக்கையும் உள்ளுணர்வும் சம்பந்தமானது. பல சந்தர்ப்பங்களில் அதுவும் நெருக்கடி வேளைகளில் "இராணுவ ஞானம்மிக்க அவரது தன்னம்பிக்கையும் உள்ளுணர்வும் எமக்கு எத்தனையோ இராணுவ வெற்றிகளைப் பெற்றுத்தந்துள்ளன. இந்தியப் படையுடனான போரும் அப்படியானதொன்றுதான்.

எனது அனுபவம் "ஜெயசிக்குறு" சமருடன் சம்பந்தப்பட்டது. மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான் என்று படையினர் பிடித்தனர். அம்பகாமத்தின் அரைவாசியையும் பிடித்தனர். அடுத்தது புதுக்குடியிருப்பா? கிளிநொச்சியா? என்ற அச்சம் எழுந்த நேரமது.

தலைவர் தளபதிகளைக் கூப்பிட்டார். "இனித்தான் சண்டை ஆரம்பிக்கப் போகுது, கொஞ்ச நாளைக்குள் என்ன நடக்குமென்று பாருங்கோ" என்றார். வேலைகளை எல்லாத் தளபதிகளுக்கும் பிரித்துக் கொடுத்துத் திட்டத்தைச் சொன்னார். என்னிடம் சிறுதொகைப் போராளிகளை ஒப்படைத்து "நீ இவர்களை வைத்து ஒட்டுசுட்டானில் இருந்து மன்னார் வரையான காவலரண்களைப் பார்" என்றார். நான் திகைத்துப் போனேன். அதை அவரிடம் சொன்னேன். அவர், "இராணுவம் இன்னும் முன்னேற முயன்றால் நீ அவர்களை உள்ளே விடு மிகுதியை நான் பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"எமது தாக்குதல் ஆரம்பிக்கும் இரவு அம்பகாமத்தில் உனது கட்டளை நிலையத்திற்கு வந்து தாக்குதலின் ஒரு முனையை வழிநடத்து" என்றும் கூறினார். வன்னி வரைபடத்தைத் தொட்டுக்காட்டி "இன்னும் கொஞ்சநாளில் இந்தளவு இடத்தையும் நாங்கள் பிடிக்கப்போறம்" என்று ஒரு பெரும் நிலப்பகுதியை எனக்குக் காட்டினார். "இவ்வளவு இடத்தையும்" என்றார்.

அவர் காட்டிய அப்பெரும் நிலப்பகுதியை அப்போது எம்மிடம் இருந்த பலத்தை வைத்து எப்படி பிடிக்கமுடியும். அவர் சொன்னதை என்னால் நம்பமுடியவில்லை. அந்தளவுக்கு அவர் கூறியது சாத்தியமாகுமா? என்று யோசித்தேன். அதை நான் அவருக்குக் கூறவில்லை. நான் புறப்பட ஆயத்தமானேன். "நான் உன்னைக் கூப்பிட்டதும் சண்டை செய்யக்கூடியவாறு உனது அணியைத் தயாராக வைத்திரு" என்றார்.

சில நாட்களில் ஒட்டுசுட்டான் மீது தாக்குதல் தொடங்கியது. அது பின்னர் விரிந்து பரந்து தலைவர் முன்னர் எனக்குச் சொன்னதுபோல நெடுங்கேணி, புளியங்குளம் வீதியையும் கடந்து முன்னேறி நிலம்மீட்ட "ஓயாத அலைகள் 03" தொடர் சமராக வரலாற்றில் பதிந்துவிட்டது. தலைவர் மீது நான் வைத்திருக்கும் மரியாதைக்கும் வியப்புக்கும் காரணமாக இவ்வாறு நூறுக்கும் மேற்பட்ட சம்பவங்களைக் கூறமுடியும்.

போராளிகள் மீது அவர் காட்டும் பரிவு உண்மையானது. தோல்விகளால் அவர்கள் துவண்டுவிடாமற் பார்ப்பதில் அவர் அதிக அக்கறை காட்டுவார். "வெற்றிகளைப் போராளிகளுக்குக் கொடுங்கள், தோல்விகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" எனத் தளபதிகளுக்குச் சொல்வார்.

"ஒரு தவறு நடந்தால் பிழைகளை உங்களில் இருந்து தேடுங்கள், மற்றவர்களில் இருந்து தேடாதீர்கள்" என்று கூறுவார். ஒரு சண்டை பின்னடைவைச் சந்தித்தால் தவறுகளை ஆராயும்போது முதலில் தன்னிலிருந்துதான் தொடங்குவார். மற்றவர்களிற் பிழைகளைப் போடுவது தலைவர் விரும்பாததொன்று.

இலட்சியத்தையும் அதற்கான சாவையும் தலைவர் இரண்டு கண்களைப் போலவே போற்றுவார்.

"உண்மையானவராக இருந்தால் அவர் இலட்சியத்திற்காகச் செத்திருக்க வேண்டும் அல்லது இலட்சியத்தை அடைந்திருக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார். இப்படிப் பார்த்தால் எங்களில் மாவீரர்கள்தான் உண்மையானவர்கள் உயர்ந்தவர்கள" என்பார். "நானும் உண்மையானவனல்லன்" என்று தன்னைப் பற்றியும் கூறுவார். அவரது இக்கூற்றுக்கள் மாவீரர்களை முதன்மைப் படுத்துவதையும், இலட்சியத்தின் மீதான உறுதிப்பாட்டையுமே காட்டுகின்றன. தலைவர் பிரபாகரன் அவர்கள் அற்புதமான இராணுவ வல்லுனரென்பதை உலகமே ஏற்றுக்கொண்டுவிட்டது. அடிமைப்பட்டுத் தலைகுனிந்து கிடந்த தமிழ் இனத்திற்கு வீரத்தையூட்டித் தலை நிமிர வைத்த வரலாற்றுப்பெருமை தலைவரை மட்டுமே சாரும்.

இன்று, தமிழரின் தன்னிகரில்லாத் தலைவனாக அவர் உயர்ந்துள்ளார். அவரின் காலத்தில் நானும் வாழ்கின்றேன். அவரின் வழிகாட்டலில் நானும் போராட்டப் பணி செய்கின்றேன் என்பதே எனக்கிருக்கும் மகிழ்ச்சியும் திருப்தியுமாகும். இத்தகைய அற்புதமான தலைவன் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழீழ இலட்சியத்தையடைந்து எமது இனத்திற்கொரு நிரந்தர விடுதலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவரின் இந்த 50வது அகவை நிறைவில் வாழ்த்துகின்றேன்.

பிரிகேடியர் வே.தீபன்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
கட்டளைத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது அகவையொட்டி பிரிகேடியர் தீபன் அவர்களால் 2004ம் ஆண்டு உலகத்தமிழர் பத்திரிகைக்காக எழுதப்பட்ட கட்டுரை.



மண்ணில் முளைத்திட்ட மங்காத சூரியன்!..!!



எங்கள்மண் வீரம்கொண்டு
எழுந்திட செய்தவனே!
பங்கம் இல்லாமல்
ஒற்றை குடையினுள் காத்தவனே

மேதகு தலைவனே
மேதினியில் மேலானவனே
விதிமாற்றி எழுதிவிட்ட
வீரத்தின் பெரும்பிறப்பே

வானம் முகிலுக்கு
வளைகாப்பு நடத்தும்வேளை
வல்வையில் வந்துதித்த
வடிவான பிள்ளை இவன்

இமாலய வியப்பாளனுக்கு
இனத்தின் குறியீட்டாளனுக்கு
ஒற்றைச் சொல் மந்திரத்துக்கு
ஒருபெரும் சரித்திரத்துக்கு
அன்பின் ஆழுமைக்கு
ஆயுத எழுத்துக்கு
எங்களின் முகவரிக்கு
ஏற்றம் கொண்ட வல்லமைக்கு
புழுதி மண்ணின் பொக்கிசத்துக்கு
பொற்காலம் படைந்த
போர்க்கால தம்பிக்கு
மண்ணில் சுடும் சூரியனாகி
இயக்கையை நுண்பனாக்கி
வாழ்க்கையை நந்துவ ஆசிரியனாக்கி
வரலாற்றை வழிகாட்டியாக்கியவன்
வந்துதித்தவன் நாள் இன்று
இவன!...வீரம்தான்
கிழக்கை வெழுக்கச் செய்தது
மேற்கை சிவக்கச் செய்தது
தெற்கை அடங்க வைத்து
மேலெழுந்து மேதகு
ஆனவனுக்கு
அகவை நிருநாள்
வாழ்த்துக்கள்!!!

– ரேணுகா உதயகுமார்

MORTGAGE
Residential / Commercial /
Industrial / Investment Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS INC.

•1st, 2nd, 3rd Mortgages
• Purchase • Refinance • Renewal • Switches
• Equity Line of Credit • Pre-Approvals
• Self-Employed • Multi Rental Properties
• New Immigrants

Nesan
416-908-5656
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
Off: 647-351-0399 Fax: 647-351-3099
Bus: 416-660-565 Toll: 1-844-878-2721
Email: solutions@subra.com
www.subra.com



பிரபாகரனின் தொலைதூரப்பார்வை அதிசயப்பட வைப்பது



கீர்த்தி அந்த மனிதனிலும் பெரிதாய் அமைந்திருந்தது. அது 80களின் ஆரம்பத்தில், நான் முதன் முதலாக விடுதலைப்புலிகளின் தலைவரை சந்தித்த போது அப்படி இருந்தது. அந்த முதல் சந்திப்பை மிக உயிர்ப்புடன் நினைவு வைத்துள்ளேன். அது கடும் வெயிலடித்த ஒரு பகல் பொழுதில் சென்னையில் உள்ள ஒரு புலிகளின் இடத்தில் இடம் பெற்றது. அவ்வீடு வங்காள விரிகுடாவைப் பார்த்தபடியே இருந்தது. பிரபாகரன் ஒரு பத்திரிகையாளரை முதல் தடவையாக தன் வாழ் நாளில் எதிர்கொள்ளப் போகின்றார்.

அது எனக்கு ஒரு மிகப்பெரிய விடயம். ஆனால் நான் அந்த அபூர்வமான கெரில்லாத் தலைவரை சந்திப்பதற்கு முன் இரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நான் அந்த அறையில் உட்கார்ந்திருந்தபோது புலிகள் இயக்கப்போராளி ஒருவர் ஒரு வர்ணத் தொலைக்காட்சியை இயங்க வைத்தார். அவை நன்றாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடாவாகும். ஒளி பிரயோகிக்கப்பட்ட விதமும், கமெராவின் கோணங்களும் பிரபாகரனை நிஜத்திலும் பெரியதாகக் காட்டியது. அவர் பலமானவராக, கடுமையானவராக, வீரம்செறிந்தவராகக் காணப்பட்டார். அந்த ஒளியிழைநாடா, புலிகளை ஒரு பெருமை மிக்க தேசத்தின் ஒழுக்கமான இராணுவமாகக் காட்டியது. அங்கு பிரபாகரன் அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார். சீருடையில் உள்ளார்.

புலிக் கொடியை ஏற்ற அவர் அணிவகுத்து நின்ற புலிப் படையினரைத்தாண்டிச் சென்றார். தேசபக்திப்பாடல் பின்னணியில் ஒலிக்க, பிரகாசமான கண்களுடன் பெருமையுடன் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை சூரியப்பிரகாசம் நிரம்பிய வெளியில் பிரபாகரன் பறக்க விடுகின்றார். அங்கு பிரபாகரன் கொள்கை பிரமாண்டமான மனிதர் - புரட்சியாளர், கவர்ச்சிகரமானவர். ஆனால் முதல் தடவையாக பிரபாகரனைச் சந்தித்தபோது பேச்சிழந்து போனதுடன் அதிருப்தியுற்றேன். அவர் அந்த அறைக்குள் நடந்து வந்தார். நான் அடையாளம் காணவில்லை. வீடியோவில் கண்ட ஆறடி உயரமுள்ள நேர்த்தியானவரால், பாதிக்கப்பட்டதால் அடையாளம் காணவில்லை. அங்கு வந்த மனிதன் கட்டையான, சிறு தமிழ் வணிகர் போன்ற உருவமுள்ளவர்.

நான் அவரை புலி ஆதரவாளர் என்று நினைத்தேன். ஒரு ஆர்வமுள்ள தலையாட்டலும் செய்தேன். சில நிமிடங்களின் பின்னர் ஒரு மென்மையான குரல் தமிழில் ஒலித்தது. நான் தான் பிரபாகரன் என்றார். அவர் அடையாளம் கண்டுவிட்டார். நான் அடையாளம் காணவில்லை. அந்த மனிதர் மன்னிப்பு கேட்பவர் போன்று சிரித்தார். நான் அந்த முகத்தை ஆராய்ந்தேன். எனது பேரதிர்ச்சிக்கு பின் அது பிரபாகரன் தான் என்பதை உணர்ந்தேன். கமெராக்கள் பொய்சொல்லாதென யார் சொன்னார்கள்.

பிரபாகரன் கருஞ்சாம்பல் நிறக்காற்சட்டையும், வான நீலநிறமுள்ள சேர்ட்டும் அணிந்திருந்தார். அவர் வீதியால் நடந்து சென்றால் யாரும் அவரை இரண்டாம் தடவை திரும்பிப் பார்க்கமாட்டார்கள். வீடியோவில் பார்த்த உறுதிமிக்க, சீருடை தரித்த, கொரில்லாத் தலைவருக்கும். இந்த மென்மையான தோற்றமளிக்கும் சிவிலியனுக்குமிடையோன ஒப்பீடு ஒரு தற்செயல் நிகழ்வே. நான் ஏன் வீடியோவில் பிரபாகரன் பேசவில்லை என்பதை உணர்ந்தேன். பெருமனிதனிடம் மென்மையான குரல். அது ஒரு நாயகனின் தோற்றத்தைப் பாதிக்கும். நான் என் நம்பாத தன்மையை மறைக்க முயன்றேன். ஆனால் அதிர்ஸ்டவசமாக அது பிரபாகரனை சிறிது அதிசயப்பட மட்டும் வைத்தது. எனது குழப்பத்தை மறைப்பதற்கு சிறந்த வழி எனது கேள்விகளை ஆரம்பிப்பது. அது இருமணிநேரம் நீடித்தது. முடிவில் என் வாழ்வில் ஒரு குறிப்பிடத்தக்க மனிதனைச் சந்தித்ததை உணர்ந்தேன். இன்று பல குறிப்பிடத்தக்க மனிதர்களைச் சந்தித்த பின்பும் பிரபாகரனே மிகக் குறிப்பிடத் தக்கவராவார். பிரபாகரன், நான் சந்தித்தவர்களில் மிக உறுதிகொண்டவர். அவரது தொலைதூ ரப்பார்வை அதிசயப்பட வைப்பது. அவர் இன்று பார்ப்பதை அவரது எதிரிகள் நீண்டகாலங்களின் பின்னர்தான் உணர்வார்கள்.



அனைவருக்கும் ஒரே நீதி



திருகோணமலை மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் பிரதேசத்தினுள் அமைந்த காட்டுப் பகுதியினுள் அயல் எல்லைக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பெண்மணி வழிதவறி வந்து விட்டார். அப்போது அங்கு வைத்து அச்சிங்களப் பெண்மணிக்குத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஒரு தமிழ் வாலிபன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விடுகின்றான். இதனை அச்சிங்களப் பெண் எமது இயக்கத்தின் முகாமிற்கு வந்து முறைப்பாடு செய்தாள். உடனே எமது இயக்கப் போராளிகள் அனைவரும் தேடுதலில் ஈடுபட்டு அந்த வாலிபனை இறுதியாக ஆதாரங்களுடன் தேடிக் கண்டு பிடித்து விட்டார்கள். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியும் அவனை அடையாளங் காட்டி விட்டார். அவ்வாலிபன் எமது இயக்கத்தினுடைய தீவிர உதவியாளனும், அங்கு பெரும்பாலான காட்டுப் பிரதேசங்களுக்கான வழிகாட்டியுமாவான். அவ்வேளை அச்சிங்களப் பெண்மணியானவள் அங்குள்ள தமிழ்ப் பெண்கள் சிலரின் உதவியுடன் அங்கு அமைந்துள்ள சிறிய வைத்தியசாலை ஒன்றிற்கு வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள்.

இச்செய்தியை மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் தேசியத் தலைவர் அவர்களுக்கு விரிவாக அறிவித்து என்ன செய்வதென்று கேட்டார். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியைக் வல்லுறவுக்கு உட்படுத்தியவாலிபன், அச்சிங்களப் பெண்மணியானவள் முன்பு தமிழர்கள் வாழ்ந்த அதே கிராமத்தில் தமிழர்களைத் துரத்தியடித்து விட்டு குடியேற்றப்பட்டவள் என்றும் அதே சிங்களக் குடியேற்றத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் எமது தமிழ்ப் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள் என்றும் அதனால்தான் தான் அந்தச் சிங்களப் பெண்மணியைக் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக நியாயப்படுத்தியும் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் அத்தமிழ் வாலிபன் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் செய்த பங்களிப்புக்களையும், அவன் இல்லாது விட்டால் அங்குள்ள பெரியதொரு காட்டுப் பிரதேசத்திற்கு வழிகாட்டி இல்லை என்பதையும் அந்தப் பொறுப்பாளர் அறிவித்திருந்தார். அதற்குத் தேசியத் தலைவர் அவர்கள் உறுதியாக அனைவருக்கும் ஒரே நீதிதான் என்றும் அச்சிங்களப் பெண்மணியை அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்புவதற்கு முன்பு அப்பெண் அறியக்கூடியதாக அவ்விளைஞனுக்கு மரண தண்டனை வழங்கும் படியும் அதன் பின்பு அப்பெண்ணைப் பாதுகாப்பாக அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்பும்படியும் அறிவித்திருந்தார். மறுநாள் தண்டனை நிறைவேற்றப்பட்ட விடயமும், சிங்களப் பெண் பாதுகாப்பாக அவரது கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரமும் பிரதேசப் பொறுப்பாளரால் தேசியத் தலைவர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்த தேசியத் தலைவர் அவர்கள் அங்கிருந்த தளபதிகளுக்குக் காட்டிவிட்டு, அனைவருக்கும் ஒரே நீதிதான் என்று உறுதியாகக் கூறினார்.

சமூக விரோதிக்கும், விடுதலைப் போராளிக்குமான இடைவெளி மிகமிகக் குறைவு.

சமூகத்தில் விடுதலைப் போராளியும் கொலை செய்கின்றான். கொள்ளையடிக்கின்றான். வேண்டிய வாகனங்கள் மற்றும் உடமைகளைப் பறித்துக் கொள்கின்றான். இதே போன்றே சமூக விரோதியும் சமூகத்தில் கொலை செய்கின்றான். கொள்ளையடிக்கின்றான், வேண்டிய வாகனங்கள் மற்றும் உடமைகளைப் பறித்துக் கொள்கின்றான். அப்படியானால் விடுதலைப் போராளிக்கும், சமூக விரோதிக்கும் என்ன வேறுபாடு இருக்கின்றது. இருவருமே ஒரே செயலைச் செய்தாலும் இருவரினதும் மனதில் செயற்படத் தூண்டும் எண்ணமொன்று மட்டுமே வேறுபடுகின்றது.

சமூக விரோதி தனது சுய தேவைக்காக அல்லது பொறாமையினால் அல்லது கோபத்தினால் அல்லது மனவேதனையினால் இவற்றை மேற்கொள்கின்றான். விடுதலைப் போராளி தனது தேசத்தின் விடுதலைக்காகச் செய்கின்றான். இவற்றைக் கடமை உணர்வோடு, விடுதலையுணர்வோடு அவன் மேற்கொள்கின்றான். இவற்றை அவன் விரும்பிச் செய்வதில்லை. எனினும் தேசத்தின் விடுதலைக்கு அவசியமானபோது அவற்றைச் செய்கின்றான்.

விடுதலைப் போராளியும் சில சந்தர்ப்பங்களில் சமூக விரோதியாகலாம். அதற்கு உதாரணமாக நான் உங்களிற்கு ஒரு கதையைச் சொல்லுகின்றேன். நீங்கள் பாடசாலையில் படித்தீர்கள். அப்போது உங்களுடன் படித்த சக மாணவன் கல்வியிலும், விளையாட்டிலும் தொடர்ச்சியாகப் போட்டியிடுகின்றான். சில வேளைகளில் நீங்கள் வெல்லுவீர்கள், சில வேளைகளில் அவன் வெல்லுகின்றான். இவ்வாறு போட்டியிட்டுக் கொண்டிருந்த நீங்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட உணர்வினால் இயக்கத்தில் இணைந்து கொள்ளுகின்றீர்கள். ஆனால் அவனோ தொடர்ந்து கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி மருத்துவக் கல்லூரிக்குச் செல்கின்றான். மருத்துவராகின்றான். பணம் சம்பாதித்து சொந்தமாக ஓர் கார் வாங்கி வசதியாக இருப்பதைக் காண்கிறீர்கள். நீங்கள் ஒரு நாள் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது வீதியில் அவனது கார் உங்களுக்கு எதிரே வருகின்றது. உடனே உங்களுக்குப் பழைய ஞாபங்கள் வருகின்றன. இன்றைய உங்களின் நிலையை அவனது நிலையுடன் ஒப்பீட்டுப்பார்த்து பொறாமை உணர்வு ஏற்படுகின்றது. இதன் விளைவால் நீங்களோ அல்லது வேறு விடுதலைப் போராளிகளுடாகவோ, அக்காரினை விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையெனக் கையகப்படுத்துகின்றீர்கள்.

இச்சம்பவத்தை வெளியிலிருந்து பார்க்கும் மக்களுக்கு ஏன் உங்களின் சக விடுதலைப் போராளிக்குக் கூட சிலவேளை நீங்கள் செய்யும் செயல் சரியாகப் படலாம். ஆனால் நீங்கள் செய்யும் செயல் சமூக விரோதச் செயல் என்பதை உங்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். விடுதலைப் போராளிகளாகிய நீங்கள் இவற்றை மனதில் நிறுத்தி விடுதலை உணர்வுடன் உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு போதும் சமூக விரோதியாகிவிடக்கூடாது.

விடுதலைப் போராளிகளாகிய நீங்கள் விடுதலை உணர்வுடன் உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு போதும் சமூக விரோதியாகிவிடக்கூடாது, என்று ஒருமுறை போராளிகள் மத்தியில் உரையாற்றும் போது தேசியத் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்





கொல்ல வந்தவனையும்
கொல்லாது கண்ணியமும்
கொல்லாதவன் மனையாள்
துயரையும் துடைத்தவனே!
ஈகைக்கு இலக்கணமாய்
ஈழமண்ணின் முகவுரையாய்
தோகை விரித்தாடத் தோன்றிய
பார்வதி
மைந்தனே! பாரும் மாண்புற
நின்றவனே!
மண்ணில் பெண்களும்
ஆணுக்கு நிகரென
கண்முன் நிகழ்த்திக் காட்டிய
வித்தகனே
ஆண்டுகள் போனாலும்
அழியுமோ முத்து
கூண்டுக்குள் வைத்தாலும்
குறுகித்தானே போகுமோ

NEW SPICELAND SUPER MARKET
New SPICE LAND RESTAURANT, BAKERY, CATERING & TAKE OUT
New Spiceland Supermarket
5790 Sheppard Ave E, Unit# 4, 5, & 6, Toronto, ON M1B 5J6, T: 416.292.9769
6065 Steeles Ave E, Unit# 13, 14, 15, 16, & 17, Toronto, ON M1X 0A8, T: 416.335.3030, Fax: 416.335.3032
1801 Harwood Ave N, Unit# 21, 22, 23 & 24, Ajax, ON L1T 0K8, T: 905.426.1114
New Spiceland Take Out, Catering & Bakery
6065 Steeles Ave E, Unit# 10, 11 & 12, Toronto, ON M1X 0A8, T: 416.335.3035
1801 Harwood Ave N, Unit# 11 & 12, Ajax, ON L1T 0K8, T: 905.426.4445



தவமுடைத் தலைவன் வாழி!

ஆதிலட்சுமி சிவகுமார்

தாயக மண்ணின் தனிப்பெரு மகனாய்
தாயவள் பார்வதி மடியுதித்தவனாய்
திடமுறு தமிழைத் தலைநிமிர்த்து பவனாய்
தன்னல மற்ற தவத்திரு வடிவாய்
தாயாய் தந்தையாய் தில்லைக் கூத்தனாய்
தாழ்வுகள் அகற்றிய தன்மானச் சுடராய்
தீரச் செயல்புரிந்த செங்கமலச் சேயோனாய்
திருவுளங் கொண்ட தவமுடை தலைவன் வாழி !

சத்தியத்தின் வழிதனிலே நின்ற உன்னை
கொத்திக் குதறிவிட கொன்று புதைத்து விட
எத்தனை திட்டங்கள் எங்கெல்லாம் வகுத்தாலும்
எல்லாமே பொடியாக்கி எழுந்த ஞாயிறு நீ
புத்தம் புதிதான போர்க்கலையைப் புகுத்தி
கொத்தாக வெற்றிகள் படைத்திட்ட புரவலனே
தித்திக்கும் என்தமிழிற் சொல்லடுக்கிச் சேர்த்து
திசையெட்டும் ஒலித்திடவே வாழ்த்துகிறேன்வாழி !

கூற்றான பகைவர்களைக் கூட்டுட் சென்று
குலையவைத்து சாதனைகள் படைத்தவனே
ஆற்றலுள்ள ஆண்களையும் பெண்களையும்
அடலேறாய் வளர்த்தவனே ஆற்ற லோனே
பெற்றோம் உன்னை யெம் வாழ்வுக்கால
பேறாக எண்ணுகின்றோம் பெருமகனே
ஊற்றாக சுரக்கின்ற உணர்வு சேர்த்து
உளமார வாழ்த்து கின்றேன் வாழிவாழி !

முப்படையும் உருவாக்கி உலகின் முன்னால்
மூச்சே தமிழீழம் நாளை விடியும் என்றாய்
அக்கினிக் குஞ்சுகளை அண்டம் வியக்க
அடைகாத்த ஆண்தாயே அன்பின் உருவே
அருங்கலை வளர்த்து அறிவினில் ஓங்கிட
அறிவுக் கூடங்கள் அமைத்து நின்றாய்
பெரும்பணி செய்த பெம்மானே உன்னையிப்
பிறந்தநாளிலே பெரிதுவந்து வாழ்த்து கின்றேன் !

எந்தையும் தாயும் ஏறைக்கோன் நீயும்
இருந்து மகிழ்ந்து வாழ்ந்த எம் காலம்
சிந்தையில் பற்பல எண்ணங்கள் சேர்த்து
சிறப்புற்றுச் சீரோடு வாழ்ந்த எம்காலம்
தங்க தனையர்கள் தழுவித் தாய்மடி
தாங்கிய கொடியது பறந்த எம்காலம்
நந்திக் கடலொரு நற்செய்தி யாகட்டும்
நாயகனே நலமொடு வாழி ! வாழி !!



இமாலயவியப்பு



எல்லா வகையிலும் எம்மால் எட்ட முடியாத உயரத்திலுள்ளவர் பற்றி எழுதுவதற்கு இப்படியொரு வாய்ப்புக் கிட்டியமை எனக்கு எதிர்பாராதது. ஆனால் இவ்வாறு எழுதுவதன் மூலமாவது அவரை ஏதோவொரு வகையில் எட்டவோ, தொடவோ முடிந்தது பற்றி எனக்குப் பெரு மகிழ்ச்சி. இவற்றினைவிட நன்றியை, பிறர் நயப்பைக்கூட எதிர்பார்க்காத அவருக்கு இப்படியாவது எமது பெரு நன்றியை பேரன்பை செலுத்த முடிந்ததே என்கிற ஆறுதலும் கிட்டுகின்றது.

ஆனால் வாய்ப்பு கிடைத்தாலும் எதனை, எப்படியெழுதுவது? எழுதுவோர்கள் அனைவருமே அவரை முழுமையாக உணர்ந்தவர்கள் என்றாகுமா? எந்தவொரு தத்துவத்திற்கும், வடிவத்திற்கும், விளக்கத்திற்கும், இலக்கணத்திற்கும் உள்ளடக்க முடியாத மனிதர் பற்றி எப்படியெழுதுவது? எந்தவொரு வரலாற்றின் தீர்க்கமான கட்டங்களிலும் எந்தவொரு எதிர்பார்ப்பிற்கும் ஊகத்திற்கும் தோல்வியையும் எதிரிக்கு எப்பொழுதும் அதிர்ச்சியையும் நண்பருக்கு எப்பொழுதும் வியப்பையும் இடைவிடாது பிறப்பிக்கிறவர் பற்றி எவராலும் எழுத முடியுமா? ஆகவே எழுதுவது என்பது பயனற்ற முயற்சிதான். ஆயினும் எழுத முடியாது என்பது பற்றியாவது எழுத முடிகின்றதே என்பதுதான் எமது வெளிப்பாடாக அமைகின்றது.

அதேவேளை இவ்வளவிற்கும் வியப்பூட்டுகிற பிரபாகரன் அதேவேளை எந்தளவிற்கு கீழிறங்கி சகமனிதர்களோடு, போராளிகளோடு, முதியோரோடு, நண்பர்களோடு சிறுபிள்ளைகளோடு இயல்பாக அவர்கள் தள்ளிப் போகாமல் பார்த்து தன்னோடு அரவணைத்து அவர்கள் மகிழ்ச்சியடையும் வண்ணமும் தாழ்வுணர்ச்சியடையாமலும் அதேவேளை அவர்கள் தங்களை இப்பெரும் தலைவன் எவ்வளவு தூரம் மதிக்கின்றான் என்பதன் வழி தங்கள் மதிப்பினை உணர்கின்ற வகையிலும் பெறுகின்ற உளவியல் ஊக்க பரிமாணத்தினை எப்படி விளக்குவது? ஆனால் விளக்கத்தான் வேண்டுமென்பதற்காகவே இங்கே எழுத நேரிடுகின்றது. எனது வியப்பினை, உள்ளத்தில் கிளர்ந்தெழும் உயரிய சிந்தனையோட்டத்தினை பெருமிதத்தின் பூரிப்பினை இப்பொழுது பட்டியலிட முனைகின்றேன்.

கீழ்மையடைந்து அடிமை வாழ்வை வாழ்கின்றோமே என்பதனை மறந்து சிதைந்து சீரழிந்து உதிரிகளாக பிளவுண்ட ஒரு தேசிய இனத்தினை எவ்வாறு அவர் ஒழுங்குபடுத்தினார்? ஒரு முகப்படுத்தி ஒன்றிணைத்தார்? இணைந்தவொரு ஆற்றல்மிக்க அரசியல் இராணுவ, இராசதந்திர வன்மை நிறைந்த அணியாக்கி அதனை சர்வதேச முன்றலிலே எவ்வாறு முன்னிறுத்தினார்? இங்கேதான் எனது வியப்பு விரிகின்றது. ஒரு தேசிய இனத்தின் இணைக்கும் பண்புகளே எம்மை பிரித்தன. இறை நெறியோ, மொழிப்பற்றோ, வதிவிட வாழ்வுரிமையோ எம்மை இணைக்கவில்லை. மாறாக பிரதேசவாதம் எம்மைப் பிரித்தன. மதம் எம்மை மாற்றானாக்கியது. இதன் விளைவென்ன? 1970 களில் தமிழரின் கதை முடிந்த கதையென்றானது. தப்பித்தலே, தாயகம் விட்டு புலம்பெயர்வதே இறுதிவழியென்றானது. தமிழன் எனச்சொல்வதே இழிவானது. இந்நிலை நீடித்திருந்தால் என்னவாகியிருக்கும்? உலகின் அழிந்துபடுகிற மொழியாக தமிழும், அழிந்துபடுகின்ற இனமாகத் தமிழினமும் ஐ.நாவால் பிரகடனப்படுத்தப்படும் நிலையல்லவா தோன்றியிருக்கும்.

இக்கட்டத்தில்தான் பிரபாகரன் அவர்களின் வருகை நிகழ்கின்றது. அவர் மட்டுமல்ல இன்னும் பலரினதும் வருகையும் நிகழ்ந்தது. ஆனால் வரலாறு வழங்கிய வாய்ப்பினை அவர் ஒருவரால் மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. ஏனையோர் பின் வாங்கியதும், பழைய நிலைக்கு சென்றதுவும், அதற்குக் காரணங்கள் தேடுவதில் இன்றளவும் காலம் கழிப்பதுவும் எவ்வளவு நகைப்பிற்குரிய விடயம். இன்று பிரபாகரன் அவர்கள் தனது பணி மூலம் தமிழ்த் தேசிய இனத்தினை, ஒரு கட்டுக்கோப்பான தனது விடுதலைக்காக பல்வேறு தளங்களில் போராடுகின்ற நவீன தேசியங்களின் பண்புகள் பொதிந்த ஒரு முன்னணி அணியாக்கிவிட்டார். அதாவது அவரே தமிழ்த் தேசிய இனத்தினை இணைக்கிற காக்கிற மாபெரும் சக்தியாகிற அதேவேளை அவரே அதன் உருவகமுமாகி விட்டார். இதுவொரு வரலாற்றின் புதிய பரிமாணம். தலைவர்கள் தேசியப் போராட்டத்தினை முன்னெடுத்தமை பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் இன்றோ தலைவனே தேசியத்தின் வடிவமாகிவிட்டதைக் காண்கின்றோம். இதனாலே அவரை தேசியத்தின் தலைவன் என்கின்றோம்.

இதற்கான அவரது உழைப்பை, சிந்தனையை, ஏற்பாடுகளை, அவரை உயிரென மதித்து செயற்பட்டோர் சிந்திய குருதியை, பட்ட துயரை எவராலும் மறக்க முடியுமா? இன்று பிறநாட்டு அறிஞர், ஆர்வலர் என எல்லோரும் அவர் முன்னே பணிந்து அவரைக் காண்பதே பெரும் பேறென நினைத்து மகிழும் நிலை தோன்றி இருக்கின்றது. இதற்கொரு வரலாற்றுக் காரணம் இருக்கின்றது.

மனிதம் தளிர்க்க வேண்டும். மானுடம் பிழைக்க வேண்டும் என்று முனைந்த வித்தகன் கார்ல் மார்க்சின் சமூக வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையிலான ஆண்டான் அடிமை சமூகக் காலக்கட்டத்திலே தோன்றிய அடிமைத் தளையை அறுக்க ஸ்பாட்டகஸ் போன்றோர் தோற்றிய போராட்டத்தின் இன்றைய தொடர்ச்சியாக அவர் காணப்படுகின்றார். மனிதகுல விடுதலை வரலாற்றின் இன்றைய இணைப்புச்சங்கிலி அவரே.

எனது அடுத்த இமாலய வியப்பு என்னவென்றால் அவர் இதுவரை காலமும் பயன்படுத்திய அனைத்து இராணுவ, அரசியல், இராஜதந்திர உத்திகள், அணுகுமுறைகள் எல்லாமே உள்ளடக்கிய போரியல் சிந்தனை முறைமை பற்றியது. எங்கிருந்து இத்தனை ஆற்றல்களையும் அவர் பெற்றார்? அலுப்பு சலிப்பற்று ஓய்வற்று இடைவிடாது சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அவர் மன உலகம் பற்றியே நான் பெரிதும் வியக்கின்றேன்.

அவர் மன உலகத்தின் பல்வேறு தளங்களிலே சமகாலத்திலே பல்வேறு அரசியல் போராட்டங்கள், இராணுவப் போர்கள், இராஜதந்திரச் செயற்பாடுகள் எல்லாம் தனித்தனியாக நிகழ்த்தப்படுவதாக நான் உணர்கின்றேன். இத்தகைய அதி அற்புத ஆற்றல்கள் கைவரப் பெற்றவர் என்று சொல்வதைவிட அவ்வாற்றல்களை அவர் தனக்குள் கிளர்ந்தெழ வைக்கின்றார் என்பதே பொருத்தமானது. இவ்வாறாகும் அவர் பெரு மனிதராக ஏனையோருக்கு தான் தோற்று விடக்கூடாதென்பதற்காக இயல்பு வாழ்வைப் பேணுகின்ற விதமே இன்னொரு இமாலய வியப்பிற்குரிய விடயம்.

இச் சமநிலையைப் பேண அவரிடம் எவ்வளவு மனத்திடம் வேண்டும்.

64ம் பக்கம் பார்க்க...





2008

தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை 2008

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 2008 .
எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே

இன்று மாவீரர் நாள்.

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக்கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது. எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது. மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

எனது அன்பான மக்களே!

என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது.

சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது. தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம். இந்த நோக்கத்தைச் செயற்படுத்தி விடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது. சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீராவேசத்தோடு போராடி வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டுகொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப் பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம். எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம்.

69ம் பக்கம் பார்க்க...





சங்கே முழங்கு!

காசி ஆனந்தன்
உணர்ச்சிக் கவிஞர்

நேர்மையினான்.. ஆதலினால்
வலிய பகை நேர்வரினும்
எதிர்த்து மோதும்
ஓர்மையினான்! காலத்தை
ஊடறுத்துத் தொலைநோக்கும்
கண் ஓட்டத்தில்
கூர்மையினான்! தமிழீழம்
எழ எழுந்து கூண்டுடைத்த
மான வாழ்வின்
சீர்மையினான்! எந்தலைவன்
பிரபாகரன் கீர்த்தி
முழங்கு சங்கே!

சங்கே முழங்கு!

அலைநிகர்த்தான் தொடர்தொடராய்
படைவரிசை திரட்டி எழும்
ஆற்றல் தன்னில்!
உலைநிகர்த்தான் படைக்கருவி
வகைவகையாய் உருவாக்கும்
தொழில் நுட்பத்தில் !
வலைநிகர்த்தான் சூழ்ச்சியினால்
எதிரிகளை வளைத்தழிக்கும்
போர்த் திறத்தில்!
மலைநிகர்த்தான் ! எந்தலைவன்
பிரபாகரன் மாண்பை
ஊது சங்கே!

மொழிமறவான்! இனம்மறவான் !
பகைமொத்த நீர் பொழியும்
தமிழீழத் தாய்
விழிமறவான்! தமிழ்மாந்தர்
உயிர்பறித்து வெறியாடும்
கொடிய மாற்றார்
பழிமறவான்! களமாடி
எதிர்த்த பகை அழித்தொழிக்கும்
தமிழ் மறத்தின்
வழிமறவான்! எந்தலைவன்
பிரபாகரன் வலிமை
உறுமு சங்கே!

அடிதருவான்...எனினும் உயிர்
பிழைத்திடுக என அயலார்
படைக்கும் காலம்
நொடிதருவான்! களத்துமிசை
உறவிழந்து நொந்த தமிழ்
மழலைக்குத் தன்
மடிதருவான்! போர் மறவன்
ஆயினும் மண் மீதிலிவன்
அன்பொன்றுக்கே
பிடி தருவான்! எந்தலைவன்
பிரபாகரன் பெருமை
கூவு சங்கே!

வீறுடையான்! தமிழ் வேங்கை!
கொடிய பகை வீழ்த்தி எழும்
போரின் ஆற்றல்
நூறுடையான்! மாற்றார்தம்
பாசறையை நொடிப்பொழுதில்
எரித்த சாம்பல்
நீறுடையான் ! தமிழீழம்
நிறுவியவன் எனவரலாற்
றோட்டில் நிற்கும்
பேறுடையான்! எந்தலைவன்
பிரபாகரன் வீரம்
பிளிறு சங்கே!





எனது கவிதை அண்ணா

தலைவனே எங்கள் முதல்வனே!
இராவணன் மகனே !எங்கள் இரத்தத்தின் துடிப்பே!

மலைகளின் உச்சமே உந்தன் மனமும் உச்சமே!
அன்பின் கருணையே ஆழ்கடல் பாசமே!
மானிட ஒழுக்கமே மாறாத முடிவே!
அஞ்சாத குணமே பின்வாங்கா வீரமே!
சாணக்கிய புத்தியே மனுவின் நீதியே!

எந்தன் தலைவனே எங்கள் தலைவனே!
தமிழ்த்தாயின் புதல்வனே
தரணி போற்றும் ஈழப் புதல்வனே!

வற்றாத நதியே சோராத உடலே!

நீ வாழ்ந்த மண்ணில் நாம் வாழ்ந்தோம்
நீ சுவாசித்த காற்றை நாம் சுவாசித்தோம்.

உன் தோள் தேடும் வேளையினில்
வடிக்கிறேன் கவிதையை
வானவில்லைப் போல் வந்து
வாழ்த்திவிட்டுப் போகிறேன்.

இந்த மண் உள்ளவரை
உன் பெயர் காற்றில் எங்கும்
கானமாய்; கதையாய்; அறமாய்
ஒலித்துக் கொண்டிருக்கும்!

ஈழம் ரஞ்சன்
லண்டன்.

61ம் பக்கத் தொடர்ச்சி....

இன்னொரு அதிசயம் என்னவென்றால் அவரிடம் காணப்படும் அபாரமான எளிமை. மிக முதிர்ந்த மனநிலையையும், மிக இளைய மனநிலையையும் சமகாலத்திலே ஒருவர் பெறுகின்றார் என்பது எம்மால் நினைத்தும் பார்க்க முடியாத விடயம். ஏனைய பிற மனிதருக்கு அவர் புகட்டும் பாடம் வரிகளில் அடக்கமுடியாதவை.

இங்கே தான் அவர் வழி வரலாற்றுத்தாய் உணர்த்தும் அரிய செய்தி மனிதருக்காக வெளிப்படுகின்றது. மனிதரிடை மறைந்திருக்கும் மாபெரும் ஆற்றலை உணர்வது அதனை வெளிப்படுத்துவது என்பதுதான் அவர் வழிநிகழ்வதாக உணர்கின்றேன். நவீன அறிவுலகத்தின் அதி அற்புத மனிதப் பிறவியாக அவரை நான் உணர்கின்றேன்.

உன்னையே நீ அறிவாய் என்பார்கள் அவர் தன்னையே தான் அறிந்து தன்னையே தான், தான் நம்புகின்றார். அவர் இயற்கையிடமோ, மனிதனிடமோ தோல்வியை ஒப்புக்கொள்ளப் போவதில்லை ஏனெனில் அவர் தனது இன்றைய நிலையை அடைவதற்கு எவருக்குமே கடமைப்பட்டவர் அல்லர்.

அவ்வாறே அவர் உருவாக்கிய அணியே இன்று உலகின் கவனத்தை ஈர்த்து தமிழினம் தலை நிமிர்ந்து தாழ்வுச் சிக்கல் அகன்று இனமானம் பெற்று வாழ வழிவகுத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். அதற்காக அந்தப் போராளிகள் அணியே தேசியத் தலைவருக்கு பெரு நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு போராளிக்குள்ளும் மறைந்திருக்கும் அரிய ஆற்றலை அவனோ அவளோ உணர வழிவகுத்த திறன் அவரிடமே இருந்தது.

மனித குலத்திற்கே பிரபாகரன் மூலம் சொல்லப்படும் பெறுமானம் மிக்க அரசியல் உணர்த்துகையை இன்றைய நவீன ஆய்வாளர் ஆய்வுகளில் காண முயல்கின்றார்கள்.

மனிதனுக்குள்ளே மறைந்திருக்கும் அரிய ஆக்கத்திறனை ஆற்றலை, புதிதாக உலகைப் படைக்கும் ஆற்றலை அவன் உணராதிருக்கின்றான். அதை அவன் உணர்ந்தால் அவனை வெல்ல எவராலும் முடியாது என்கிற பேருண்மையை பிரபாகரன் ஆய்வுகூட ஆய்வுகளின் வழியன்றி, போராட்ட வழிநின்று நிரூபித்துள்ளார். இது நிச்சயமாக அறிவியலாளர் ஆய்வுக்குப் பின்னொரு காலம் முதன்மைப் பொருளாக அமையப்போகிறது.

எனவேதான் இன்று அவருக்கு அருகாமையில் இருக்க, அவரைக்காண, உணர எம்மக்கள் அலையாக மோதுகின்றார்கள்.

இது தரிசனம் பெறும் காட்சியல்ல. அவர்மூலம் பரவும் பேராற்றலின் பேரொளி வட்டத்தின் கதிர்வீச்சிற்குட்படுவதன் தாக்கம் தம்மையும் உயிர்ப்பிக்கும் என்பதன் வெளிப்பாடே இது.

இமாலய வியப்புத்தான். நவீன போரியல் வளர்ந்த கால கட்டத்திலே கரந்துறைப் போராளியாக மிகச் சிறிய அணியைத் தொடங்கினார். இதுவே பல நூற்றாண்டுக்கால பின் தங்கிய போருத்தி. பனிப்போர் காலகட்டத்து வல்லரசின் பிராந்தியத் தலைமை நாடான இந்தியாவோடு மோதவும் அவர் முடிவெடுத்தார். பின்னர் 20ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலே முதலாளியம் கொடிகட்டிப் பறந்த கால கட்டத்திலே அனைத்து நாடுகளுக்கும் எதிராகவே (மறைமுகமாக) அவர் பெரும்போரை எதிர்கொண்டு நடத்தினார்.

இங்கே கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் நவீன போரியல் வளர்ச்சி, நவீன அறிவியல் உச்ச வளர்ச்சி, தொடர்பாடல் துறையால் உலகம் கிராமமாகி விட்ட நிலை, உலக மயமாக்கல் உச்சக்கட்டமாக அரங்கேறிய வேளை, தனிமனித மேம்பாடு தலையாய விதியாகிய வேளை, இந்நிலையால் இத்தகைய போக்குகளின் தாக்கத்தினையும் தாக்கி அதனை எதிர்த்து போராடி மனிதரின் தாக்கு சக்தியான ஆற்றலே என்னைப் பெருத்த சிந்தனையாளனாக்குகின்றது. எனவேதான் நாம் கூறுகின்றோம் இந்த நூற்றாண்டின் இணையற்ற மனிதர் அவர். இவரது இப்புதிய அரசியல், இராணுவப் பாங்கு இந்த நூற்றாண்டினதும், இனிப் பின்வரும் நூற்றாண்டினதும் விடுதலை வேண்டுவோருக்கான வழிகாட்டி. எனது வியப்புக்களோ எல்லையற்றவை. இவற்றினை இங்கே சிறப்பித்து எழுதியமைக்குப் பிரதான நோக்கம், மேம்பாடடைந்த ஆக்கத் திறன்மிக்க போராற்றல் இசைவடைந்த வாழ்வினைப் பெறமுயலும் மனித குலத்திற்கு அவரது சிந்தனைகள் எவ்வளவு பயன்படும் என்பதை உணர்த்துவதேயாகும். மிகப்பெரும் போராற்றலின் வித்தகனாகத் தோன்றிய அவர் இன்று அமைதியின் எளிமையின் ஆக்கத்திறனின் அறிவியல் வாழ்வின் குறியீடுமாகின்றார்.

போரை நடத்தி போரையே இல்லாமல் செய்துவிட்டார். இன்னொரு போர் மூளுமானால் அதனையும் எதிர்கொள்ளவும் அவர் ஆயத்தமாய் உள்ளார். சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைக்கழகத்தின் பெருநூலகத்தின் வாயிலிலே பொறிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகள் இவை. 'To think Freely is great To think Correctly is greater'

சுதந்திரமாக சிந்தித்தல் என்பது மிகப்பெரிய விடயம்தான். ஆனால் மிகச் சரியாகச் சிந்திப்பது என்பது அதனையும்விடப் பாரிய விடயம். இதனையே எமது தேசியத் தலைவருக்கு நாம் எமது பேரன்பின் வரிவடிவமாகச் சூட்டுகின்றோம்.

POORANI VILAAS
Take-out Restaurant & Catering
Delicious, Quality and Healthy
சுவை மிக்க தமிழீழ, தென்னிந்திய மற்றும் சீன உணவு வகைகள்
சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க, சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்!!!
416.335.7775 / 647.822.4972
6055 Steeles Ave E, Unit 104 (Markham & Steeles) Toronto, ON. M1X 0A7



தமிழீழத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 72வது பிறந்தநாள் நினைவாக!
தமிழீழ மக்களின் விடுதலைக் கனவை நெஞ்சில் சுமந்த தலைவனே!
தமிழினத்தின் உரிமைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவரே!
உன் பெயர் தமிழர் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்!
நீ கண்ட தமிழீழக் கனவும்; தமிழரின் உரிமைக்கான ஏக்கமும் என்றும் மறையாது!
உங்கள் 72வது பிறந்த நாளில் நினைவுகூர்கிறோம்!

PARADISE PRINT Since 1991
Paradise Print
PRINTING | WEDDING INVITATIONS | DESIGN | SIGN & BANNERS
1237 Ellesmere Road, Scarborough, ON. M1P 2X8
416-288-6449
info@paradiseprint.com

அண்ணா.....

நஞ்சினை மாலையாய் அணிந்தவர்
பிஞ்சிலே வேங்கையாய் நிமிர்ந்தவர்
துஞ்சிடா வீரத்தைக் கொண்டவர்–நம்
நெஞ்சிலே ஈரத்தை விதைத்தவர்!

கஞ்சியை நாளுமே உண்டேனும்
பஞ்சியை துளியேனும் கொள்ளாமல்
கொஞ்சியே பேசிடும் தமிழுக்காய்– து
எஞ்சிய வாழ்வினை அர்ப்பணித்தவர்!

மிஞ்சியே பகை படை கொண்டு வந்த
அஞ்சியே எங்கேனும் ஓடிடாமல்
விஞ்சியே நின்று பகை எதிர்த்து– எம்
மஞ்சிய தாய் நாட்டைக் காத்தவர்!

கெஞ்சிடும் குடும்பத்தைத் துறந்தவர்
பஞ்சிடும் பஞ்சணையை வெறுத்தவர்
தஞ்சிடும் மக்களைக் காத்தவர் – கடு
வஞ்சிடும் துரோகிகளை துவைத்தவர்!

வஞ்சியருக்கு சமவுரிமையை கொடுத்
அஞ்சியவருக்கும் வீரத்தை ஊட்டியவ
துஞ்சியவரையும் தன்னாற்றலால்
எழ வைத்தவர் – எதிரியாயினும்
கெஞ்சியவருக்கு உயிர்ப்பிச்சை
கொடுத்தவர்!

கெஞ்சியே இறைஞ்சுகின்றோம்
எஞ்சிய எம் வாழ்வைக் கழித்திட
விஞ்சிய மனவுரத்தை தந்திட – நம்
நெஞ்சிலே என்றும் இறையாய்
வாழுங்கள் அண்ணா! .....

–நிலாதமிழ்.





போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும், தடை நீக்கியாகச் செயற்பட்ட தலைவனும்



1972, 1973, 1974 ஆயுதப் போராட்டம் கருவிலிருந்த காலம். தனியாகவும் சிறு குழுவாகவும் ஆயுதப் போராளிகள் உருவாகிக் கொண்டிருந்த நேரம். துப்பாக்கி, வெடிகுண்டு, புரட்சி என்பவற்றில் அனுபவம் எதுவுமே இல்லாத ஒரு பூச்சியநிலை. ஆயினும் அரச வன்முறையை எதிர் வன்முறையாலேயே எதிர்கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் இளைஞர்கள் சிலர் வீதிக்கு வரத்தொடங்கிய காலம். சிங்கள இனவாத அரச அடக்கு முறைக்கு முண்டு கொடுக்கும் தூண்களை ஆயுதம் கொண்டு அப்புறப்படுத்த அவர்கள் விரும்பினர்.

அன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரிய தடையாக, கோடரிக் காம்பாக துரையப்பா விளங்கினார். சிங்கள அரசின் முகவரான இவர், யாழ். நகர மேயராக பதவி வகித்தபடி தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதனால் துரையப்பாவை அழித்து ஆயுதப் போராட்டப் பாதையை திறந்து வைக்க அவர்கள் விரும்பினர்.

இந்தப் பணியை நிறைவேற்ற பலர், பலதடவைகள் முயன்றனர். வெற்றி கிடைக்கவில்லை. அதேவேளை தமிழின விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்ட துரையப்பா, போராட்டத்தின் பிரதான தடைக்கல்லாகவே மாறிவிட்டார்.

இந்தத் தடைக்கல் அகற்றப்படாவிட்டால் ஆயுதப் போராட்டப் பாதையை திறக்கவே முடியாது என்ற நிலை உருவாகி விட்டது. பலர் முயன்றனர். சிலர் திட்டங்களுடன் நின்று விட்டனர். சிலர் இலக்குவரை சென்று இயலாமையால் திட்டங்களைக் கைவிட்டனர். ஆனால் சிவகுமாரன் பல தடவை முயற்சி செய்தார். கைக்குண்டு வீசி, துப்பாக்கியால் சுட்டு, காருக்குள் குண்டு வைத்து பலவாறு முயன்றார். ஆனால் வெற்றி கிடைக்கவில்லை.

இராணுவ அனுபவமின்மை, அதனால் பதட்டம். அது காரணமாக சகபாடிகளிடமிருந்து ஒத்துழைப்பின்மை, முறையான வழிநடாத்தலின்மை என்பன தோல்விகளைக் கொடுத்தன. இந்தத் தடைக்கல்லை எப்படியாவது அகற்றிவிடுவதென்று தலைவர் முடிவெடுத்தார்.

அது 1975 ஆம் ஆண்டு. அப்போது தலைவருக்கு வயது 21. நம்பிக்கையான சிலரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, துணிவை மூலதனமாக்கினார். என்ன நடந்தாலும் இலக்கை அழித்து விடுவது என்று உறுதி எடுத்தார். தாக்குதலணிக்குத் தலைமை ஏற்றுச்சென்று, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலடியில் வைத்து தடைக்கல்லை உடைத்து ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் பாதையை திறந்து வைத்தார்.

துரையப்பா அழிக்கப்பட்டது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. முதன் முதலில் தமிழ்த்துரோகிகளிற்கு எதிரான தாக்குதலை தலைவர் அவர்களே நடாத்தியிருந்தார். துரோகிகள் ஒழிப்புப் படலம் தொடங்கியது. தமிழரின் ஆயுதப் போர் தத்தித் தத்தி நடைபயிலத் தொடங்கியது. துரோகிகள் களையெடுக்கப்படத் தொடங்கியதும், சட்டம் ஒழுங்கைப் பேணல் என்ற போர்வையில் சிங்களக் காவல்துறை போராட்டத்தை பின் நோக்கி இழுக்க முயன்றது.

தகவல் கொடுப்போரும், உளவுத் துறையினரும், பொலிசாரும் போராளிகளின் இலக்குகளாகத் தொடங்கினர். போராட்டப் பயணம் வெற்றிகரமாகத் தொடர்ந்தது. அப்போது இராணுவம் குறுக்கே வந்து நின்றது. இராணுவம் மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகாண முடியுமா? போராளிகளின் உள்ளத்தில் ஒரு மனத் தடை எழுந்தது. இந்த மனத்தடையை உடைத்தெறியும்படி அன்றைய தாக்குதலணித் தளபதியாக இருந்த லெப். சீலனிடம் தலைவர் பணித்தார். லெப்.சீலனின் தலைமையில் சென்ற லெப். கேணல் புலேந்தி அம்மானும் கப்டன் ரஞ்சனும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வைத்து முதன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிலரை அழித்து அந்தச் சாதனையைப் படைத்தனர்.

போராட்டம் புதியதொரு பரிமாணத்துக்குள் சென்றது. ஒன்று, இரண்டு என்று உதிரிகளாக இராணுவத்தினர் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போக்கிலிருந்து முன்னேறி பெருந்தொகையில் இராணுவத்தினரை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றி இப் புதிய பரிமாணத்தை முன்னோக்கி நகர்த்திவிடும்படி தலைவர் ஆணையிட்டார். கண்ணிவெடி உபாயத்தைக் கைக்கொண்டு அதைச் சாதிக்கும்படி பணித்தார்.

போராளிகள் முயற்சிகளைத் தொடங்கினர். ஆரம்ப முயற்சிகள் சில அரங்கேறாமலே முடிவைச் சந்தித்தன. இதேபோல மேலும் சில முயற்சிகள் பிசுபிசுத்தன. புதிய பரிமாணம் ஸ்தம்பித நிலைக்கு சென்று விட்டது.

அதுவே போராட்டப் பாதையில் ஒரு தடைக்கல்லாகவும் மாறிவிட்டது. இந்த நிலையை வளர விட்டால் போராளிகளின் போராட்ட மனவுறுதி சிதைந்து விடும். அது இராணுவத்துக்கு வாய்ப்பாக அமைந்து போராட்டத்தைப் பாதித்து விடும் என்றுணர்ந்த தலைவர் அவர்கள், கண்ணி வெடித் தாக்குதலொன்றை செய்தார். தானே நெறிப்படுத்தி நேரடியாகக் களத்தில் நின்று வெற்றிகரமாகச் செய்து முடித்து போராட்டத்தை நகர்த்திவிட முடிவெடுத்தார்.

எமது விடுதலைப் போரை சர்வதேச மயப்படுத்திவிட்டதும், சிங்கள அரசின் குரூர முகத்தை உலகிற்கு புலப்படுத்திவிட்டதுமான 1983 யூலை 23 கண்ணி வெடித் தாக்குதலுடன், ஸ்தம்பிதமடைந்து நின்ற போராட்ட வண்டியை திருநெல்வேலியில் வைத்து தலைவர் விரைந்தோடச் செய்தார். திருநெல்வேலிக் கண்ணி வெடிக்குப் பின்னர் எமது விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு திருப்பு முனைகள் நிகழத்தொடங்கிவிட்டன.

இதேவேளை தமிழீழமெங்கும் குறிப்பாக, வடதமிழீழத்தில் நிகழ்த்தப்பட்ட தொடரான கண்ணிவெடித் தாக்குதல்கள் சிங்களப் படைக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தின. அதேவேளை அரசபடைகளுக்கெதிரான கெரில்லாப் போர்முறையும் உயர்ந்த பரிமாணத்தை நோக்கி வீறு நடை போடத் தொடங்கியது. விளைவு இராணுவம் முகாம்களுக்குள்ளேயே முடக்கப்பட்டது.

முடக்கப்பட்ட இராணுவத்தை அதன் முகாம்களுக்குள்ளேயே வைத்து தாக்கி அழிக்கும் திட்டங்களுடனும் போராட்டத்திற்கு எதிரான இந்திய அழுத்தங்களிலிருந்து தப்பிக்கவும் தலைவர் மீண்டும் தமிழீழம் வந்தார். வந்தவுடனேயே மினி முகாம்கள் மீதான தாக்குதற் படலத்தை ஆரம்பித்து வைத்தார். பதுங்கித் தாக்குதல் என்ற கெரில்லாத் தாக்குதற் போர் முறையின் ஆரம்ப வடிவம் கொமாண்டோத் தாக்குதல்களாகவும், அதிரடிகளாகவும் பரிமாணம் கண்டன. சிங்களப் படையணிகள் இராணுவத் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கின. போராட்டம் புது வேகத்துடன் விரைந்தது.

இந்த உண்மையை உணர்ந்த இலங்கை இந்திய அரசுகள் எமது போராட்டத்திற்கு எதிராக கைகோர்த்தன. இந்திய அரசின் அனுசரணையுடன் சிங்களப் படைகள் ஒப்பறேசன் லிபரேசனை நடாத்தி வடமராட்சியை ஆக்கிரமித்தன. அத்துடன் நிற்கவில்லை. ஆனையிறவிலிருந்து படை நடாத்தி வந்து அதன் துணையுடன் வலிகாமத்தையும் கைப்பற்ற முயற்சிகள் நடந்தன. யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர்.

எனவே புதிய போர்முறை ஒன்றை அறிமுகப்படுத்தி, சிங்களப் படைத்துறைக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து விடுதலைப் போரை ஒரு புதிய உயர்ந்த பரிமாணத்துக்குள் கொண்டு செல்ல தலைவர் முடிவெடுத்தார். கரும்புலிகள் போர்முறையை வரைந்தார். மில்லர் என்ற வீரப்புலியை கரும்புலியாக்கி எதிரியின் கூடாரத்திற்குள் அனுப்பி ஆக்கிரமிப்புப் புற்று நோய்க்கு அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்தார். சிங்களப் படைத்துறை திகைத்தது. போராட்டம் எதிர்கொண்ட நெருக்கடி தகர்ந்தது.

மீண்டும் போராட்ட வண்டி நெல்லியடியில் இருந்து முன்னேறத் தொடங்கியது.

70ம் பக்கம் பார்க்க...



ராஜகோபுரம் எங்கள் தலைவன்!



தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் தமிழீழத் தேசியத் தலைவர் நடாத்திய போராட்டமென்பது வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. தமிழீழ விடுதலையை நோக்கமாகக் கொண்டு செயற்படப் புறப்பட்ட அமைப்புகள் காலப்போக்கில் இல்லாமற்போக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 2009 ம் ஆண்டு மே வரை தமிழீழப் பகுதிகளில் செயற்பட்டு அதனதன் போராட்டம் மௌனிக்கப்படுகிறது. தமிழீழத் தேசியத் தலைவர் தமிழீழம் என்ற இலட்சிய நோக்கு உலகத்தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் முப்படைகளை உருவாக்கி தமிழீழ தாயகப் பகுதியில் நடைமுறை அரசை தோற்றுவித்தவர் தமிழீழத் தேசியத்தலைவர். தமிழீழத் தேசியத்தலைவர் தமிழீழம் என்ற இலட்சியத்தில் மிகவும் உறுதியாக இருந்தவர். இன்று ஊடகவியலாளர் வன்னியில் தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்து பேச தமிழீழக் கொள்கையை நீங்கள் கைவிட்டால் உயிர்களுக்கு என்ன நடக்கும் என்று கேட்டபோது போராளிகள் என்னவென்றாலும் எனக் கூறியுள்ளார்கள். இதே கேள்வியை 2002ம் ஆண்டு சமாதான காலத்தில் வன்னியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலும் பத்திரிகையாளர்கள் கேட்ட போதும் ஏற்கனவே கூறப்பட்ட விடயம் நடைமுறையில் இருப்பதாகவும் கூறியிருந்தார். இதேபோல இந்திய இராணுவ அதிகாரி தலைவரை சந்தித்தபோது இரு பிள்ளைகளை உனக்கு அழகான பிள்ளைகள் மனைவி இருப்பதனால் விடுதலைப் போராட்டத்திலிருந்து விலகி மனைவி பிள்ளைகளுடன் வாழும்படி கூறியபோது தலைவர்கள் இராணுவ அதிகாரியை நோக்கி நீரும் ஒரு இராணுவ அதிகாரி நீரும் அப்படி நடந்திருவீர்களா எனக் கேட்டு கூறியிருந்தார். தமிழீழத் தேசியத்தலைவர் எந்த ஒரு காலகட்டத்திலும் தமிழீழம் என்ற இலட்சியத்திலிருந்து இம்மியளவும் விலகவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே கொள்கையை விட்டுக் கொடுக்காத உன்னதமான தலைவரே!

–குலம் (சுவிஸ்)–



62ம் பக்கத் தொடர்ச்சி....

பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம். இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண் பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண். இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள்.

எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம். ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட்டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச்செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமை கோரி, தமிழ் மக்கள் தொடுத்த சாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது. அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது. சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகாணவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர். அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை.

சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுக்களில் பங்குபற்றி வந்திருக்கிறோம். எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழுமனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத கடும்போக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பியபோதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுக்களில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம். ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம். இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக்கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முகமூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளையோ இனப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினைகளையோ தீர்ப்பவையாக அமையவில்லை. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தியது. பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது. பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தது. எமது சுதந்திர இயக்கத்தை இந்நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன. தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன. இந்நாடுகளின் ஒரு பக்கச்சார்பான இந்த நடவடிக்கைகள் பேச்சுக்களில் நாம் வகித்த சமநிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப்போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை கவலை கூடத் தெரிவிக்கவில்லை. மாறாக, சில உலகநாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன. இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது.

இன்று சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கைகொண்டு செயற்படுகிறது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சிபுரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது. இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று. இது தமிழருக்கு எதிரான போர் தமிழ் இனத்திற்கு எதிரான போர் தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர் மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர். இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது.

Buying and Selling All your Real Estate Needs

Rajah Tharmalingam
647-833-4998
cynthiarajah@yahoo.ca
www.rajahhouses.com

Homelife/Future Realty Inc.
Brokerage, 205-7 Eastvale Dr,
Markham, ON., L3S 4N8
Bus:905-201-9977 Fax:905-201-9229





67ம் பக்கத் தொடர்ச்சி....

ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்ற ஒரு சதித் திட்டத்தைத் தீட்டி, இந்தியத் துருப்புக்களை தமிழீழத்துக்குள் கொண்டுவந்தனர். ஒரு வல்லரசுடன் மோதுவதைத் தவிர்க்கவும், அமைதி இழைகள் கொண்டு பின்னப்பட்ட சூழ்ச்சி வலைக்குள் தமிழினம் சிக்கிவிடாது தடுக்கவும் அரசியல் சதுரங்கத்தை தலைவர் அவதானமாக ஆடினார். ஆனால் இந்திய அரசோ அரசியல் விளையாட்டுகளுக்கு அப்பால் நரபலி எடுக்கத் தொடங்கியது. தமிழருக்கு உரிமை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக தமிழீழ தேசியத்தை கொன்று விடுவதிலேயே இந்தியா குறியாக இருந்தது.

இந்திய இராணுவ பலத்திற்கு அடி பணிவதன் மூலம், இரத்தம் சிந்தி நாம் வளர்த்தெடுத்த, தமிழீழ தேசியத்தை இந்தியா கொலை செய்ய அனுமதிப்பதை விட, எதிர்த்துப் போராடி அதைப் பாதுகாக்க முனைவதே சிறந்தது என தலைவர் முடிவெடுத்தார்.

இந்திய - புலிகள் போர் தொடங்கியது. ஒரு மாதத்தில் யாழ். மாவட்டம் வீழ்ச்சியுற்றது. மற்றைய மாவட்டங்களும் இந்தியச் சிப்பாய்களின் ஆக்கிரமிப்புக்குள் தான் உள்ளாகின.

ஆயினும் தமிழீழத்தின் இதயத்துக்குள் புகுந்துகொண்ட தமிழீழத் தேசியக் காவலன் தலைவர், இந்தியச் சிப்பாய்களிடம் சிக்கிவிடவில்லை. போராட்ட வண்டியை மீட்டெடுக்க ஒரு மீட்புப் போரை தொடங்கினார். ஆனால் தலைவரைக் கொல்லும் இலக்குடன் தமிழீழத்தின் இதயம் மீதே இந்திய அரசு ஒரு பெரும் படையெடுப்பை நடத்தியது. வெள்ளம் போல் வரும் இந்தியச் சிப்பாய்களிடமிருந்து உயிரைப் பாதுகாக்க பணிந்து போவதே சிறந்தது என்று தலைவருக்குப் பலர் ஆலோசனை கூறினர். தலைவர் உயிருடன் இருந்தால்தான் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியும் என்ற உண்மையை எடுத்துக்கூறி வாதிட்டனர்.

ஆனால், போராட்ட வண்டியை இழந்துவிட்டு தான் உயிர் வாழ தலைவர் விரும்பவில்லை. எனவே போராட்ட வண்டியை மீட்டெடுப்பதற்காக இந்தியப் படையுடன் போராடி அதன் மூலம் சாவு வந்தால் அதை எதிர் கொள்ளவே தலைவர் விரும்பினார்.

இதேவேளை இந்திய வல்லரசுடன் போரிட்டு வெல்ல முடியுமா? என்ற அவநம்பிக்கை மக்களை மட்டுமல்ல எமது மூத்த உறுப்பினர்கள், தளபதிகள், போராளிகள் என்று அனைவரையும் ஆட்கொண்டிருந்தது.

இந்த நிலையில் இந்தியப் படையுடன் போரிட்டு எமது விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற மிகவும் துணிச்சலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவை தன்னந்தனியனாகவே நின்று எடுத்த தலைவர் அவர்கள், தீர்மானத்துடன் நின்று விடாது, தானே போர்க்களத்தை நேரடியாக வழிநடாத்தத் தொடங்கினார். கெரில்லாப் போர்முறையில் புதிய, புதிய நுட்பங்களை, புதிய புதிய தந்திரோபாயங்களை புகுத்திய தலைவர் அவர்கள் புலிகள் இயக்கம் சரித்திரம் படைக்க வழி காட்டினார்.

மணலாற்றுக் காட்டுக்குள் தலைவரின் நேரடி வழிகாட்டலில் புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கிய புலிவீரர்கள் படிப்படியாக தமிழீழமெங்கும் இராணுவ சாதனைகளைப் படைக்கத் தொடங்கினர். இந்தியப் படைகளின் செக்மேற் நடவடிக்கையினை வெற்றிகொண்டதன் மூலம், மீட்கப்பட்ட எமது போராட்ட வண்டி மணலாற்றுக் காட்டுக்குள் இருந்து புத்தூக்கத்துடனும், புதிய வேகத்துடனும் புறப்படத் தொடங்கியது. தோல்விச் சகதிக்குள் இந்தியப் படை மாட்டிக்கொண்டது.

இழப்புக்கள் என்ற தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தியப்படைகளை மேலும் விரைவாகத் தோற்கடிப்பதற்காக ஒரு இராஜதந்திர வியூகம் வகுத்த தலைவர் அவர்கள் சிங்கள அரசின் ஒத்துழைப்பையும் பெற்று அரசியல் இராணுவ ரீதியில் பெருவெற்றி ஒன்றை தமிழினத்துக்குப் பெற்றுக் கொடுத்தார். இதன்பின்னர் இரண்டாவது ஈழப்போர் என்ற பகுதியூடாக எமது போராட்ட வண்டி, சிங்களப் படையணிகளுக்கு பேரிழப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு உறுதியான ஒரு தளத்தில் இறுதி வெற்றியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

Raman Home Comfort Inc.
Raman Chellaiah
416-332-2989 / 416-332-4967
6055 Steeles Ave. E. Unit C105
Totonto, ON., M1X 0A7
www.ramanhomecomfort.com
admin@ramanhomecomfort.com



தலைமகனே தலைவா வாழ்க

இடைமாறா கொள்கையுடன்
நடம் மாறா உறுதியுடன்
முப்பது ஆண்டுகள் தமிழீழ தேசமதில்
முப்படை கட்டி ஆட்சி செய்த ஆளுமை எம்
தலைவர்

மெய்ப்பட்டான் அதியுடன் முடிசூடா மன்னனாக
மூவுலகம் போற்ற வாழ்ந்த முழுநிலவு எம்
அண்ணன்

தமிழினத்தின் காவலரே!
தமிழ் தேசத்தின் ஒளிவிளக்கே!

உலகே வியக்கும் உள்நிலை போரை
உணர்வுடன் வழிகாட்டிய உத்தமரே!

நீதி நெறி தவறாத நந்தலம் தமனியமே நினைந்து
நித்தம் யுத்தம் செய்த மகன் தன் தேசம் விட்டுச்
சென்ற தெங்கே?

எழுபத்திரண்டாவது அகவை நாளில்
என்னை இங்கே தேடுகின்றோம்
இருந்தும் -----.

வாழ்த்துகிறேன் அகவை நாளில்
தலமகனே தலைவா வாழ்க!
முன்னது நின்ற புலியே வாழ்க!

ஒப்பற்ற தலைவா வாழ்க!
ஓங்கும் புகழ் இறைவா வாழ்க!
தமிழ் மக்களின் உன்னதரே! – தமிழ்
உலகு உள்ளவரை
உயிர் வாழும்
உம் தியாகம்.

ஆக்கம் ! – சு.வு. ஞானி



புலி வீரர்களின் நெஞ்சுறுதி எங்கிருந்து வருகின்றது?

இழப்புகள் இலட்சிய உறுதியை ஆட்டங்காணச் செய்யும் என்பதும், சோகங்கள் விரக்தியின் விளிம்பிற்கு இழுத்துச் செல்லும் என்பதும் பொதுவான மனித சுபாவம்.

ஆனால், புலிகள் இயக்கத்தின் போராட்ட வரலாற்றை ஆய்வுசெய்யும் ஒருவர், பெரும் இழப்புகளும் தீராத சோகங்களும் போராட்டத்தின் வீழ்ச்சிக்கு வித்திடுவதற்குப் பதிலாக, வெற்றிக்கும் எழுச்சிக்கும் வழிகோலியுள்ள அதிசயத்தைக் கண்டுகொள்வார்.

இராணுவ ரீதியாக பின்னடைவுகளையும் பேரிழப்புக்களையும் பெரும் நெருக்கடிகளையும் புலிகள் இயக்கம் சந்தித்த நிகழ்ச்சிகள், எமது போராட்ட வரலாற்றில் நிறைய உண்டு. ஆயினும், அவற்றைத் தோல்வியின் வரலாறாக வளர விடாமல், வெறும் சம்பவங்களாகவே இருக்கவைத்து, அதன்மீது வெற்றியின் படிக்கட்டுகளை அமைத்த பெருமை தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும்.

அடுத்தடுத்து நடந்த ஆனையிறவுச் சமரிலும் மணலாற்றுச் சமரிலும், சுமார் 900 போராளிகளை இழந்து புலிகள் இயக்கம் பாரிய நெருக்கடியைச் சந்தித்தபோது, எதிரியின் கூடாரத்தில் விருந்துகள் நடந்தன, புலிகள் இயக்கத்திற்கும் தலைவர் பிரபாகரனுக்கும் குடாநாட்டுக்குள்ளேயே இறுதிப் புதைகுழியை அமைக்க, சிங்களப் படைத்தலைமை கனவுகண்டது. குடாநாட்டைச் சூழ முற்றுகை வலைவிரித்து, புலிப்படையின் நாடி நாளங்களைத் துண்டித்து, அதன் வரலாற்றுச் சாவைப் பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிங்களப் படைத்தலைமை, யாழ். நீரேரிக்குள்ளிருந்து எழுந்த "கடற்புலிகள் என்ற திமிங்கிலத்தைத்தான்" இறுதியில் கண்டுகொண்டது. அந்தக் கடற் திமிங்கலத்தின் எழுச்சி, குடாநாட்டை கட்டிவைத்திருந்த இராணுவச் சங்கிலிகளை அறுத்தெறிந்ததுடன், பூநகரிப் படை முகாமுக்கும் சமாதிகட்டி - சிங்கள தேசத்தில் ஆயிரம் புதைகுழிகளையும் அமைக்கச் செய்துவிட்டது.

தமிழர் நிலத்தில் விதைக்கப்படவிருந்த ஒரு வரலாற்றுத் துயரை, இடைவிடா முயற்சி என்ற துடுப்புக்கொண்டு திசைமாற்றி, சிங்களவர் தேசத்திற்கே அனுப்பி வைத்த அற்புதத்தைத் தலைவர் அவர்கள் நிகழ்த்திக்காட்டினார்.

புலிப்படையின் வீழ்ச்சி பற்றி புத்தகங்கள் எழுதக் காத்திருந்தவர்கள், இறுதியில் சிங்களப் படையின் தோல்வி பற்றியே தொடர் கட்டுரைகளை எழுத வேண்டியதாயிற்று.

எமது போராட்ட விருட்சத்தை ஆணி வேருடன் பிடுங்கி எறிய, இந்திய அரசு ஒரு போரையே தொடுத்தது: விழுதுகளை வெட்டி வீழ்த்தி ஆலமரத்தை அடியோடு பெயர்க்கும் தந்திரத்தை அது கடைப்பிடித்தது.

தலைவர் என்ற ஆலமரம் தளபதிகள் என்ற விழுதெறிந்து விரிந்து பரந்து, தமிழீழத் தேசியத்திற்குக் கூரையாக இருந்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

எமது தளபதிகளை நயவஞ்சகமாகக் கொன்று - போராட்டத்தின் விழுதுகளை வெட்டி வீழ்த்தி - ஆலமரத்தை அடியோடு சாய்க்கக் கனவுகண்ட இந்திய அரசு, இறுதியில், பலநூறு புதிய விழுதுகளுடன் ஆலமரம் மேலும் பலம்பெற்று உறுதியுடன் நிற்பதைத்தான் கண்டது.

விழுதுகளை வெட்டினால் ஆலமரம் நிலைகுலையும் என்ற பொதுவிதிக்கு, புலிகள் இயக்கம் விதிவிலக்காக இருந்தது.

"தளபதிகள் புலேந்திரன் - குமரப்பா ஆகியோரின் அநியாயச் சாவால் எழுந்த வேகமும் அது தந்த மனவுணர்வும்தான், இந்தியப் படையுடன் போராடும் மன வலுவை எனக்குத் தந்தது" என்று, தலைவர் அடிக்கடி கூறுவார்.

தளபதிகளின் இழப்புகளும் போராளிகளின் வீரச்சாவுகளும் தலைவரின் இதயத்தில் சோக விதைகளாக வீழ்வது என்பது உண்மைதான். ஆனால், அவை தலைவரின் இலட்சிய உறுதியை அசைத்துப் பார்ப்பதில்லை. அந்த ,இழப்புகளால் வரும் ஓர்மம் அவரை இலட்சியப் பாதையில் வீறுடன் செல்லவைத்திருக்கின்றது.

இழப்புகளையும் சோகங்களையும் கண்டு பின் வாங்குவதற்குப் பதிலாக, மேலும் மனவுறுதி பெற்று நெருப்பாறுகளைக் கடக்க முயல்வது, தலைவர் வகுத்து வைத்திருக்கும் ஒரு மரபு.

இந்த வீர மரபுடன் கூடப்பிறந்துள்ள உயிராபத்தைக் கண்டு முயற்சியை நிறுத்தவோ, இலட்சியப் பயணத்தைக் கைவிடவோ தலைவர் என்றும் தயாராக இருந்ததில்லை. எமது போராட்ட வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியிலும் போராட்டத்தின் பாய்ச்சலிலும் இந்த மரபு தனது முத்திரையை ஆழமாகப் பதித்திருப்பதைக் காணலாம்.

எந்தெந்தக் காலத்தில் புலிகள் இயக்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றதோ, எவ்வெப்போதெல்லாம் அது தாங்கமுடியாத சோகங்களை எதிர்கொள்கின்றதுவோ, அப்போதெல்லாம் தலைவர் பிரபாகரன் அவர்கள் அபாரமாகச் செயற்பட்டு, சாதனைகளையும் வீரவரலாறையுமே உருவாக்கி விட்டிருக்கின்றார்.

நீண்ட பல ஆண்டுகளாகத் தலைவருக்கு உற்ற நண்பனாகவும் தோள்கொடுக்கும் தளபதியாகவும் இருந்து செயற்பட்ட கிட்டண்ணா, வங்கக்கடலில் இந்தியச்சதிக்குப் பலியாகிவிட்டார் என்ற செய்தி தலைவரின் காதுகளை வந்தடைந்தது.

எனக்கு அப்போது அழவேண்டும் போல் இருந்தது' ஆனால் நான் அழ மாட்டேன். தமிழர் அழுது கண்ணீர்விட்டுக் கவலையை ஆற்றியகாலம் போய்விட்டது' இது தமிழனை அழவைத்தவனை அழவைக்கும் காலம்" - கிட்டண்ணையின் வீரச்சாவு கொடுத்த உள்ளுணர்வு பற்றி இப்படித்தான் தலைவர் நினைவுகூர்ந்திருந்தார்.

இழப்புகளை உள உறுதியின் மேம்பாட்டிற்காகவும், நெருக்கடிகளைச் சாதனைகளின் தொழிற்சாலையாகவும், சோகங்களை வீரச் செயற்பாடாகவும் மாற்ற முயற்சிக்கும் இந்தப் புதிய மரபு, தலைவர் அவர்களிடம் அண்மையில் ஆரம்பத்திலிருந்தே - இயக்கம் முதற் போராளியை ,இழந்த அந்த நாளிலிருந்தே -தலைவரை ஆட்கொண்டிருக்கின்றது. ஏற்பட்ட ஒன்றல்ல' அது போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே - இயக்கம் முதற் போராளியை இழந்த அந்த நாளிலிருந்தே தலைவரை ஆட்கொண்டிருக்கிறது.

முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த செய்தியைக் கேள்வியுற்ற அந்தக் கணப்பொழுதிலேற்பட்ட தனது உள்ளத்து உணர்வுகளைத் தலைவர் அவர்கள் எழுத்தில் வடித்திருக்கிறார்.

"..சத்தியநாதனே! நீ வீர மரணமடைந்ததையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய்? இல்லை இல்லை..... ஒரு வீரனின் மரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம்' தொடர்வோம் உன் பாதையில், அடைவோம் உன்னை போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை."

எமது இயக்கத்தின் முதல் மாவீரன் வீரச் சாவடைந்தபோது தலைவர் எடுத்துக்கொண்ட அதே உறுதிமொழியைத்தான் இன்று, 6897 ஆவது மாவீரன் நிலத்தில் சாயும்போதும் உச்சரிக்கின்றான்.

ஒரு போரில் பின்னடைவுகளும் பேரிழப்புகளும், சம்பந்தப்பட்ட இராணுவத்தைத் தோல்விச் சகதிக்குள் தள்ளிவிடும்.

படையியலில் இது ஒரு அரிச்சுவடி.

பேரிழப்புகளும் பெரும்நெருக்கடிகளும் ஒரு மனிதனது உள உறுதியைச் சிதைத்துவிடும்.

மானிடனின் வாழ்வில் இது ஒரு பொது நியதி.

ஆனால், இவை இரண்டும் தலைவர் பிரபாகரனிடம் சென்றதும் விதிவிலக்காக மாறிவிடுகின்றனவே!

தலைவரிடமிருந்து வரும் இந்தப் புதிய வீர மரபைப் புலிவீரர்கள் உள்வாங்கி, தமிழீழத் தேசியத்தின் பரம்பரைச் சொத்தாக மாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்!

-து.ரவி (சுவிஸ்) விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியர்-





தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ விடுதலைக் கால தனிகா அணியிலிருந்து செயற்பட்ட காலத்தில் இஸ்லாமிய இலங்கை காவலர் படையணிடம் அகப்பட்ட வேளையில் மிகவும் தைரியமாக தப்பித்துக் கொண்டவர். அதே போல ஆரம்ப கால செயற்பாடுகள் போன்று அமைக்கப்பட்ட ஆயுதங்களைப் பெற்று பரீட்சித்து பார்க்கும்போது ஆயுதம் இழந்து வெடிப்புத் தவறுதல் காடுகளில் நின்றவர்கள் காயங்களுக்கு உட்பட்ட போதிலும் தலைவர்கள் எவ்வித காயங்களும் ஏற்படாமல் தப்பித்துக் கொண்டார். அதேபோல பல சம்பவங்கள் உண்டு. தமிழீழ மக்களுக்கு ஒரு தலைமை வேண்டும் என்பதில் தலைவர் பங்களிப்பு மிக முக்கியத்துவம் பெற்றது. உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழத் தேசியத் தலைவர் வழிகாட்டலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மிகவும் உன்னதம் பெற்றது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழத் தேசியத் தலைவர்கள் பலவிதமான இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள், காட்டிக்கொடுப்பவர்கள் வீழ்ந்து போனிலும் எதற்கும் கலங்காமல் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு, தமிழீழத் தேசியத் தலைவரது செயற்பாடு என்றும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவை. குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு - அடுத்த கள்அறிவுக்கு கடத்தப்பட வேண்டியவை. ஒவ்வொரு காலகட்டத்திலும் தலைவரது எண்ணம், சிந்தனை, மதிநுட்ப செயற்பாடுகள் தமிழீழ நடைமுறை அரசை நோக்கி பயணிக்க வைத்தது. உலகத் தமிழர்கள் பெருமையும் கொண்டார்கள். எந்தவொரு நாட்டினதும் உதவி இல்லாமல் தமிழீழ மக்களின் பூரண ஆதரவு உழைப்புடன் தமிழீழத் தேசியத் தலைவர் செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். தமிழீழத் தேசியத் தலைவர் பிறந்த நாளில் தமிழீழ விடுதலைக்கான செயற்பாடுகளை மீட்டுப் பார்ப்பதில் பெருமை கொள்கிறேன்.



HOMELIFE ALPHA
REAL ESTATE LTD., BROKERAGE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS

Killi Chelliah
SALES REPRESENTATIVE
416.624.7562

Ranjan Francis Xavier
SALES REPRESENTATIVE
416.816.1220



எம் மா மன்னன் அண்ணனுக்கு அகவை எழுபத்து இரண்டு.



வெள்ளியலை துள்ளிவந்து
வெந்தணல் மணிபார்த்தது – ஈழ
புள்ளி யொன்றை தரித்து விட
சொல்லியதோ பாரதிக்கு
கல்வார் தாயையர் நம் உயிர் உருவு
வல்வை உதித்த கதிரவனே வாழிய நீ என்றும்!

செங்கலர்ந்து மறவா சேவலே நீ சுவையிழைத்த
செங்கரும்பு சாறுகளை செப்பனிட்டு செம்மை கண்டு
அங்கரனில் நிறமை ஆழி வானமும் மண்ணநீர
ஆனையிறவை ஆழ்கடலை அடங்காப்பற்றை,
மீட்டு ஆண்டவனே – நல்
ஆண்டவனே வாழிய நீ என்றும்!

ஏக காலரமங்கும் ஈழசோழ மன்னன் நிழல் அரசே நிழலாய்,
ஈழத்தமிழர்கிதோர் ஈடில்லா வரம் படைத்தாய் தலைவா,
கருநீலற்ற களனியெங்கும் எழில் பொங்க
செருத்தற்றோம் செம்மை கண்டோம் – உலகில்
மிடுக்கற்றோம் நெறி பிறழா மன்னா உன்னால்
வாழிய நீ என்றும் வாழிய!

புறம் வென்றடுகை வீரர் உயிர்
அறம் கண்ட கரிகாலர்
விடம் உண்ட மா சேகைளின் எல்லாளா,
எழுபத்திரண்டகண்ட எழுகதிரே,
எண்திசையும் தேடுகின்றோம் எழுந்தருளிவாய்
எந்திருப்பினும் வாழிய நீ என்றும் வாழிய!

கரவை கலா.



காணுறை வேங்கையின்
கனலும் கண்களைப் பார்த்திருந்தால்...
சமாதானத்தின்
வெள்ளைச் சொற்கள் தீர்ந்து
பீரங்கியின் மேல் அமர்ந்திருக்கும்
புறாவின்
சிறகுகளைத் தடவிக் கொடுத்திருந்தால்...
நான் உங்களுக்கு
அந்தப் பெயரைச் சொல்லவேண்டியதில்லை
இன அழிப்புக்கு எதிரான
அந்தப் பெயர்
எங்களுக்கு ஓர் ஆயுதம்
அது எங்கள் படையெடுப்பு
அது எங்கள் மானங்காத்த சீருடை
அது எங்கள் காயம் ஆற்றிய சிகிச்சை
எம் பெண்களை
வன்புணர வருகின்றவர்களின்
வழியில்
அது ஒரு கண்ணிவெடியாக இருந்தது
எம் குழந்தைகளுக்கு
தாய்ப்பாலாகச் சுரந்தது
மாபெரும் மனிதச் சங்கிலியான
அந்தப் பெயர்
எங்களுக்கு ஒரு விதை
அது எங்கள் பசி
அது எங்கள் தாகம்
அது எங்கள் இரத்தம்
அது எங்கள் தழும்பு
அது எங்கள் புன்னகை
காற்றில்
தீச்சுடராய் அசையும்
காந்தள் மலரைத் தொட்டுப் பாருங்கள்
அந்தப் பெயரை
நீங்களும் சூடிக்கொள்வீர்கள்
உயிருருக்கும்
யாழிசையைக் கேட்டுப் பாருங்கள்
நீங்களும்
அந்தப் பெயரை
நீங்களும் பாடிச் செல்வீர்கள்
மனிதர்களுக்கு எதிரானவர்கள்
அந்தப் பெயரை
முள்ளிவாய்க்காலில்
புதைக்க நினைத்தார்கள் ...
நந்திக் கடலில்
கரைக்க நினைத்தார்கள்...
அது
எங்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு
அழைத்துச் செல்லத் தொடங்கிவிட்டது
அந்தப் பெயர்
எங்கள் வழித்துணையல்ல
வழியே அதுதான்

- பழநிபாரதி





THINKING OF BUYING or SELLING YOUR PROPERTIES

Rave P Raventhiran

Realtor
Dir: 416-567-2462
realtor.rave@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned & Operated
7 Eastvale Dr., Suite 205 Markham, ON, L3S 4N8
Bus: 905-201-9977 | Fax: 905-201-9229



தானைத் தலைவர்

கதிரவனின் உடலிருந்து
உருவான ஒருப்பு
பல கோடித் தமிழரின்
உயிர் நாடித் துடிப்பு....!

உலகாண்ட தமிழ் கண்ட
உயர்வான சிறப்பு
வல்வை மண் ஈன்ற
பிரபாவின் பிறப்பு....!

ஈழத் தமிழரின் எரிமலை
வேழம் நிகர்த்த வேங்கை
அகிலம் வியந்த அதிசயம்
நாவில் நடமிடும் நாயகன்....!

கடமை கண்ணியம்
கட்டுப்பாடு நிலைநாட்டி
கண்ணீர் துடைத்த கருணை
நிடமனம் உடைய செம்மல்....!

களங்கள் பல கண்ட
எம் தேசியத் தலைவர்
எப்போதும் எம்மனங்களில்
வீற்றிருக்கின்றார்....!

ஒரு மனிதர் மக்களுக்காக
வாழ்ந்தால் அவருக்கு
மரணமே இல்லை என்ற
புரிதலைத் தந்தார்....!

எம் மண்ணைக் காவல் செய்த
அந்தப் பொற்காலத்தை
எண்ணி எண்ணியே
நினைந்துருகி நிற்கின்றோம்....!

திருமதி தமிழரசி ஜெயதாசன்
பிரித்தானியா..



நெஞ்சார நினைப்போடு நீங்காத
நினைவுகள்தமிழ் கூறு நல்லுலகின்
தனிப்பெரும் தலைவா!
நான் வீழ்வின் தம் இனம் வீழா
தலைவனே!
தாங்கொணா துன்பத்தை தாங்கிய
தங்கமே!
தாயகத்திலே தமிழ் வீரம் தந்த வேந்தே!
பொய்மையும் புகழுரையும் ஏற்றாக
அண்ணனே
பொய்தேமிழழாய் தமிழ் பூமி எங்கும்
பொங்கி எழுந்தீர்!
புலம் பெயர் தமிழர்களிடம்
புன்னகையோடு
தேசியத்தை வளர்த்தீர். புலி பசித்தாலும்
புல்லைத் தின்னாது என்பது முதுமொழி
புலி வீரம் எப்போதும் தோற்றதுண்டா?
புல்லுருவிகள் காலத்தால் அழிவர்
தேசியத்தின் திசை எங்கும் திகட்டாத
வீரம் விளைத்தீர்
கேட்பதற்கு நாதியற்ற இனம் என
நினைத்தபோது எழுந்த தலைவா



தேசியத் தலைவரின் இலட்சியம் நினைவாகும் வெகுவிரைவில் தமிழீழம் பிறக்கும்
- குமார் (ராதா) 416-358-5478

New Royal Fashions

Jewellery & Latest Fashion for best prices | Bridal Jewellery Rental
Tel: 416-519-1119 | Cell: 416-358-5478
6055 steeles Ave. East Unit C127 (Markham & Steeles- Yellow Building)
Scarborough, ON M1X 0A7



தமிழர் இறைவன் கரிகாலன்!

தலைவன் பிறந்தான்...
தலைவன் பிறந்தான்
தமிழினம் எழுந்ததடா!! – எங்கள்
புலிக்கொடி பறந்து!!
புலிக்கொடி பறந்து!
புரட்சியும் வெடித்ததடா!

தலைவன் பிறந்தான்..
தலைவன் பிறந்தான்..
தலைமுறை நிமிர்ந்தடா! – தமிழ்த்
தேசம் பிறந்து.. தேசம் பிறந்து
விடுதலை திறக்குமடா!

எங்க.. குல சாமியின்
பிறந்த நாளிது..
எங்க தமிழ்ப் புமி யே
சிறந்த நாடிது..

எழுபத்து ஒன்றை எட்டும்
எங்கள் தலைவனே.. பார்
எட்டுத் திக்கும் வணங்குது..
நீங்க இறைவனே..
ஆதி இனம் எங்களுக்கு
பெருமை இருக்குது
எங்க பிரபாகரன் பேர சொன்னா
வலிமை பிறக்குது..

வீதியெல்லாம் தமிழர் கொடி
உயர்ந்து பறக்குது!
எங்க வீரமகன் பிறந்தநாளில்
எழுந்து நடக்குது!

முப்பாட்டன் முருகன் தானே
வேலெடுத்து காக்க வந்தான்..
எம்பாட்டன் சோழன் தானே
வாளெடுத்து நாட்ட வென்றான்..

முருகனையும் சோழனையும்
சேத்து வச்சு பாக்குறோம் – எங்க
கரிகாலன்.. பிரபாகரன்
பிறந்ததாலே.. வாழ்கிறோம்!

தலைவன் பிரபாகரன்
பேருக்குள்ளே
எரியுதடா நெருப்பு.. அவன்
தமிழர்களை காக்க நிற்கும்
எங்க சாமி கருப்பு!

– கவிபாஸ்கர்


Realtor
Kailain Thillainathan
647-668-8276

Buying / Selling / Investing
Royalanteam
Homelife Future Realty Inc.
2nd Top Producer
Million Dollar Award
Your Trusted Real Estate Partners


Realtor
Raghu Thillainathan
416-629-5800



பல்லாயிரம் மாவீரர்களின் மகாதந்தையே
நீங்கள் மறையவில்லை ஐயா!
என்றும் எம்மோடு பயணிக்கும் வீர மாண்பே
தெய்வங்கள் கூட தோற்றுப் போகலாம்
எங்கள் தேசியத் தலைவன் தோற்றதுண்டோ? காலை சூரியனே! இனிய கண்திறந்து
தமிழ் மொழில் வாழும் தன்னிகர் தலைவனே
தரணி எங்கும் தமிழ் வளர்க்கும் காவியமே!
தங்கமே நீவிர் வாழ்க! உங்கள் அகவையை நினைப்பது எமக்கு
எந்நாளும் பொன்னாளே! காலத்தில் அழியாத காவியம் நீங்கள்
கலங்கரை விளக்காக வந்த மாமணியே!
கடமைகளை கண்ணியமாக்கிய கலையழகு
கார்காலம் வந்துவிட்டால் என்றும்
அகவை நாயகனின் அன்பால் மகிழ்வோம்
வாழ்ந்திடுவோம் தமிழ் தேசியத்தில்! காலக் கண்ணாடி காட்டும் கார் வீரனே!
காலை கதிரவனாய் தினம் நீ எழுவாய்
கரும்பாய்இ கற்கண்டாய் எம் இனத்தின்
களமாடிய காவியச் செல்வனே!
கடவுளாக வீர மைந்தனாக கண்டோம்
கனவா இது நனவா? என எழுந்தோம்







தேசத்தின் சிற்பிகள்

வடகடல் அலையோரம் பிறந்தாயே
தலைவா; நிலத்தின் குரலாய்
நிமிர்ந்தாயே தலைவா! துயருற்ற
மக்களின் வழிகாட்டும் விளக்காய்; இருள்
சூழ்ந்த பாதையில்
ஒளியாக நின்றாய்.

செங்காந்தள்
மலர்களும்
சுடர்களும் மிளிர;
வரலாற்றுப்
பக்கங்களில்
தியாகங்கள்
வளர; எரிந்திடும்
அகல்விளக்குச்
சுடரின் வழியே
என்றும் வாழ்கிறது
உன் வீரக் கனவே.

நீதியை வென்றெடுக்க இளைஞரின்
சக்தியை நீ அன்று உணர்த்திச்
சென்றாயே: "வாலிபர்களே ஒரு
தேசத்தின் சிற்பிகள் போராட்டத்தின்
உந்து சக்திகள். தூய மனமும்; துணிவும்;
இலட்சிய உறுதியும் கொண்ட இளைய
தலைமுறையால் மட்டுமே வரலாற்றை
மாற்றி அமைக்க முடியும்."

எழுபத்திரண்டாம் பிறந்தநாளின்
வேளையிலே; உன் வார்த்தைகள்
எதிரொலிக்கும் வையகத்திலே; அதே
இலட்சிய உறுதியோடு இளையோர்
நிமிர்வார்; நீ தந்த கனவை என்றும்
சுமப்பார்!

விமல் நவரத்தினம் ஐ.நா பிரதிநிதி;
ஏபிசி தமிழ் ஒலி ; மனித உரிமைகள்
செயல்பாட்டாளர்


Selva Vettyvel
Broker Of Record
416.568.4301
Broker Of Record
HomeLife/Future
Realty Inc. Brokerage
HOMELIFE HIGHER STANDARDS
15 years of Success
500+ Agents
VettyvelLaw

Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544



கடமையும் கண்டிப்பும் கண்டோம்
கல் மனதையும்
உருகிய காவியமே
நீவீர் வாழ்க.
தமிழீழத்திற்காய் தன் குடும்பத்தையே
தியாகம் செய்த எம் தலைவனே!
தமிழினத்தின் தலை விதியை
தனதாக்கிய தாய் போன்றவரே!
தமிழை மேடைகளில் முழங்காத
தனிப் பெரும் தலைவன் நீ!
தாய் போன்று வன்னிக்காட்டெங்கும்
தமிழ் தேசியத்திற்காய் வீரமகனாக
வலம் வந்த வள்ளலே வாழ்க!
வினை விதைத்தவன் வினை
அறுப்பான் – இன்று
வீரர்களின் வீரம் தான் எங்கே!
அறமும்இ வீரமும் தர்மமும் ஒரு நாள்
தலை நிமிர்ந்து பதில் அளிக்கும்.
முள்ளி வாய்க்கால் முடங்கியது வீரத்தின்
இந்த இடைவேளை
ஆயிரம் ஆயிரமாய் தமிழர்களை
கொன்று தான் ஒழித்தாலும் தமிழ்
அறம் வெல்லும் நாள் விரைவில்.
சங்க இலக்கியம் கண்ட
புறநானூற்று
புதுத் தலைவன் நீங்கள்
எங்கள் எதிரிகளையும்
துரோகிகளையும்
இனம் காண வைத்தீர்.

SEYON TAX

உங்கள் குடும்பத்திற்கும்
வியாபாரத்திற்கும்
நம்பிக்கையான வரி
நிறுவனம்.

- Personal Income Tax
- Corporate Income Tax
- US Income Tax
- Bookkeeping
- Payroll
- New Business Registrations

இன்றே உங்கள்
சந்திப்பை
முன்பதிவு செய்யுங்கள்.

(416) 438-3350
contact@seyontax.ca
2010 Ellesmere Road, Unit 11
Scarborough, ON M1H 3B1

செத்து மடியும்
தமிழினமே ஒருநாள்
நீ எம் தலைவன்
புகழ் தேட்பாய்!
மெத்தப் படித்த
மேதையல்ல ஆயினும்
மேதினியில் தமிழர்
மானம் காத்த
அதிஉத்தர புதல்வா
அகவை நாதனே
வாழ்க பல்லாண்டு!

மூலிகைத்தீவான்





Life's brighter under the sun

Easan Krishna-Pillai, CFP®

Bus: 416-557-7384
Res: 905-886-7399
easan.krishna@sunlife.com
www.sunlife.ca/easan.krishna

Sun Life® CFP®

Mutual funds distributed by Sun Life Financial Investment Services (Canada) Inc.

பொங்குமா கடலை
பொருட்டாக எண்ணி
படை நடத்தி
வாகை சூடினாய்
காவிய நாயகனே தமிழ்
வீரத்தின் பெருங்கடலே
நீவீர் வாழ்க பல்லாண்டு.
தலைவன் வருவானா?
வரமாட்டானா?
என்ற கேள்விக்கு
ஒரே பதில்
வந்தால் தலைவன்
வராவிட்டால் அவன்
தமிழ் வீரத்தின் கடவுள்
தமிழர்களின் வீரம்
புதிய புறநானூறாக
புவி எங்கும்
எழுதப்படுகின்றது. அகவை
காணும் அருட்
பெரும் ஜோதியே
அழிவில்லாததையா
உன் ஆயுள்
கல்லுக்குள் ஈரம்
போன்றதையா உந்தன்
கனிவுடைய பார்வை
கல்லாதவனுக்கும் வீரக்
கனி கொடுத்த
கருந்தேன்
இனிமையடா! கடைக்
கண் பார்வையால்
அப்பாவி தமிழனின்
கண்ணீர் துடைத்த
காவியமே!
காலனைக் கண்டால்
கூட கண்துயர்க்காது
களமாடிய கந்தவேளே
நீ தானையா
நிதம் நிதம் தலை
நிமிராமு வாழ்ந்த
எம் இனத்துக்காய்
புதிய புலிவரலாறு
எழுதிய புயல் கொண்ட
சூறாவளியாய்
புலி வீரம் படைத்த எம்
புதிய தலைவனே.



SIVA & JOY REAL ESTATE TEAM
SIVA Shanmuganathan Broker
JOY Selvanayagam Broker
#1 HOMELIFE TEAM IN ONTARIO
KNOWLEDGE EXPERIENCE SUCCESS
416-545-7482 www.futuregtahomes.com

வழிகாட்டும் ரீலாறு

மிதயா கானவி

பொங்கி வரும் தாயன்பு
அதை _விஞ்சி வரும்
பேரன்பு –எம் தலைவன்
எமக்கு தந்த_தமிழீழ
நிழலரசு

எண்ணில் அடங்கா
பற்பல கட்டமைப்பை
தமிழீழத்தில் கட்டிவைத்த
பெரும் தலைவன்

பணிந்து போகா
பக்குவம் சொன்னாய்
துணிந்து நிற்பதே
தமிழர் குணமென்று
செயலாய் காட்டிய
செந்தமிழ் புதல்வன்

உலகத் தமிழிரின்
உதிரத்தில் கலந்து
உயிராகி_உணர்வுமாகி
காலத்தை வென்றே
கரிகாலன் ஆனான்

பாரதி பாட்டில்
காட்டிய புதுமைப்
பெண்களை
நிஜத்தில் உருவாக்கி
காட்டியவன் _ எம் தலைவன்

எத்தனை துரோகங்களின்
பின்பும் எழுந்து வரும்
ஒற்றை சூரியனும் _எம்
தலைவன்

வாளின் கூர்மை
வல்லமையின் உயிர்
வல்வையின் வடிவாய்
வழிகாட்டும் வரலாறு

தமிழர்களுக்கெல்லாம் நிழல்
தரும் பெரும் விருட்சம்
யாரும் ஆழம் அறிந்திடா
நீர் ஊற்று

பண்டார வன்னியன்
குளக்கோட்டன் எல்லாளன்–பற்றி
புத்தகத்தில் படித்தோம்.
எம் கண்களால் நாம் கண்ட
பெரும் வரலாறு
எம் தேசியத்தலைவன்
பிரபாகரன் .



SOUTH ASIYAN SUPERMARKET
We offer the widest selection of both Asian & non Asian vegetables, fruits, daily products, seafoods, meats and ethnic goods
Paramesh: 647-470-8383
5402 Main Street, Unit 7, Stouffville, ON. L4A 1H3
Sajan: 647-866-5681
9909 Markham Rd, Unit 11&12, Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833
Stouffville எமது தமிழ் மக்கள் தங்கள் கருதி எமது கிளை திரக்கப்பட்டுள்ளது!
Kajan: 647-818-4693
Syan: 647-866-5681
5402 Main Street, Unit 7, Stouffville, ON. L4A 1H3
9909 Markham Rd, Unit 11&12, Markham, ON. L3P 3J3
Tel: 905-201-9833
SOUTH ASIYAN SUPERMARKET SEAFOOD
Seafood & Meat Shop
We've got all your healthy, delicious meat & seafood items

உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் ஏக தலைவனின் 72 வது அகவை விழா



சர்வ தேச பிரகடன ஒலியாக;
உலமெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின்
வேதமாக
மொழி; கலாச்சார; பண்பாட்டு
விழுமியங்களை தாங்கி நிற்கும் எங்கள்
தாய் நிலத்தை காப்பதற்கு; முப்படை அணி
வகுத்து சரித்திரத்தில் வரலாறு படைத்து;
தன் தாரக மந்திரத்தை தலைமுறைகளுக்கு
சொல்லித்தந்த தலைவனுக்கும்; அவர்
வழி தழுவிய மாவீரர்களுக்கும் வீர
வணக்கங்களை செலுத்தி அவர் பால்
திருப்புகழ் படைக்கிறேன்.
முத்தைத்தரு பத்தித் திருநக
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர
..... எனவோதும்
அருணகிரிநாதர் முருகனுக்காய்
அருளிய திருப்புகழ் தத்தகாரத்தில்;
தாளக்கட்டில்
எங்கள் மாவீரர் திருப்புகழ்
மலர்கிறது.

மாவீரர் திருப்புகழ்:

வங்கக் கடல் மாலை அணிதரு; (இ)
லங்கை எனும் முத்தின் மேலெழு
சங்கம் வளர் தங்கத் தமிழ்
நிலம்; தமிழீழம்
பொங்கும் தமிழ்; பொலியும் கலை
வளம்; தங்கும் அரண் ஆண்ட மன்னவர்
முட்டும் பகை வெட்டும்
புலிகளின் படையாக.

சந்தம் தனை சிந்தும் தமிழிசை;
உந்தும் தமிழீழத் தரை மிசை;
சொந்தம் இது முந்தை
மண்மடி; வரலாறு'
சத்திரியச் சித்தன் இவன்; தந்தை
இவன்; தலைவன் இவன்
விடுதலைக்காய் விண்ணளந்த
வேங்கைகளின் இரத்தமிவன்!.

கத்தும் கடல் சுற்றி; அலையறைந்
தெற்றுமிசை பற்றி வர;
சுட்டும் திசை எட்டும்
கடற்புலி கலம் காக்க
நத்தம் பல கொத்தும் பகையினை;
கொத்தி நிலம் காக்கும் மறவரின்;
சித்தங்களின் சொத்தாம்
தலைவனை; தொழுதேத்தி

நித்தம் பல எல்லைச்சமர்களை;
வித்தைகளின் வீரக் குவியலை
புத்தம் புது யுத்திக் களமதில்;
அரங்கேற்றி
முத்துத் தமிழ் முரசம் கொட்டிட;
முப்பத்து அகவை தொட்டிட;
தெற்குப் படை தெறித்தே
ஓட்டிய படை வீரம்..
எழு நாட்டுப்படை கூட்டிக் குவித்திட;
துரோகத்தின் வியூகம் துளைத்திட;
கொட்டும் வெடி மழையாய்
போர்த்திய புகை மூட்டம். தமிழ்
முற்றம் தனில் இரத்தம் இறைத்திட;
சுற்றம் அது சுக்காய் உடைந்திட
கொற்றம் அது;
வீரம் வரைந்திட்ட வரலாறு !

வித்தாய் உடல் மண்ணில் வீழ்ந்தது
விலையாய் தன் உயிரைத் தந்தது;
கொத்தாய் விழு மக்கள் கொலைகளை
கண்டே ஒரு தேசம் சிரித்தது'
உத்தமர் உரிமை கீதம் உரக்கவே
உலகை உலுக்கும் !
நித்திய விதிகள் எழுத;
சத்தியத்தின் முரசம் அதிரும் !

கவிஞர்.ஆறு. சிறீகாந்தன்.
மொன்றியல்.





விழித்திடு வாழ்வே

மனிதம் அழித்துப் புனிதம் இழந்து
தனிமை உயர்வில் இனிமை கண்டு
தேவைப் பொருட்கள் ஆசையில் தேக்கிச்
காசைக் கருத்தாய் வாஞ்சை கொண்டு
மாண்புற்று உழைத்துத் சுயநலம் புண்டு
உலோபி எனத் தனிப்பகை ஏற்று
மனிதம் மறந்தே புனிதம் சிதைத்துத்
தனியென வாழ்ந்து துணிவினில் ஏற்றுப்
பணிவிலாப் போதகம் அணிகலன் ஆக்கித்
தணிவிலா மோகம் தோணியாய்க் கொண்டு
ஏணியில் ஏறிப் பணிகள் பலவாற்றி
ஆணி யடித்த பாணியில் குருதி
நீழ்புலம் தன்னில் கீழ்நிலம் எல்லாம்
செம்மையே படியச் செங்கோல் நடாத்தி
உற்றவர் நற்றவர் உறவினில் பள்ளமும்
வேற்றவர் வினையில் கற்றவர் தகையில்
கருத்துமே இன்றி மன்றினில் முந்தி
மன்னனே ஆகச் சின்னவர் அங்கும்
முன்வரிசை ஆசனம் பல்வரிசை காட்டிச்
செல்லா மொழியில் பொல்லா உரைகள்
தொல்லையில் தந்து சொல்லை இழந்து
வில்லை வளைத்து நில்லாப் பாணம்
கொல்லவே விடுத்துத் தறுகணர் வாழ்கின்றார்।
மறுகணம் என்ன உருகணம் எங்கும்
உணராராக வாழ்கின்றார் அன்றோ?
பஞ்சமும் பட்டினி விஞ்சியே உலகை
அஞ்சியே விரட்டக் கொஞ்சமும் கருணை
தஞ்சமே இல்லா வஞ்சனைப் பேய்களாய்
நஞ்சினை உண்டு மஞ்சினை மீது
பஞ்சனை சாமரம் துஞ்சிட நிற்கும்
பாதகர் வாழ்வின் சாதகம் எங்கோ?
உணவுக்காய் உழைத்து ஊதியம் இன்றிச
சாதியம் பேசிச் சமாதியாய்ப் போகும்
விதியோ தொடரும்? என்றோ ஒருநாள்
ஒன்றாய் இணைந்து ஒதியே அழித்திட
மன்பதை வளமாய்த் துன்பதை இன்றி
வாழ்ந்திடும் நாளும் தன்பகை நீக்கித்
இன்பதை நாடித் துணையாய் இணைவிலே
அணைந்திட விடியும் வாழ்வும் மடியும்
மாய்வினை நொடியும் நோயும் குடியும்
கும்மாளமும் விடியும் வரையும்
கொண்டே வாழ்வை உறிஞ்சிடும் முதலைத்
தறிகெட்ட உலகு மடியினில் கனவும்
குடியினில் மிதமும் அடியினில் கனவும்
துடிப்பிலே நீங்கி விழந்திடும் வாழ்வு।
புலர்ந்திடும் பொழுது மலர்ந்திடும் உலகில்
சமதர்மச் சமுதாயம் உணர்ந்திடும் நாளும்
விரைந்திடத் தானே விழந்திடும் வாழ்வே।

32+ வருடங்கள்
www.tamilsguide.com
செந்தியின் தமிழன் வழிகாட்டி
Tamils' Guide Since 1996

416-615-4646

ஆணாகப் பிறந்து விட்டதாயாக நீ வாழ்வாய்!!

கந்தையா இராஜமனோகரன்
பிரித்தானியா

ஆணாகப் பிறந்தாய் நீ அறுபத்தைந்து ஆண்டின்
முன்
ஆண்டுநின்ற தமிழினம் அடையும் துன்பம் நீ
உணர்ந்தாய்
வீணாகத் தமிழீழம் விலைபேதகும் தலைவர்களால்
வீழ்ந்துவிட்டநிலை கண்டாய் விரைந்து எமது
இறைமை
தேய்மானம் அடைவதையும் தேர்தல் தரும்
சுகத்திற்காய்த்
தாய்மானம் விற்பதையும் தாங்காது நீ எழுந்தாய் !
தாயாக நீ ஆனாய் தமிழ்மானம் தமிழர் நிலம்
கனிமவளம்
தமைக் காக்கத் துணிந்திட்டாய் தன் மானம்
மேலென்றாய்
நோயாக எமைத் தாக்கி நொந்து தினம் ஊறு செய்யும்
நோயான சிங்களத்தின் நீதியில்லா ஆட்சி செய்யும்
தமிழினப் படுகொலைக்குத் தக்க பதில் ஆவர்
மொழியில்
தந்திட்டாய் அது உலகம் தந்திட்ட வழி என்றாய் !
ஓயாத அலையாக ஓய்வின்றி நீ உழைத்தாய்
உன்போல் உள்ளவரை உடனிணைந்துப் போர்
செய்தாய்
தமிழீழமும் ஒன்றே எம் தணியாத தாகம் என்றாய்
தாயகம் தேசியம் தன்னாட்சி எமைக்காக்கும்
என்றாய்
அமிழ்தான தமிழ் காக்க அதற்கான நிலம் காக்க
அமைத்திட்டாய் ஓர் அரசு அகிலத்தில் அது புதுமை !
தமிழாளும் நிலை ஒன்றே தமிழ் வாழும் நிலை
என்றாய்
தமிழாழத் தமிழர்களைத் தரணியிலே
ஒன்றிணைத்தாய் !
நாடொன்று உலகுள்ள யாவையுமே நம்மை
எதிர்த்து
நலமழித்தார் நம் வீரர் நலஞ்சேர்த்த தியாகத்தை
யாதொன்றும் அறியார்போல் நவீன பயங்கரமொன்று
வானோங்கி நின்ற உன்னை மௌனிக்கச்
செய்துவிட்டார் !
தேசியத் தலைவன் எனத் திகழ்வாய் பிரபாகரா !
ஆணாகப் பிறந்துவிட்ட தாயாக நீ வாழ்வாய் !!







அண்ணனுக்கு அகவை தின நல்வாழ்த்துக்கள்

கார்த்திகை மதம் பூத்திடும் வேளை
எம் காவிய நாயகர்
தம் தாள்களில் பணிந்து
போற்றிடும் இப்புனிதநாளில்
அகவை தினம் காணும் அன்புத்
தலைமகன் எங்கள் அண்ணாவிற்கு
அகவைதின நல்வாழ்த்துக்கள்
கூறும் நாள் இன்று

வல்லை மண் தந்த வல்ல
புலி வீரனிவன்
கல்லையும் கனிய வைக்கும்
கருணை உள்ளம் கொண்டவன்

அச்சம் என்பதை அரவணைக்க
மறுத்தவன்
அனுதினமும் போர்
அறம் காத்து நின்றவன்
தாய் மண்மீது தணியாத
காதல் கொண்டு
தமிழர்கள் நாம் தலைநிமிர
வேண்டும் என்றான்

நெஞ்சில் வஞ்சம் இல்லை
நேர்பட பேசும் எண்ணம்
கள்ளமில்லா சிரிப்பு
கனிவான மொழி பேச்சு

வீரத்தின் விளைநிலம்
விதையானவர்கள் உயிர் மூச்சு
மண் மீது கொண்ட பற்று
மொழி மீது கொண்ட காதல்
இனத்தின் விடிவை என்றும்
இதயத்தில் சுமந்திருந்தார்

சொல்வதை செய்வார்
செய்வதை சொல்வார்
சுட்டும் விரல் அசைவால்
பகை கொட்டம் அடக்கினார்

கடல் என்ன தரையென்ன
கரிகாலன் பெயர் சொன்னால்
காற்றும் கூட கை கூப்பி செல்லும்
ஆகாயம் கூட ஆரத்தழுவி நிக்கும்

போர்க்கண்ட பூமியிலும் எம் நாடு
செழிக்க வைத்தான்
பொழுது விடியும் வேளை-பல
நாடுகளின் தூக்கத்தை
தொலைக்க வைத்தான்
அனுராதாபுரம் சொல்லும் அவர்களின்
கதை என்னவென்று

அன்னை மண்ணிலே
யாரும் அனாதைகள் இல்லை என்றான்
அனைவரையும் அரவணைத்து
அண்ணன் ஒர் தாயுமானன்

முல்லை கடலையும்
முத்தான மணலாறு
வன்னிக்காடுகளும் உங்கள்
வரவை எண்ணி வாடுதண்ணா
செங்காந்தள் மலர்களும்
செண்பகப் பறவையும்
உந்தன் கரம் தழுவ தவிப்போடு
தேடுதண்ண
ஒவ்வொரு வருடமும்
உலகமே உங்கள் வார்த்தைக்காய்
காத்திருக்க
முள்ளிவாய்க்கால் முற்றம்
முடிவற்று போனதென்ன
நந்திக்கடலலையில் நடந்துதான்
என்ன அண்ணா

நம்மை விட நாடு பெரிதென்றீர்
நாம் நாட்டில் சிறியவர் என்று உரைத்தீர்
வரலாறு என்றும் வழிகாட்டும்
என்று சொன்னீர்
மரணித்தவர் அல்ல எம் மாவீரர்கள்
மனங்களுக்குள் என்றும்
வாழ்வார் என்றுரைத்தீர்

அண்ணன் பெயரைச் சொன்னால்
நம் நினைவுகள் மலர்கின்றது
காயங்கள் வலிக்கின்றது
கண்ணீர் சொரிகின்றது.

மேகங்கள் இருள்களால்
சூழ்ந்திருக்க மெதுவாய்
ஒளிவிடும் சூரியன்
மெல்ல மெல்ல மேல் எழும்பி
இருட்டை கிழித்துக் செல்லும்
இருள்கள் என்றும் நிலையானதில்லை
இதயத்தை நாம் உறுதியாக்கிக்
கொள்வோம்

ஈழத்து மைந்தன் போல்
இனி ஒருத்தர் பிறப்பதில்லை
என்றும் எம் இனத்தின்
தலைமகன்
வேலுப்பிள்ளை பார்வதியம்மா
பெற்றெடுத்த தவப்புதல்வன்
ஈழ அன்னையின் விடிவிக்காய்
இறுதி வரை போராடினார்
கொண்ட கொள்கையில்
குன்றிடா வீரமுடன்

72வது அகவை காணும்
எங்கள் அன்பு அண்ணனுக்கு
தமிழ் ஈழத் தலைவனுக்கு
எம் இனத்தின் தலைமகனுக்கு
தாயுமாய் தந்தையுமாகிய
தனயனுக்கு இதயத்தால்
வாழ்த்து சொல்கின்றோம்
இன்றும் என்றும் எம்மோடு
வாழவேண்டும்.

- வானதி
தீபன் மலராக்கக்குழுமம்

Thermo Care
Heating & Cooling Inc.
FURNACE | AIR CONDITIONER FURNACE CLEANING | HUMIDIFIERS AIR CLEANERS |
TANKLESS WATER HEATER RENTAL
We offer flexible Financing Options to specifically meet your budget. Its the fast, flexible and easy way to upgrade your home-comfort system.


BOOK NOW 416-825-9373 / 416-640-1174 WWW.THERMOCARE.CA 513 East Ave Scarborough Ontario

மாவீரர் நாள் உரைகளிலிருந்து...



1989

இன்று எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம்தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளே நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்.

1990

எமது தாய்நாடு விடுதலை பெற வேண்டும். எம்மைப் பிணைத் திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆக வேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர்பாய்ச்சி வளர்க்கிறோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

1991

நீண்ட விடுதலைப் பயணத்தில் சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்ட வாழ்வில் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும், பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சுதந்திர இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது. வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலிமையான ஆயுதம். இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து ஒலிக்கும் சுதந்திர கீதம் உறுதியின் உன்னதத் தைத்தான் பாடுகின்றது.

1992

எமது சுதந்திர இயக்கத்தின்தூண்களாய் நிற்கும் மாவீரர்களே! உங்கள் இரத்தத்தால் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது.உங்கள் இலட்சிய நெருப்பால் எங்கள் போராட்டம் புனிதம் பெறுகிறது. உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது. உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது. எங்கள் தேச சுதந்திரத்தின் சிற்பிகளாகிய உங்களே நாம் சிரந்தாழ்த்தி வணங்குகிறோம்

1993

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை. இந்தப் பாதை வழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது. இந்தப் பாதை மிகவும் கடினமானது. கற்களும் முட்களும் நிறைந்தது. விலங்குகளும் விச ஜந்துக்களும் நிறைந்தது. ஆயினும் நாம் இந்தப் பாதை வழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

1994

விடுதலைக்காக எமது தேசம் மதிப்பிட முடியாத பெருவிலையைக் கொடுத்திருக்கிறது. விடுதலைக்காக இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது. விடுதலைக்காக இந்தப் பூமி ரணகளமாக மாறியிருக்கிறது. விடுதலைக்காக எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதை யுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

1995

தமிழினம் சிதைந்து அழிந்து போகாமல் பாதுகாப்பாக வாழ்வதற்கு, போராடித்தான் வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தமிழ்த் தேசம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தேசியப் பணியிலிருந்து, வரலாற்றின் அழைப்பி லிருந்து தமிழ் இளம் பரம்பரை ஒதுங்கிக்கொள்ள முடியாது. இதில் காலம் தாழ்த்தாது எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் தமிழ் இளம் சந்ததி எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் எமது போராட்ட இலக்குகளே அடைந்து கொள்ள முடியும்.

1996

எமது இரத்தத்தை விலையாகக் கொடுத்து எமது இலட்சியத்திற்காக போராடுவோம். வெற்றிகளே ஊக்கமாக எடுத்து, பின்னடைவுகளேச் சவாலாக ஏற்று, நாம் தொடர்ந்து போராடுவோம். எவ்வித இன்னல்கள் வந்தாலும், எவ்வித துன்பங்கள் நேர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது நாம் தொடர்ந்து போராடுவோம். எமது மண்ணிலிருந்து சிங்களப் படைகளே விரட்டும் வரை, எமது தேசத்திற்கு விடுதலை கிட்டும் வரை, எமது மக்களுக்கு விடிவு ஏற்படும் வரை நாம் உறுதி தளராது துணிந்து போராடுவோம்.

1997

தேச விடுதலை என்பது எதிரியால் வழங்கப்படும் சலுகையல்ல. அது இரத்தம் சிந்தி, உயிர்விலைகொடுத்து, போராடிப் பெறவேண்டிய புனித உரிமை. உறுதியுடன் போராடும் தேசமே இறுதியில் வெற்றி பெறுமென்ற உண்மையை நெஞ்சில் நிறுத்தி, நாம் செயலுறுதியுடன் போராடுவோம். மனவலிமையின் நெருப்பாக எரிந்து எமது மண்ணின் விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர்களே நினைவு கூர்ந்து, நாம் இலட்சிய உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.

1998

மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள். காலத்தின் குறிப்பேட்டில் கால் பதித்துச் செல்பவர்கள். சாவு அவர்களேத் தீண்டுவதில்லை. அவர்கள் காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலமெல்லாம் நிலைத்திருப்பவர்கள். வரலாறு என்பது மனித விடுதலையை நோக்கி நகரும் ஒரு பேரியக்கம். சுதந்திரப் போராட்டங்களே இந்த வரலாற்றுப் பேரியக்கத்தின் சக்கரங்களேச் சுழற்றுகின்றன. எந்த ஒரு தேசம் - எந்த ஒரு மக்கள் சமூகம் சுதந்திரம் வேண்டிப் போராடுகிறதோ அங்குதான் வரலாற்றுப் புயல் மையம் கொள்கிறது.

1999

இன்று எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்து விட்டோம். எமது போராட்ட இலக்கு ஒளி மயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது. நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம். எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளேயும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம். நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக, ஒருமித்தெழுந்து, எமது பாதையில் இணைந்து செல்வோம். சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாகச் சுதந்திரம் எமக்காகக் காத்து நிற்கிறது.

2000

எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். அதுதான் எமது போராட்டத்தில் பாரியத் திருப்புமுனை களே ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவு கட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவு பெறச் செய்யும். காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும். சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக் கொண்ட மாவீரர்கள், சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்த தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம்.

89 ம் பக்கம் பார்க்க....



88 ம் பக்கத் தொடர்ச்சி...

2001

உண்மையான பயங்கரவாதிகளே இனங்கண்டு தண்டிக்கும் நோக்குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளே நாம் வரவேற்கிறோம். ஆயினும், அதேவேளே தீவிரவாத வெறியில் எழும் குருட்டுத்தனமான பயங்கரவாதத்திற்கும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன் னெடுக்கப்படும் சுதந்திரப் போராட்டங் களுக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்கும் வண்ணம் மேற்குலக சனநாயக நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு விரிவான, விளக்கமான வரையறையைக் கொடுப்பது அவசிய மாகும். உள்நாட்டில் இனக் கொலைப் பரிமாணத்திற் கொடுமைகளே இழைத்து வரும் அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்தை சர்வதேச உலகம் அலட்சியம் செய்ய முடியாது. இந்தப் பயங்கரவாத அடக்குமுறை அரசுகளே இனங்கண்டு தண்டிக்க உலகம் முன்வர வேண்டும்.

2002

எமது மக்கள், தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆட்சிபுரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியிற் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம். அமைதி வழியில், மென்முறை தழுவி, நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகிறோம். காலத்திற்கேற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.

2003

ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண் போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலக மனசாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திரத் தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டி ருக்கிறது.

2004

தமிழீழத்தின் தொன்மை வாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும், அங்கு வாழ்ந்து வரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடை பட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம் பெயர்ந்த பல்லாயிரக் கணக்கினர் தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்ப முடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். மக்களின் துயரும் துன்பமும் தொடர் கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவு கண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

2005

நாம் ஆயுத வன்முறையிற் காதல் கொண்ட போர்வெறியர் அல்லர் என்பதையும் சமாதான மென்முறையில் நாம் பற்றுறுதி கொண்டவர்கள் என்பதை யும் உலகுக்கு உணர்த்திக் காட்ட வேண்டிய தேவையும் எழுந்தது. எமது மாவீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், எமது மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த மகத்தான தியாகங்களேயும் நினைவு கூரும் இப்புனித நாளில், எத்தகைய இடர்களேயும் எத்தகையத் துன்பங்களேயும் எத்தகைய சவால்களேயும் எதிர்கொண்டு எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்போமென உறுதி பூணுவோமாக.

2006

எத்தனையோ கனவுகளோடு, எத்தனையோ கற்பனைகளோடு நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழருக்குச் சாவும் அழிவுமே பரிசாகக் கிடைத்திருக்கின்றன. சோதனைமேற் சோதனையாக,வேதனைமேல் வேதனையாகத் தாங்க முடியாத துயரச் சுமை தமிழர்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த வேதனையால் அழுதழுது கண்ணீர் தீர்ந்து இரத்தமே கண்ணீராக வருகின்ற சோகம் தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. சிங்கள அரசு தமிழரின் தாயகத்தைப் பிரதேசங்களாகப் பிரித்து, வலயங்களாக வகுத்து இராணுவ அரண்களே அமைத்து, முட்கம்பி வேலிகளால் விலங்கிட்டு, சோதனைச் சாவடிகளால் நிறைத்து, ஒரு பிரம்மாண்டமான மனித வதை முகாமாக மாற்றியிருக்கிறது.

2007

எமது மண்ணிலே, எமது காலத்திலே எமது கண்முன்னே வீரத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து, விடுதலையின் வித்தாக வீழ்ந்தவர்கள் எமது மாவீரர்கள். வீழ்ந்த மாவீரர் அனைவரும் மனித மலைகளாக, மனிதக் கோட்டைகளாகவே எமது மண்ணைக் காத்து நிற்கின்றனர். ஈடிணையற்ற ஈகங்கள் புரிந்து, அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் செய்து, எண்ணற்ற சாதனைகள் புரிந்து எமது தேசத்தின் வரலாற்றுச் சக்கரத்தை விடுதலையின் பாதையில் விரைவாக அசைத்து செல்பவர்கள் எமது மாவீரர்களே. தமிழனை அழிக்க நினைப்போர்க்கு அழிவு நிச்சயம் என்பதோடு, இந்த மாவீரர்கள் பற்றவைத்துள்ள விடுதலைத் தீயின் எரி நாக்குகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும் தப்பி விட முடியாது.

2008

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச் சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக் காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, முப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர். எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளிகொள்ளும் இந்த மண் எமக்கே யுரித்தான மண். எமக்கே சொந்தமான மண்.



PYRAMID GROUP WWW.PYRAMIDGROUP.COM
REAL ESTATE PROFESSIONALS
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
UTHAYAN SIVARAJAH
BROKER
416-301-5555
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
Independently Owned and Operated
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
OFFICE:416-282-3333 I FAX:416-272-3333
Broker of Record* I Broker** I Sales Representative*

தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாக அமைந்த முதலாவது தமிழீழ காவிய நாயகி 2ம் லெப்.மாலதி

10.10.1987 அன்று யாழ். கோப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலின்போது வீரச்சாவினைத் தழு விக் கொண்ட முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி அவர்கட்கு எமது வீரவணக்கங்களைச் செலுத்துகின்றோம்.

தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாகி வீழ்ந்த விடுதலைச்சுடர்.

எமது சமூகத்தில் வேரூன்றியிருந்த, பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணை விட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்துக்களை 2 ஆம் லெப். மாலதி 39 ஆண்டுகளுக்கு முன் பொய்யாக்கினாள்.

பெண்ணினால் எல்லாம் முடியும் என்று செய்து காட்டினாள். அந்நிய ஆக்கிரமிப்பில் எமது தேசம் துவண்டிருந்த போது வீறுகொண்டெழுந்தாள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதைப் பார்த்துக் கொதித்தாள்.

நாட்டின் விடுதலையோடு பெண்ணினத்தின் விடுதலையையும் கருத்தில் கொண்டு ஆயுதம் தூ க்கியவள், அந்த இலட்சியக் கனவோடே வீரச்சாவை தழுவிக்கொண்டாள். அன்று (10.10.1987) நடுராத்திரியில் தமிழ் பெண்களுக்கு அநீதி இழைத்த, வல்லாதிக்க இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள கோப்பாய் கிறேசர் வீதியில் காத்திருந்தாள்.

1987 அக்டோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 1 மணியளவில் இந்திய வல்லாதிக்க இராணுவம் மீது அவளது எம் 16 ரக துப்பாக்கியிலிருந்த குண்டுகள் சீறிப் பாய்ந்தன. அந்தத் தாக்குதல் 2 ஆம் லெப் மாலதியின் இறுதித் தாக்குதல்.

புலிகள் போராட்ட வரலாற்றில் முதல் பெண் போராளி 2 ஆம் லெப் மாலதி வித்தாகி வீழ்ந்தாள். அது தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வித்தாகவும் அமைந்தது. தமிழ்த் தேசிய உணர்வுகளை கட்டியெழுப்பி புதிய பெண்ணெழுச்சிக்கு வழிசமைப்பதே அவளது இலட்சியமாக அமைந்தது.

பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்தை ஆழமாக கொண்டே மனித சமூக அமைப்பு வேரூன்றிவிட்டது. வரலாற்றில் எழுந்த இலக்கியம், இதிகாசம், புராணம் என எதுவானாலும் பெண்ணின் புற அழகிற்கே முக்கியத்துவத்தை கொடுத்து பெண்ணின் பலத்தை வெளிக்கொணராமல் போயுள்ளன. பெண் எனப்பட்டவள் இயலாமையின் வடிவம் என்ற பிம்பத்தை தோற்றுவிப்பதில் சமூகத்தின் பிற்போக்குவாதிகள் வெற்றி கண்டுள்ளனர்.

வீட்டில் ஆண் குழந்தை பிறந்து விட்டால் மகிழ்ச்சி பெருமிதம். பெண் பிறந்து விட்டால் கவலை. ஏக்கப்பெருமூச்சு. இதுதான் இன்றுள்ள நிலை. இந்த அவலம் ஏன் நமக்கு ஏற்பட்டது? ஏன் எங்கள் மனங் களில் மாற்றம் வரவில்லை. ஒரு ஆணுக்குரிய ஆற்றல் அவ்வளவும் பெண்ணுக்குள்ளும் இருக்கிறதுதானே. அப்படியிரு ந்தும் சமூகத்தில் ஏன் இந்தப் பாகுபாடு? இந்தக் கேள்விகள் எல்லோர் மனங்களிலும் எழ வேண்டும். இதற்கு ஓர் முற்றுப் புள்ளி வைக்கும் திறன் புதிய தலைமுறைக்கு உண்டு. மனிதகுல வரலாற்றில் கிறிஸ் துவுக்கு 6000 (ஆறாயிரம்) ஆண்டுகளுக்கு முன் தாய் வழிச் சமூகமே இவ்வுலகில் ஆட்சி புரிந்தது. காடுகளில் குழந்தைகள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் தாயின் இராச்சியமே நடைபெற்றது. குழுவிற்கு தாய்தான் தலைமை தாங்கினாள். பெண்ணே பெரிதாக மதிக்கப்பட்டாள். தாய் என்ற சொல்லே மருவி தலைவி என்றாகி விட்டது என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

தன்னுடைய இனத்தைக்காக்கும் சக்தியாக பெண் விளங்கினாள். அவளின் சக்திக்கு கட்டுப்பட்டு பின்னால் செல்ல அவளது சமூகம் தயாராக விருந்தது அன்று. தனது இனத்தை பாதுகாக்கவும், அவர்களுக்கு உணவு கொடுக்கவும், தேவையானவற்றை தேடிக்கொடுக்கவும், தாயானவள் தன்னைப் பலி கொடுக்கவும் தயாராகவிருந்தாள் என்பது உயர்ந்த தியாகமாகும். அது அன்றே இருந்தது.

எதிரிகளிடமிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும் தனது இனத்தை காக்க தானே தலைமை தாங்கி வழிநடத்தினாள். பஞ்சாயத்து சபையை நிறுவி நிர்வாகம் செய்தாள். அன்றைய பெண்ணும் போர் முனைகளைச் சந்தித்தவள்தான். எதிரிக்குழுக்களை தாக்க, வேட்டையாட தானே ஆயுதங்களைக் கொண்டு முன்னே சென்று தாக்குவாள். அந்த தாய்க்குப் பின்னால் தான் அவளது குழுவைச் சேர்ந்த பெண்களும், ஆண்களும் வருவார்கள். சண்டை செய்வார்கள். சாவைச் சந்திப்பார்கள். வெற்றி பெறுவார்கள்.

மலைகளின் மீது மான்களைப் போன்று ஏறி எதிரியை விரட்டவும், தேனை எடுக்கவும் அந்தப் பெண்களால் முடிந்தது. தேன் குடிக்க கரடி ஏற முடியாத இடத்தில் கூட ஏறி நின்று தேன் குடிப்பாள் வீரமங்கை. கல்லினால் கூரிய ஆயுதம் செய்யவும், தோளினால் கருவி செய்யவும், பாத்திரம் செய்யவும், அழகிய குடிசை கட்டவும், நடனமாடவும் அந்தப் பெண்களால் முடியும்.

எலும்பாலும், கல்லாலும், மரத்தாலும், கொம்பாலும் செய்யப்பட்ட விதம் விதமான கூரிய ஆயுதங்களால் பெண்கள் சண்டை போட்டார்கள். தமக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய எதிரிகளை தேடி, தேடி தாக்கி அழித்தார்கள். கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் பெண்கள் சாம்ராஜ்யமாகவே இருந்தது. அக்காலத்தில்தான் சமூகம் முழுவதும் ஒரே குடும்பமாக விருந்தது என ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இத னை மெய்ப்பிப்பது போல அகழ்வாராய்வின்போது மிகப் பழமையான காலத்து வரலாற்று ஆவணங்களில் சக்தி வழிபாட்டு முறை இருந்து வந்துள்ளதை சுட்டுகின்றனர். உலகில் சரிபாதியினர் பெண்கள், எமது சமூகத்திலே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் போராட்டத்தில் பங்கு பெறாது எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமை பெறாது என்பது தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்தாகும். அடக்கு முறையின் வடிவமாக பெண்ணை ஆளாக்கியுள்ள நமது சமூகம் அந்தத் தடையை அறுக்க முன்வரவில்லை. பெண் ஒடுக்குமுறைக் கருத்துகள் இன்னமும் பலமான நிலையில் பேசப்படுகின்றன. அவ்வாறான சமூக கட்டமைப்பு எழுதப்படாத வாக்கியமாக நிலைத்து நிற்கிறது.

சாதி வேறுபாடுகள், மூட நம்பிக்கைகள் புரையோடிப் போயிருந்த சூழ் நிலையில் பெண்கள் அதிலே புதையுண்டு போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தமிழரது



வாழ்வில் அடிமைத்தனம் என்பது பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. அந்நியப் படையெடுப்புகளால் தமிழரது கலாசாரம் பண்பாடு என்பன சிதையுண்டு போயுள்ளன.

தமிழர் வாழ்வில் பெண் மதிக்கப்பட்டு அவளுக்குரிய கௌரவம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ஆரியப் படைகளுக்கு தமிழன் அஞ்சியோடவில்லை. ஆனால் வஞ்சகமாக ஆன்மீக தத்துவங்களை புகுத்தி ஆரியசக்கரவர்த்திகள் தமிழ் நாடுகளை அடிபணிய வைத்தார்கள். அதுதான் தமிழ்மக்களின் தமிழ்ப் பெண்களின் வாழ்வுக்கு அஸ்தமனமாகவிருந்தது. அவர்கள் போட்ட விதைதான் பெண்ணடிமை, சீதனம், சாதி முறை, குலதொழில் என்பன. இன்று கூட இந்தியாவில் பெண் கள்படும் இழிவுநிலை ஏராளம். இந்திய ஆதிக்கம் ஈழத்திலும் நிலை கொண்டதனால் ஈழப்பெண்களும் இதுபோன்ற அடக்கு முறைக்கு ஆளாகினர்.

அன்று எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துகள் பலமாக நிலவின. எமது சமூகமே சாதி, சமய வேறுபாடுகளால் ஆழமாகப் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக நிலச்சுவாந்தர் முறைமையையும், சாதியக் கட்டமைப்புக்களையும் இறுக்கமாகப் பின்னிப்பிணைத்து அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில் எமது சமூகக் கட்டமைப்பு எழுதப்பட்டிருந்தது. அது சுய சிந்தனைக்கு வரம்புகளை விதித்தது. பெண்கள் தாம் அடக்கு முறைக்குள் வாழ்கிறோம் என்பதை உணரவிடாது தடுத் தது. அத்தோடு எதிரியின் இன அழிப்புப் போர் என்று மில்லாதவாறு எம்மண்ணில் தீவிரமடைந்திருந்தது. அந் நிலையில் அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலைக்கு வழிசமைப்பது பற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதினூடாகப் படிப்படியாக சமூகமாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும், தேச விடுதலையையும் சாத்தியமாக்கலாம்.

இவ்வாறுதான் எமது போராட்டத்தில் பெண் புலிகள் தோற்றம் பெற்று எதிரியின் படைப்பலத்தைச் சிதைத்து யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடத்தி விவாதங்களை புரிந்து கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத்தவற்றைவிட எமது பெண்புலிகள் மிக்க குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்குப் பெற்றுக் கொடுத்த உரிமைகளும், சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள். சமூகக் கருத்துலகில் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும், பெண்ணும் சமமான ஆற்றல்களுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற் கூற்றியல் நிபுணர்களது, கூற்றுக்கு பெண் புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்ந்தவர்கள் என பெண் போராளிகள் பற்றி தலைவர் பிரபாகரன் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.

உலகில் பெண்கள் மோசமான அடக்கு முறைக்கு ஆளாகி வந்துள்ளனர். இற்றைக்கு சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் தாய்வழிச் சமூக அமைப்பு சிறப்புற்று விளங்கியது. அதன் பின், கால வெள்ளத்தில் தாய் வழி சமூக அமைப்பு முறைகள் பல்வேறு காரணிகளால் சிதைந்து போய் ஆணாதிக்க முறைமைகள் தோற்றம் பெற்றன. இன்றும் உலகில் பெண்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். மேற்காசியா, ஆபிரிக்கா மற்றும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை தீவிரமாக பின்பற்றும் நாடுகளில் பெண்களின் உரிமைகள் அடி யோடு மறுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் ஆரியர்களின் மனுதர்ம சாஸ்திரம் பெண்களுக்கு எதிராக சமூக நீதிகளை அதிகரிக்க செய்திருக்கின்றன. சாதியம், அடிமைத்தனம் போன்றவற்றை ஆழப்பதித்திருக்கின்றன. வரதட்சனை, இரத்த உறவு திருமணம், கொடுமை, சித்திரவதை, உயிர் நீப்பு என பெண்களுக்கிழைக்கப்படும் கொடுமைகள் ஏராளம்.

எகிப்து நாட்டை தாலமி அயோலேட்டஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய மகள் கிளியோபாட்ரா! தாலமி இறப்பதற்கு முன் அவள் தம்பி ஏழாவது தாலமி, சகோதரி கிளியோபாட்ராவை திருமணம் செய்து கொண்டு நாட்டை ஆளவேண்டுமென அறிவித்தார். அதன்படி இருவருக்கும் திருமணம் நடந்தது. அப்போது கிளியோபாட்ராவுக்கு வயது 16. தாலமிக்கு வயது 10. இது ஒரு செய்தியல்ல. 20 நூ ற்றாண்டுகளுக்கு முன்னரும் இப்படி பெண்ணியல் பற்றி பெண் ணுரிமை பற்றி, யாரும் வாய் திறக்கவில்லை. அப்போதும் பெண் அடிமைதான். இப்போதும் பெண் அடிமைதான் எகிப்து நாட்டில். அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் 2 ஆம் லெப்டினன் மாலதியின் நினைவு நாளும் ஆகும். அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தமிழீழப் பெண்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறனர். தீரத்தினாலும், தியாகத்தினாலும், விவேகத்தினாலும் உலகப் பெண்களுக்கு வழிகாட்டியாக உயர்ந்து நிற்கின்றனர் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர்.



களம் வீழ்ந்த முதல் வேங்கை! மாவீரர் தினம் இதுதான்!

ஒரு நாள் அதிகலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டை சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து. இராணுவத்தினால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது.

அவ்வேளையில் ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டு மதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான்.

அவனை நோக்கி சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கிவேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலும் கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல் தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத்துப்பாக்கியை ஒப்படைத்துவிட்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். வயிற்றில் ஏற்ப்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியமையினால் இரும்பை ஒத்த அவன் கட்டுடல் சோர்வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டமாகையால், அப்போது அங்கு போதிய மருத்துவவசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனைத் தோழர்கள் விசைப் படகுகள் மூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத் தாண்டி தமிழகம் செல்ல ஒருவராமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும் வரை அவன் நினைவு தப்பவில்லை இருந்த போதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்து, அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்ச்சிகள் வெற்றியளிக்கவில்லை. தலைவரும் தோழர்களும் கண்கலங்கி நிற்க (27.11.1982 இல்) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற் களப்பலியாகும் பெருமையை இணைத்துக் கொள்கின்றான். அவன்தான் லெப்டினன் சங்கர் (சுரேஸ்).

சிங்கள ஆயுதப்படையினர் வலைவிரித்துத் தேடிவந்த செ. சத்தியநாதன் வடமராட்சியைச் சேர்ந்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கர் அதே இடத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரச்சாவடைந்த கப்டன் பண்டிதரின் (ரவீந்திரன்) பள்ளித் தோழன். (லெப்டினன் சங்கர் இறந்து இரண்டு ஆண்டுகளின் பின் இராணுவ முற்றுகையின் போது அச்சுவேலியில் ஏற்ப்பட்ட நேரடி மோதலில் கப்டன் பண்டிதர் வீரச்சாவு அடைந்தார்)

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லாவீரன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன், ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடி குண்டுகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடுபடுவான்.

அரச படைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் அவன் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறுங்கூட ஒரு கெரில்லாவீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆப்த்தை ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானல் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. இருபத்தொரு வயதில் அவன் சாதித்வை தமிழீழப் போராட்ட வராலாற்றுக்குச் சொந்தமானவை.

இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிடமுடியும் என்று பாசிசசர்வாதிகாரி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது நெல்லியடியில் அரசபடைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லத்தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போரட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது.

ஜீப்சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப்வண்டியை நிறுத்தவைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒருகையில் வெளியே இழுத்து எறிந்தவாறு மறு எதிரியை நோக்கி குண்டுகளைத் தீர்த்த யாவகம் சங்கருக்கே உரியது. இருப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது நெல்லியடியில் அரசபடையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகல விரித்து பக்கவாட்டில் நின்ற அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப் பட்டிருந்த நிலையில் மாடிக்கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாக தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான் ஆனால் உயிரை கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்து விடமுடியும்? ஜி2 சகிதம் படுத்துக்கிடந்த சங்கர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் ஒரு பகுதிக்கு பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் இப்பகுதி அரசபடைகளை ஸ்த்தம்பிக்கச் செய்ததும்.

பொன்னலைக் குண்டுவெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தான். ஐக்கிய தேசியக் கட்சி (ஜெயவர்த்தனாக் கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்கு சங்கரே பொறுப்புவகித்தான்.

எந்த விதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப் பட்ட ஆற்றலுக்கு சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலை அடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றுக்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடன் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தேளிவாக விளக்குவான். தனக்கு தெரியாத வி யங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனிமதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேதான் வென்றெடுக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப்போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது.

விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக்



களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூகவிரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்ப வாதிகளையும் அவன் வெறுத்தான் அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

இயக்கத் தலைவர் பிரபாகரனின் அரசியல் வழிகாட்டலிலும் இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்த்தவன்.

பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப் போகும் தமிழீழம் தன்நலமற்ற - தூய்மை மிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப்பித்தர்களும், துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

நன்றி - தமிழீழம் சஞ்சிகை


Veerar Takeout & Catering
5790 Sheppard Avenue, #3, Scarborough, ON M1B 5J6
416-299-4541 / 647-293-6634
472 Taunton Rd, W Unit 10, Oshawa, ON, L1L 0N8
905-743-1111

துயிலுமில்லப் பாடல் உருவான வரலாறு

1980களின் தொடக்க பகுதியில் காசியானந்தன் அவர்களின் பாடல்களை தேனிசை செல்லப்பா பாடி முதல் ஒலிப்பேழை வெளிவந்தது. 1985 காலப்பகுதியில் தமிழ்நாட்டில் அருச்சுனா "இவர் பின்பு கடலில் வீரச்சாவடைந்தார் இசைப்பாடலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவரது வீரச்சாவால் அது தடைப்பட்டது. திலிபனின் உண்ணாநோன்பின் போது வசதிகள் ஏதுமற்ற நிலையில் காசிஆனந்தன் அவர்களின் இரு பாடல்களும், ஒரு பாடல் திலீபன் அழைப்பது சாவையா" புதுவை அண்ணரின் இரு பாடல்களும் ஒரு பாடல் வாச மலர் ஒன்று வாடிக்கிடக்கின்றது. யாழில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

திருமலைச் சந்திரனுடன் பலர் இப்பாடலை பாடினார் இந்தியப் படை இங்கு நிலைகொண்டிருந்த வேளை தமிழ்நாட்டில் புதுவை அண்ணரின் முயற்சியால் புயல் கால இராகங்கள் அந்நியர் வந்து புகல் என்ன சூதி, களத்தில் கேட்கும் கானங்கள், பாசறைப் பாடல்கள், என்பன ஒலிப்பேழைகளாக வெளிவந்தன. 1990 இல் யாழ்ப்பாணத்தில் இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற ஒலிப்பேழை வெளியீட்டுடன் பல ஒலிப்பேழைகள் வெளிவரத் தொடங்கின வேங்கைகளின் விடுதலை வேதங்கள் என்ற ஒலிப்பேழைக்காக புதுவை அண்ணரால் எழுதப்பட்ட பாடலை தலைவர் மாமூவீரர் நாளுக்குரிய பாலடலாகக் வேண்டுமென விரும்பியதையடுத்து அந்தப் பாட்டில் சில வரிகள் கூடுதலாக சேர்க்கப்பட்டு மாவீரர் துயிலமில்லத்தில் பாடுவதற்கான பாடலாக வெளிவந்தது.

கண்ணனின் இசையில் வர்ண இராமேஸ்வரனுடன் பலர் அதை பாடினர். அதில் முதல் நள்ளிரா வேளையில் நெய் விளக்கேற்றியே ஏன்றிருந்த வரி பின்பு மாவீரர் நினைவொலி நேரம் மாற்றப்பட்டபோது வல்லமை தந்துமே என மாற்றப்பட்டது. இந்த மாற்றப்பட்ட வடிவமே இன்று நாம் கேட்கும் பாடலாகும். மாவீரர்களை புதைக்கத் தொடங்கிய பின்னே மாவீரர் மயானம் சுடுகாடு, மாவீரர் துயிலுமில்லமென அழைக்கப்பட்டது. 1990 இல் மாமூவீரர் விபரப் பட்டியலை கூராக்கும் பணி தலைவரால் என்னிடம் தரப்பட்டது.

மாவீரர் படங்கள் அவர்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டன. மாவீரர் விபரங்கள் அப்போது ஈழமுரசு செய்தித் தாளில் வெளியிடப்பட்டு எம்மிடம் இருந்து. தவறுகள் திருத்தப்பட்டன. இராதயன் அண்ணரை தமிழ்நாட்டிற்கு அனுப்பி அங்கு மாவீரர் படங்களை தாங்கிய மாவீரர் ஏடு ஒன்று அச்சிடப்பட்டது. தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரை அதிலிருந்த தகவல் தவறுகள் காரணமாக அதனை வெளியிட வேண்டாமென தலைவர் கூறியதையடுத்து அது வெளியிடப்படவில்லை.

1990 இல் மாவீரர் நாளுக்காக தலைவர் முதன்முதலில் உரை நிகழ்த்தினார். அன்றிலிருந்து அவரது மாவீரர் நாள் உரை தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளை அவர்களது எண்ணங்களை வெளிப்படுத்து ஒரு கொள்கை உரையாக எல்லோராலும் பார்க்கப்படுகின்றது.

அந்த உரைக்கு உலகெங்கும் மிகுந்த மதிப்பு தரப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் கண்ணன் வர்ண இராமேஸ்வரன் குழுவினர் மாவீரர் மேடையில் நின்று முதன்முதலில் மாவீரர் நினைவுகூரற் பாடலை பாட கோட்டையிலிருந்து சிங்களப்படை ஓடியது. அப்போதைய யாழ் மாவட்ட தளபதியாக இருந்த கேணல். பானு அவர்களால் அங்கிருந்து அதன் தாங்கியுடனையே கோண்டுவரப்பட்ட மணி மூலம் நினைவொலி எழுப்பப்பட அங்கு கூடியிருந்தோர் எல்லோரும் வீரம் பெருமிதம் கவலை என பல்வேறு உணர்வுகளுன் கண்ணீர் மல்க மாவீரரை நினைவு



கூர்ந்த அந்த நாளை மீண்டும் நினைவு கூர்கையில் மெய் சிலிர்க்கின்றது.

– திரு. யோகரட்ணம் யோகி
(2007 ஆம் ஆண்டு)

மாவீரர் நாள் அன்றும் விடுதலைப் புலிகளின் போராளிகளின் இறுதிச் சடங்களின் அன்றும் ஒலிக்கப்படும் பாடல் மாவீரர் நாள் பாடல் ஆகும். புதுவை இரத்தினதுரை இந்தப் பாடலை இயற்றியிருந்தார். வர்ண ராமேஸ்வரன் இப்பாடலைப் பாடியிருந்தார்.

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள்
மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!

இங்கு கூவிடும் எங்களின் குரல்மொழி
கேட்குதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி
கேட்குதா? குழியினுள் வாழ்பவரே!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்!

எங்கே! எங்கே! ஒருதரம்
விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில்
வந்துமே வணங்குகின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில்
வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை
வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை
வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில்
வந்துமே வணங்குகின்றோம்!

சாவரும்போதிலும் தணலிடைவேகிலும்
சந்ததி தூங்காது!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும்
சந்ததி தூங்காது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே
திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே
திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி
உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி
உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம்!
உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம்!
அதை நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்!
அதை நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்!

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர சென்றிடுவோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர சென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம்
உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம்
உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே
திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே
திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி
உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி
உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி
கேட்குதா? குழியினுள் வாழ்பவரே!
தாயகக்கனவுடன் சாவினைத்
தழுவிய சந்தனப்பேழைகளே!



தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ ! செங்காந்தள் மலர் தமிழ்நாட்டின் மாநில மலர் !!

(எத்தகைய அடக்குமுறை வந்தபோதும்; ஆலயங்களில் மணி ஒலிப்பதோ; தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் மாவீரர் நாளில் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழரின் இதய அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும்; இயற்கையாக; கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை)

பண்டைய தமிழ் மன்னர்கள் தமது இராட்சியங்களுக்கு தனித்தனியான மலர்களைக் கொண்டிருந்தனர் என்பது வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

கார்த்திகைப் பூவின் வரலாற்றுப் பாரம்பரியம்:

சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்ததுள்ளன. மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் களமுனைகளுக்கு செல்லும் போது அணிந்து சென்றதாக வரலாறு கூறுகின்றன.

இங்கே காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இவ்வரலாற்றுச் சான்றாதாரத்தினூடாக கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெட்டத்தெளிவாகின்றது.

தேசத்தோடு மாத்திரமின்றி தேசத்தில் வாழுகின்ற மக்களின் நம்பிக்கைளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் செங்காந்தள் மலர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புமிக்க மலர்தான் தமிழ்நாட்டின் மாநில மலராகப் போற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் மாநில மலராக செங்காந்தள் :

செங்காந்தள், காந்தள் அல்லது கார்த்திகைப் பூ என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் காணப்படும் இந்த மலர் தமிழ்நாட்டின் மாநில மலராகத் திகழ்வது மிகவும் சிறப்புக்குரியது.

இம் மலர் `Gloriosa Superba` என்ற தாவரவியல் பெயரைக்கொண்டது. செங்காந்தள் மலர்ச் செடியின் அனைத்துப் பாகங்களிலும் "கோல்ச்சிசின்" (Colchicine) என்ற அல்கலாய்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கார்த்திகை மாதத்தில் பூக்கும் இந்தப்பூ வேலிகளில் மட்டுமல்ல சாலையோரங்கள் மற்றும் காடுகளிலும் படர்ந்து வளரக்கூடியது. குறிப்பாக, மலைகள் மற்றும் சரிவுகளில் காணப்படும் இந்த மலர் அழகிய விரல்களைப் போலவும், சுடர்கள்போலவும் காட்சியளிக்கும்.

காந்தள் மலராக மலர்ச் செடியின் வேர்ப்பகுதியை "கண்வலிக்கிழங்கு", "கலப்பைக்கிழங்கு", "வெண்தோன்றிக்கிழங்கு", "கார்த்திகைக்கிழங்கு" என்றும் அழைக்கிறார்கள்.

செங்காந்தள் செடியின் கிழங்கிலிருந்துதான் புதிய கொடிகள் கிளைவிட்டுப் படரும். செடி வகையான இது, கொடிபோல் படரக்கூடியது. இலைகளின் நுனி நீண்டும் சுருண்டும் பற்றுக்கம்பிகள் போல அருகில் உள்ள மரம், செடி போன்றவற்றைப் பற்றிப் பிடித்து வளரக்கூடியது. இதன் இலைகளுக்கு காம்பு கிடையாது. ஆனால், கிழங்கின் ஒவ்வொரு பகுதியின் முனையிலும் புதிய கணு முளைக்கும்.

இதன் பூக்கள் பெரியவை. முதலில் பச்சை நிறத்துடன் பூக்கும் இந்த மலர் பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு என நிறம் மாறிக்கொண்டே போகும்.

கார்த்திகை பூ தமிழரை காத்தவர்களின் பூ !

தீ கொழுந்துவிட்டு எரிவதுபோலக் காணப்படும் செங்காந்தள் பூவை "அக்னிசலம்" என்றும் சொல்வார்கள். கிழங்கு கலப்பையைப்போன்ற தோற்றத்துடன் காணப்படுவதால், அதை "கலப்பை" என்றும், "இலாங்கிலி" என்றும் சொல்வார்கள். இலைகளின் நுனி சுருண்டு காணப்படுவதால், "தலைச்சுருளி" என்பார்கள். மற்ற தாவரங்களைப் பற்றிக்கொண்டு வளர்வதால் "பற்றி" என்றும் சொல்வார்கள். வளைந்து பற்றிக்கொள்வதால், "கோடல்", "கோடை" என்று அழைக்கப்படுகிறது.கார்த்திகை மாதத்தில் பூ பூப்பதால் "கார்த்திகைப்பூ" எனப்படுகிறது. மழைக்காலத்தில் வனப்புடன் காணப்படுவதால், "தோன்றி" என்றும் நாட்டு மருத்துவத்தில் "வெண்தோண்டி" என்று அழைப்பார்கள். இதன் பூக்களின் நிறம் வேறுபடுவதால், "வெண்காந்தள்" என்றும், "செங்காந்தள்" என்றும் வர்ணிக்கிறார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் காணப்படுவதை, "ஆண்காந்தள்" என்றும் கணுக்கள் இல்லாததை "பெண்காந்தள்" என்றும் சொல்வார்கள்.

தேனீக்களும் வட்டமிடும் காந்தள் மலர் :

செங்காந்தள் மலரில் தேன் அதிகமாகக் காணப்படுவதால், எப்போதும் வண்டுகளும் தேனீக்களும் வட்டமிட்டுக்கொண்டிருக்குமாம். பொதுவாக, மலர்கள் அனைத்துமே பூத்து உதிரக்கூடியவை.

ஆனால், செங்காந்தள் மலர் மட்டும் வாடினாலும் உதிர்வதில்லை. இந்தப் பூவை உற்றுப்பார்த்தால், கண்வலி வரும் என்று சொல்கிறார்கள், அதனால் இதை "கண்வலிப்பூ" என்றும் கிராப்புறங்களில் அழைக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புவாய்ந்த வரலாறுகளைக் கொண்ட செங்காந்தள் மலர் புற்றுநோய்க்கு நல்லதொரு மருந்தாகச் செயல்படுகிறது என்று கூறப்படுகிறது. குறிப்பாக, புற்றுநோய் பரவாமல் தடுக்கும் கால்சிசின் (colchicine) செங்காந்தளின் விதை, கிழங்கில் அதிகமாக உள்ளது.

இதற்காக செங்காந்தள் செடியின் விதையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த மருந்து நிறுவனங்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றன எனவும் அறியப்படுகிறது.

மருந்தாக பயன்படும் செங்காந்தள் :

செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. பாம்பு கடித்தவர்கள் இந்தச் செடியின் வேருடன் குப்பைமேனி வேர், நீலி வேர் சேர்த்து அரைத்து, அரை நெல்லிக்காய் அளவு தினமும் காலை, மாலை என மூன்று நாள்கள் சாப்பிட்டுவந்தால், விஷம் இறங்கும் என தமிழ்நாட்டில் கிராமிய வைத்தியர்கள் நம்புகின்றனர்.

உப்பில்லா பத்தியம் அவசியம். சிறிய பாம்புகள் கடித்தாலோ, வண்டு கடித்தாலோ இதன் இலையை அரைத்துப் பூசி சீயக்காய் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கிவிடும்.

செங்காந்தள் வேரில் செய்யப்பட்ட தைலத்தை வாரம் ஒருநாள் தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் எலி, வண்டு, பூரான், சாரைப்பாம்பு கடிபட்டவர்களுக்கு விஷத்தன்மை குறைந்துவிடும்.

மேலும், இந்தத் தைலத்தை மேகநோய், சொறி, சிரங்கு, படை உள்ளவர்கள் குளித்து வந்தால் நோய் குணமாகும்.

இத்தகைய சூழலில் புளி, புகைப்பிடித்தல், போதைப்பொருள் பயன்படுத்தக் கூடாது.

வாதநோய், மூட்டுவலி, தொழுநோயைக் குணப்படுத்துவதுடன் பால்வினை நோய், வெண்குஷ்டம் போன்றவற்றைக் குணப்படுத்தவும் இது பயன்படுகிறது. பிரசவவலியைத் தூண்டும் நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது.

மகத்தான மருத்துவப் பலன்கள் :

பிரசவத்தின்போது நஞ்சுக்கொடி இறங்காமல் அவதிப்படும் பெண்களுக்கு பச்சை செங்காந்தள் வேர்க்கிழங்கை அரைத்து தொப்புள், அடிவயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற இடங்களில் தடவுவார்கள். உடனடியாக நஞ்சுக்கொடி இறங்கிவிட பச்சைச் செங்காந்தள் கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி அது மூழ்குமளவு வேப்பெண்ணெய் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். கிழங்குகள் மேலே மிதக்கும்போது அடுப்பிலிருந்து இறக்கி, ஆறவைத்து, பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். பாரிசவாயு, தலைவலி, கழுத்து நரம்புவலி போன்றவற்றுக்கு இந்த எண்ணெயைத் தேய்த்துவந்தால், குணம் கிடைக்கும். மேலும் தலைப்பேன்களை ஒழிக்கும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருந்துகளில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ:

தமிழர் தேசியத்தின், தமிழர் தேசத்தின் அடையாளச் சின்னமாக பூக்கள் விளங்குவது யாவரும் அறிந்ததே. பூக்கள் அந்தந்த தேசியத்தினதும், தேசத்தினதும் வரலாற்று சமூக பண்பாட்டின் பால் பின்னிப்பிணைந்து உள்ளதை நாம் காணலாம். ஒவ்வொரு நாட்டினதும் தொடர்புபட்டுள்ள மலர்கள் தேசியப் பூக்களாக பிரகடனப்படுத்தப்பட்டு அந்தந்த தேசியங்களால் கௌரவிக்கப்படுவதும், தேசியக்கொடிக்கு சமமாக பேணப்படுவதும், தொன்றுதொட்டு நிலவிவரும் மரபு. தமிழர்களின் தேசியப்பூவாக, தமிழீழத்தின் தேசியப் பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழீழத் தேசியத் நாளாம் மாவீரர் நாள் வருகின்ற நாட்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்ஙனம் பரவி முகிழ் விடுவதுமான காந்தாள் (கார்த்திகை) பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேச நம்பிக்கைளின் பூக்கள்:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை துணைப்படை வீரர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழ புரட்சி இயக்க (ஈரோஸ்) உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு பல ஈழப்போராட்ட போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப்படுத்தும் நாள் மாவீரர் நாளாகும்.

இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் நினைவுகூரும் நாள் போன்று மற்ற நாடுகளில் போர்வீரர்களை நினைவு கூரும் நாட்களோடு தமிழீழ மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் அனேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்வர். ஈழப் போரில் இறந்த போராளிகளை நினைவுகூருவது, மதிப்பது தமது அடிப்படைக் கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகக் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். முதன் முதலில் மாவீரர் நாளாக நவம்பர் 27 விடுதலைப் புலிகளால் 1989 அறிவிக்கப்பட்டது.

தமிழீழ மாவீரர் நாளாக இந்நாளைத் தேர்ந்தெடுத்ததற்கு தமிழீழ போராட்ட வரலாற்றுடன் இணைந்த ஒரு முக்கிய காரணம் உள்ளது. இந்த நாளில்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது போராளியான சங்கர் (செ. சத்தியநாதன்) வீரமரணம் அடைந்தார்.

மாவீரர் நாள் அடையாளமாக கார்த்திகை பூ:

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக, வேறு எந்தப்பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் கார்த்திகைப்பூ சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகை பூ சொல்லும் செய்தியை, அது கமழும் தேசிய வாசத்தை நுகர்வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை. இலங்கைத் தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம்தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது. இயற்கை, அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராவும் நிரூபித்தே வந்துள்ளது. கார்த்திகைப்பூவும் கார்த்திகைக் கனவுகளும் ஈழத்தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் வாழ்வில் மறக்கமுடியாத நாளாக கார்திகை 27 ம் திகதி காணப்படுகிறது. மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தம் உயிர்களை ஆயுதமாக்கி போராடி மடிந்த மாவீரர்களை நினைவேந்தும் நாள் மாவீரர் நாளுக்கென்றே பிறந்தாற்போல் இந்தமாதத்திலேயே கார்திகைப்பூக்களும் மலரும்.

மாவீரர்களை அஞ்சலிக்கும பூ:

தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிகப்பு மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் கார்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும். 2009 இல் போர் மௌனித்த பின்னரும், எத்தகைய அடக்குமுறை வந்தபோதும் - மாவீரர் நாளில் ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழர்களின் அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் இயற்கை கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை.



தேசியத் தலைவரின் அகவை விழாவுக்கு தொடர்ந்து அனுசரணை வழங்கும் வாணிப நிறுவனங்கள்

NEW SPICELAND SUPER MARKET

NEW SPICELAND

5790 Sheppard Ave E,
Unit# 4, 5, & 6
Scarborough
(416) 292-9769

6065 Steeles E,
Unit# 13, 14, 15,16 & 17
Toronto
(416) 335-3030

1801 Harwood Ave N,
Unit# 21,22,23 & 24
Ajax
(905) 426-1114



QUALITY BREAD BAKERY Est. 1996

1970 Ellesmere Road
Units 12 & 13,
Scarborough,
ON. M1H 2W1

Follow us on Twitter @QBBakery



Life Insurance?

It's for those you LOVE the most!

- RESP/RRSP
- Disability
- Investments for Children

Excellent Rates!

ஆயுட்காப்புறுதி

Call: 416-704-8074

Insurance Ajay
Are you Insured?



SUN CITY SUPER MARKET

OPEN 7 DAYS 8.30AM-10.30PM

துரித பணமாற்றுச் சேவை
அனைத்து நாடுகளுக்கும் ஒரே
நாள் சேவையில்

Tel: 416-724-6666

SUN CITY PLAZA, 2761 Markham Rd, Unit 18
Scarborough ON M1X 1M4

நந்தா Nantha FAMILY RESTAURANT

Vegan Nantha	Nantha Caters	Nantha Caters	Nantha Caters	Nantha Caters	Nantha Express
Brimley & Steeles	Middlefield & Steeles	Simcoe & King	Warden & Finch	Kipling & Steeles	Taunton & Salem
2900 Markham Rd FC 6-9, Scarborough, ON M1X 0C8	2002 Middlefield Rd Unit 2, Markham, ON L3S 1Y5	204 Simcoe St N, Oshawa, ON L1G 4W9	605 Church St N N a 1, Ajax, ON L1T 0B8	5010 Steeles Ave W, Etobicoke, ON L4L 0M2	472 Taunton Rd, W Unit 10, Oshawa, ON L1L 0N8

Phone: (416) 626-8421 | Email: nanthacatersinc@gmail.com

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

Secure Your future with Commercial Investment

Commercial Real Estate Investment

Shean Sinnarajah
Real Estate Broker
Dir: 416.882.0118
1265 Morningside Ave,Suite 203, Toronto ON.M1B 3V9
Tel:416.287.2222 Fax:416.282.4488



SINDI FINANCIAL SERVICES INC.

துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்

416.288.0277

792 Kennedy Rd., Suite 204
(Eglinton & Kennedy)

Ideal Auto Tech

416 752 LUBE 5823

idealautotech.com

90 DAYS NO PAYMENT NO INTEREST NO CREDIT CHECK

TIRE SALE!

PRICE MATCH GUARANTEED ON ALL MAJOR BRAND TIRES

1815 Lawrence Ave, East, Unit 2, Scarborough

Taste & Flavour of Thamil Eelam

BABU Take-Out & Catering SINCE 1993

9590 McCowan Rd, Markham, ON L3P 8M1, Canada
Phone: (416) 298-2228

4800 Sheppard Ave E, Scarborough, ON M1S 4N5, Canada
Phone: (416) 298-2228

VIJAYA JEWELLERY

Traditional Gold Jewellery • Thali Kodi • Necklaces • Earrings • Bangles

Crafted with Tradition • Treasured for Generations

437-833-3197 | 3341 Markham Rd, Unit 127, Scarborough, ON M1X 0A5 | vijayajewellery.ca

தலை மகனே தலைவா வாழ்க!

இடை மாறா கொள்கையுடன்
தடம் மாறா உறுதியுடன்
முப்பது ஆண்டுகள் தமிழீழ தேசமதில்
முப்படை கட்டி ஆட்சி செய்த ஆளுமை
எம் தலைவர்.

முப்பாட்டன் ஆசியுடன்
முடிசூடா மன்னனாக
மூவுலகம் போற்ற வாழ்ந்த முழு நிலவு
எம் அண்ணன்

தமிழினத்தின் காவலரே!
தமிழ் தேசத்தின் ஒளி விளக்கே!

உலகம் வியக்கும் உரிமைப்
போரை
உணர்வுடன் வழிகாட்டிய
உத்தமரே!

நீதி நெறி தவறாத நித்தமும் தமிழையே
நினைந்து
தர்ம யுத்தம் செய்த மகன் தன் தேசம்
விட்டுச் சென்றதெங்கே?

எழுபத்திரண்டாவது
அகவை நாளில்
ஏங்கி இங்கே தேடுகின்றோம்

இருந்தும்....
வாழ்த்துகிறேன் அகவை நாளில்
தலைமகனே தலைவா வாழ்க!
தளராது நின்ற புலியே வாழ்க!

ஒப்பற்ற தலைவா வாழ்க!
ஓங்கும் புகழ் இறைவா வாழ்க!
தமிழ் மக்களின்
உன்னதரே! - தமிழ்
உலகு உள்ளவரை உயிர் வாழும்
உம் தியாகம்.

- ஆக்கம்: யாழ் கலைமகள்



உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் ஏக தலைவனின் 72 வது அகவை விழா 26–11 – 2026

சர்வ தேச பிரகடன ஒலியாக, உலமெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் வேதமாக மொழி, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை தாங்கி நிற்கும் எங்கள் தாய் நிலத்தை காப்பதற்கு, முப்படை அணி வகுத்து சரித்திரத்தில் வரலாறு படைத்து, தன் தாரக மந்திரத்தை தலைமுறைகளுக்கு சொல்லித்தந்த தலைவனுக்கும், அவர் வழி தழுவிய மாவீரர்களுக்கும் வீர வணக்கங்களை செலுத்தி அவர் பால் திருப்புகழ் படைக்கிறேன்.

முத்தைத்தரு பத்தித் திருநக அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ..... எனவோதும்
அருணகிரிநாதர் முருகனுக்காய் அருளிய திருப்புகழ் தத்தகாரத்தில், தாளக்கட்டில்
எங்கள் மாவீரர் திருப்புகழ் மலர்கிறது.

மாவீரர் திருப்புகழ்:

வங்கக் கடல் மாலை அணிதரு, (இ)லங்கை எனும் முத்தின் மேலெழு
சங்கம் வளர் தங்கத் தமிழ் நிலம், தமிழீழம்
பொங்கும் தமிழ், பொலியும் கலை வளம், தங்கும் அரண் ஆண்ட
மன்னவர
முட்டும் பகை வெட்டும் புலிகளின் படையாக.

சந்தம் தனை சிந்தும் தமிழிசை, உந்தும் தமிழீழத் தரை மிசை,
சொந்தம் இது முந்தை மண்மடி, வரலாறு
சத்திரியச் சித்தன் இவன், தந்தை இவன், தலைவன் இவன
விடுதலைக்காய் விண்ணளந்த வேங்கைகளின் இரத்தமிவன்!.

கத்தும் கடல் சுற்றி, அலையறைந் தெற்றுமிசை பற்றி வர,
சுட்டும் திசை எட்டும் கடற்புலி கலம் காக்க
நத்தம் பல கொத்தும் பகையினை, கொத்தி நிலம் காக்கும் மறவரின்,
சித்தங்களின் சொத்தாம் தலைவனை, தொழுதேத்தி

நித்தம் பல எல்லைச்சமர்களை, வித்தைகளின் வீரக் குவியலை
புத்தம் புது யுத்திக் களமதில், அரங்கேற்றி
முத்துத் தமிழ் முரசம் கொட்டிட, முப்பத்து அகவை தொட்டிட,
தெற்குப் படை தெறித்தே ஓட்டிய படை வீரம்..

எழு நாட்டுப்படை கூட்டிக் குவித்திட, துரோகத்தின் வியூகம் துளைத்திட,
கொட்டும் வெடி மழையாய் போர்த்திய புகை மூட்டம். தமிழ்
முற்றம் தனில் இரத்தம் இறைத்திட, சுற்றம் அது சுக்காய் உடைந்திட
கொற்றம் அது, வீரம் வரைந்திட்ட வரலாறு !

வித்தாய் உடல் மண்ணில் வீழ்ந்தது விலையாய் தன் உயிரைத் தந்தது,
கொத்தாய் விழு மக்கள் கொலைகளை கண்டே ஒரு தேசம் சிரித்தது
உத்தமர் உரிமை கீதம் உரக்கவே உலகை உலுக்கும் !
நித்திய விதிகள் எழுத, சத்தியத்தின் முரசம் அதிரும் !

கவிஞர்.ஆறு. சிறீகாந்தன். மொன்றியல்.



வீடு வாங்க, விற்க அழையுங்கள்

Vaheesan
Jeyaveerasingam
Broker

Direct: +1 (416) 276-9999
3-1286 Kennedy Rd, Toronto, ON, M1P 2L5
Tel:416-270-1111, Fax: 416-270-7000

#1 RE/MAX

PDXN
PREMIER DIAGNOSTIC NETWORK

PREMIER DIAGNOSTIC NETWORK

ALL-IN-ONE MEDICAL DIAGNOSTIC SERVICES

RADIOLOGY
X-RAY
GENERAL ULTRASOUND
VASCULAR ULTRASOUND
BONE DENSITY (DXA)

CARDIOLOGY
ECHOCARDIOGRAM
HOLTER MONITOR
STRESS ECG
24-HOUR BLOOD PRESSURE MONITORING (ABPM)

RESPIROLOGY
PULMONARY FUNCTION TESTS (PFTs)

OHIP-COVERED SERVICES | FAST APPOINTMENTS | ACCURATE RESULTS | COMPASSIONATE CARE | SERVING THE GREATER TORONTO AREA | SCARBOROUGH

pdxn.net | 647 494 9909 | ALL GREATER TORONTO SCARBOROUGH



